உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20
பக்கங்கள்: 28

சுடர் 33 கதிர் 54 தை 06ஆம் நாள் வெள்ளிக்கிழமை 19 ஜனவரி 2018 வள்ளுவர் ஆண்டு 2049

காய்ச்சலால் குழந்தை உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஜன.19
காய்ச்சல் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இரண்டரை >> 08

வீணையைத் திருத்த டக்ளஸ் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன.19
ஈ.பி.டி.பி. தனது கட்சிச் சின்னமான வீணைச் சின்னத்தில் திருத்தம் செய்வதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.
அந்தக் கட்சியின் பொதுச் செயலரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவருக்கு இது தொடர்பாகக் கடிதம் அனுப்பியுள்ளார்.
கட்சியின் சின்னமான வீணை போதிய பிரகாசம் இன்றி உள்ளது என்றும், அதிலுள்ள நிறங்களை மாற்றிப் புதுப் பொலிவாக்க வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.
"தேர்தல் வாக்குச் சீட்டில் கட்சியின் சின்னம் பிரகாசமாக இல்லை. அதை மாற்றவே தேர் >> 06

நாவற்குழியில் கைதானோர் காணாமற்போனமை

பொறுப்பாகவிருந்த இராணுவ அதிகாரியை மன்றில் தோன்ற உத்தரவு

யாழ். மேல் நீதிமன்றில் நேற்றுப் பிறப்பிக்கப்பட்டது

யாழ்ப்பாணம், ஜன.19
1996ஆம் ஆண்டு நாவற்குழியில் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான ஆள்கொணர்வு மனு மீதான விசாரணையில் முதலாம் எதிரியாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் துமிந்த கெப்பிடிபெலான வழக்கின் அடுத்த தவணையில் மன்றில் முற்பட வேண்டும் என்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்று பணித்தது.
இராணுவ அதிகாரி மேஜர் ஜெனரல் துமிந்த கெப்பிடிபெலான சார்பில் சட்டமா அதிபர் முன்னிலையாக முடியுமா?, முடியாதா? தொடர்பில் மனுதாரர் மற்றும் சட்டமா அதிபர் தமது நியாயங்களை எழுத்து மூலம் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் யாழ். மேல் நீதிமன்று உத்தரவிட்டது.
1996ஆம் ஆண்டு நாவற்குழியில் கைது செய் >> 06

சோதனையை இறுக்கமாக்க பொலிஸார் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜன.19
பொலிஸாரின் வீதிச் சோதனை நடவடிக்கைகள் யாழ்ப்பாணத்தில் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன. அண்மைய நாள்களில் >> 25

யாழ். பல்கலை மாணவர்கள் கைகலப்பு

யாழ்ப்பாணம், ஜன. 19
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 3ஆம்4ஆம்வருட கலைப்பீட மாணவர்கள் நேற்று இரவும் கைகலப்பில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. >> 25

பிணைமுறி மோசடியில் ஐ.தே.கவினர் தொடர்பிருந்தால் ஆராய்வதற்காகச் சிறப்புக் குழு

தலைமை அமைச்சர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 19
பிணைமுறி மோசடி அறிக்கையில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் யார் மீதாவது குற்றம் சுமத்தப்பட்டிருந்தால் அது தொடர்பில் ஆராய திலக் மாரப்பன தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. அந்தக் குழுவின் பரிந்துரைக்கு அமையச் செயற்படுவோம். ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அர்ப்பணிப் >> 06

அழுத்தம் கொடுக்கும் பரப்புரை வேண்டாம்

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த அறிவுறுத்து

கொழும்பு, ஜன. 19
மக்களுக்கு அழுத்தம் கொடுக்கும் அரசியல் பரப்புரைகளை முன்னெடுக்க வேண்டாம். அதிகாரத்தில் உள்ளவர்களும் தேர்தல் சட்டத்தை மீறாது செயற்பட வேண்டும்.
இவ்வாறு தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய தெரிவித்தார். >> 06

see more news in newuthayan.com

நூதன முறையில் நகைகளை 'அபேஸ்' செய்தோர் சிக்கினர்

தாயும், மகனும் விளக்கமறியலில்

யாழ்ப்பாணம், ஜன.19
யாழ்ப்பாணத்தில் நூதனமான முறையில் தங்க நகை மோசடியில் ஈடுபட்ட தாயும், மகனும் மட்டக்களப்பில் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். 45 வயதுடைய பெண் ஒருவரும் >> 06

சு.கவைத் தூக்கியெறிவதற்கு ஐ.தே.க. - கூட்டு எதிரணி சதி

அமரவீர குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 19
ஊழல், மோசடிகளை மூடிமறைக்க கூட்டு அரசிலிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியை வெளியேற்றிவிட்டு ஐக்கிய தேசியக் >> 06

கொல்லை செய்யப்படுவதற்கு முதல் நாள் லசந்த வீட்டை நோட்டமிட்ட ராணுவ புலனாய்வாளர்கள்

நீதிமன்றில் குற்றப்புலனாய்வு பிரிவு நேற்று அறிக்கை

>> 25

காரில் சென்றோரை மறித்து நகைகள், பணம் கொள்ளை

எழுதுமட்டுவாழில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன.19
காரில் வந்தவர்களை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் வழிமறித்து 7 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள், பணத்தை கொள்ளையிட்டுச் சென்றனர். இந்தச் சம்பவம் எழுதுமட்டுவாழில் நேற்று மாலை நடந்துள்ளது.
காத்தான்குடியில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு ஒரு குடும்பம் காரில் சுற்றுலா வந்தது. அவர்கள் ஏ9 வீதியில் பயணித்துக் கொண்டிருந்தபோது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் காரின் முன்பாக வந்து வழிமறித்தனர். காரில் இருந்தவர்களை அச்சுறுத்தி பணம் மற்றும் நகைகளைக் கொள்ளையடித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. >> 25

ஒளிப்படங்களால் பெண்களை மிரட்டியவர் கைது

கொழும்பு, ஜன.19
பெண்களின் ஒளிப்படங்களை ஆபாசமாக உருமாற்றி சமூக வலைத்தளங்களில் பதிவேற்றியும், படங்களைப் பதிவேற்றுவேன் என்று அச்சுறுத்தியும் கப்பம் பெற்ற, பாலியல் தொல்லை கொடுத்த குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவுக்குக் கிடைத்த இணையக் குற்ற முறைப்பாட்டுக்கு அமை >> 25

இலங்கையின் வாக்குறுதிகள் இயக்கமற்றே இருக்கின்றன

பன்னாட்டு மனித உரிமைகள் கண்காணிப்பகம் விமர்சனம்

கொழும்பு, ஜன. 19
ஐ.நா. மனித உரிமைகள் சபையில் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் என்பன தொடர்பாக இலங்கை வழங்கிய வாக்குறுதி இயக்கமற்ற (ஸ்தம்பித) நிலையிலேயே உள்ளது. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகப் பன்னாட்டுச் சாசனத்துக்கு இணங்க தயாரிக்கப்பட்ட சட்டம் திகதியிடப்படாமல் உள்ளமை ஏற்புடையதல்ல.
இவ்வாறு பன்னாட்டு மனித உரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.
உலக நாடுகள் தொடர்பாக மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் 2018 ஆம் ஆண் >> 06

கொழும்பு கொதிநிலையால் பன்னாடுகளுக்கும் பதற்றம்

ஐ.தே.க. மற்றும் சு.கவை சமரசப்படுத்த முயற்சி

கொழும்பு, ஜன.19
ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களுக்கிடையே மூண்டுள்ள சொற்போர்களால் கூட்டரசின் ஆயுள் கேள் >> 06

தேசியம் பாதுகாப்பதே எங்களது இலட்சியம்

மட்டக்களப்பு,ஜன.19

தமிழ் தேசியம் பாதுகாக்கப்பட வேண்டும், நிலங்கள் பாதுகாக்கப்பட வேண்டும், பொருளாதாரம் பாதுகாக்கப் பட வேண்டும். என்பதே எமது நோக்கமும் இலட்சிய மாகும். ஒற்றுமையாக செயற்பட்டாலே நிரந்தரத் தீர்வைப் பெற முடியும். இவ்வாறு ஜனநாயக போராளி கள் கட்சியின் மட்டக்களப்பு அம்பாறை இணைப்பாளர் க.பிரபாகரன் தெரிவித்தார்.

கொக்கட்டிச்சோலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் அலுவலகம் கடந்த செவ்வாய்க்கிழமை திறக்கப்பட்டது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது நிலத்தைக் காக்க வேண்டும், தேசத்தைக் காப்பாற்ற வேண்டும், மக் களைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக அன்றி லிருந்து இன்றுவரை அரசின் கால்களில் விழாமல் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றது.

போராடியதன் அர்த்தம், வலி, சுமைகளை சுமந்த, மக்க ளிடம் வருவதாகவிருந்தால், நாங்கள் நேர்வழியில் வரவேண்டும். தூய்மையான உள்ளத்தோடு வரவேண் டுமென்பதற்காகதான், தமிழ்தேசிய கூட்டமைப்பின் வழியில் வருகின்றோம்-என்றார். (ந.ரி4)

தாயகத்தை கூறுபோட்டவர்கள் நீலிக்கண்ணீர் வடிக்கிறார்கள்

நாடாளுமன்ற உறுப்பினர் நிர்மலநாதன் தெரிவிப்பு

வவுனியா,ஜன.19

தமிழ் மக்களின் தாயகமான வடகிழக்கு மாகாணங்களை சட்டரீதியாக பிரிப்பதற்கு காரணமாக இருந்த ஜே.வி. பி கட்சியினர் தமிழ் மக்களுக்காக யாழ்ப்பாணத்தில் நீலிக்கண்ணீர் வடிக்கின்றனர். இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார். வவுனியா நெளுக்குளத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதேச சபை தேர்தல் அலுவலகம் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இது வரை தமிழ் மக்களுக்கு என்ன செய் தது என்று ஜே.வி.பி கட்சியினர் யாழ்ப்பாணத்தில் கேள்வி கேட்கிறார் கள். அதனால்தான் தாங்கள் யாழ்ப் பாணத்தில் தேர்தலில் போட்டியிடுவ தாகவும் சொல்கிறார்கள்.

இதுவரை காலமும் தமிழ் மக்க ளுக்கு உரிமைகள் கிடைக்ககூடா தென கங்கணம் கட்டி நின்றவர்கள் இப்போது தமிழ் மக்களின் உரிமை கள் பற்றிப் பேசுவது நகைப்பிற்கு ரியது.

தற்போது இடைக்கால அறிக்கை வெளிவந்துள்ளது. அதில் உள்ள விட யங்கள் அனைத்தும் சரியென நாங் கள் சொல்லவில்லை. தற்பொது பரீட்சை எழுதியுள்ளோம். அதன் பெறுபேறு வருவதற்கு முதல் அதைப் பற்றி விமர்சிப்பது நியாயமாகாது. எனவே தமிழ் மக்கள் சிந்தித்து வாக் களிக்க வேண்டும் - என்றார். (ந.ரி4)

ஒற்றுமையாலேயே தலைநிமிர முடியும்

சுயேச்சைக் குழு வேட்பாளர் ஆயுஷ்மன் தெரிவிப்பு

மட்டக்களப்பு,ஜன.19

உரிமை மறுக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட இனம் ஒற்றுமையி னால் மாத்திரமே தலைநிமிர முடியும் என்பதை எம்மின அரசியல் தலைவர்கள் உணரும் வரை சுயேச்சை வழி யில் ஒன்றிணைய வேண்டும். இவ்வாறு போரதீவுப்பற்று பிரதேச சபையில் சுயேச்சைக் குழு வேட்பாளர் வி.ஆயுஷ் மன் தெரிவித்தார்:

பழுகாமத்தில் அண்மையில் இடம் பெற்ற மக்கள் சந்திப் பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

ஈழத்தமிழர் பிரச்சினையில் சர்வதேசமும் ஆளும்வர்க்க மும் இதர கட்சிகளும் அக்கறையின்றி செயற்பட்டு வரு வது கண்கூடு. மக்களின் தேவைகள், அபிலாசைகளைப் புரிந்து நடந்தவர்கள் யாரும் இல்லை.

மக்களோடு மக்களாக நின்று பணியாற்றுவதற்கு,மக்க ளின் தேவையறிந்து வளங்களை பெற்றுக்கொடுப்பதற்கு, பிறர் தவறவிட்ட விடயங்களை தவறாமல் நிறைவேற்று வதற்கு துடிப்பான இளைஞர், யுவதிகளுக்கு இடம்கொ டுக்க வேண்டும் - என்றார். (ந.ரி4)

பாசாங்கு வார்த்தைகளை நம்பி ஏமாற வேண்டாம்

த.தே.கூ வேட்பாளர் தனராஜ் தெரிவிப்பு

திருகோணமலை,ஜன.19

எமது தமிழினம் நீண்டகால போர் இடம்பெயர்வு போன்ற காரணங்களால் கடந்த காலங்களில் எமது கிராம உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதில் பின்னடைவைக் கண்டிருந்தார்கள். உள்ளூராட்சி மன்றங்க ளின் ஊடாக எமது கிராமத்தை நாமே அபிவிருத்தி செய்ய முடியும். இவ்வாறு திருகோணமலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கீழ் போட்டியிடும் வேட்பாளர் து.தனராஜ் தெரிவித்தார். திருகோணமலையில் அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

இன்று காலத்தின் தேவை கருதி நாங்கள் உதிரிகளின் ஏமாற்று, பாசாங்கு வார்த்தைகளுக்கு ஏமாந்து எமது வாக்கைச் சிதற விடாமல் எமது தலைமையின் கரத்தை பலப்படுத்த வேண்டிய தருணத்தில் நாங்கள் நிற்கின்றோம். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் இவ்வளவு காலமும் சாதாரண தேர்தல்களாக பார்க்கப்பட்டாலும் இம்முறை தென்னிலங்கையில் இதனை அடுத்த தேர்தலுக்கான கணக்கெடுப்பதாக பேரினவாதக் கட்சிகள் பார்க்கின்றன - என்றார். (ந.ரி4)

ஊழல் மோசடிக்கு இடமில்லை

வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் தெரிவிப்பு

வவுனியா,ஜன.19

மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி எமது பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதுதான் எமது இலக்காகும். ஊழல் மோசடிகளுக்கு சிறிதேனும் இடமில்லை இவ்வாறு வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழு இணைத் தலைவருமான காதர் மஸ்தான் தெரிவித்தார்.

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபைக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கீழ் போட்டியிடும் வேட்பாளர்களை ஆதரித்து அண்மையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

தேர்தலின் பின் எனது அலுவலகமான வவுனியா 'ரம்யா ஹவுஸ்' இருபத்திநான்கு மணி நேரமும் மக்கள் பணிக்காக திறக்கப்பட்டிருக்கும். அங்கே நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மக்கள் பணிக்காக காத்திருக்கும் நிலையை உருவாக்குவோம். ஆகையால் தேர்தல் நேரங்களில் மாத்திரம் உங்கள் வீட்டுக்கு வரும் அரசியல்வாதிகளையிட்டு நீங்கள் மிகக்கவனமாக இருக்க வேண்டும் - என்றார்.

இதில் கந்தபுரம் பிரதேசத்துக்கான சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் அலுவலகமும் திறக்கப்பட்டது.

சிறுபான்மை அமைச்சர்களுக்கு ரணில் அரசு தேவைப்படுகிறது

நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவிப்பு

அரசை விமர்சிக்கும் சிறுபான்மை அமைச்சர் கள் மகிந்த அரசின் அமைச்சர்களாகவும் இருந் தனர். ஆனால் இன்று அவர்களின் அபிவி ருத்திப் பணிகளையும் அமைச்சு வேலைக ளையும் செய்ய ரணில் விக்கிரமசிங்கவின் அரசு தேவைப்படுகிறது. இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சி திருகோணமலை மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரி வித்தார்.

கிண்ணியா பிரதேச சபை தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளர் களை ஆதரித்து நேற்று முன்தினம் நடை பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

இப்பொழுதுதான் மெதுவாக நாட்டை அபிவி ருத்திப் பாதையின்பால் இட்டுச்செல்கிறோம். இவ்வாறிருக்க மத்திய அரசில் அரசின் பங் காளிக் கட்சிகளாக உள்ள சிறுபான்மை கட்சி யினர் ஐக்கிய தேசிய கட்சி என்ன அபிவிருத்தி செய்துள்ளது என கேட்பது வேடிக்கையாக உள்ளது.

சிறுபான்மைக் கட்சியினர் கடந்த காலங்க ளில் ஆட்சியில் இருந்த போது கிண்ணியா பால்தத்தில் உள்ள மின்விளக்குகளைக் கூட ஒளிரச்செய்யமுடியவில்லை. மீண்டும் உங் கள் முன்வந்து அதிகாரத்தைக் கேட்கிறார்கள். - என்றார். (ந-ரி4)

சட்ட மா அதிபர் உள்ளிட்ட மூவருக்கு அழைப்பாணை

கொழும்பு,ஜன.19

முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ் உள்ளிட்ட மூன்று பேருக்கு மார்ச் மாதம் 8 ஆம் திகதி நீதிமன்றில் முன்னிலையாகுமாறு கொழும்பு பிரதான நீதவானால் நேற்று அழைப்பாணை விடுக்கப்பட்டது.

இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஊழல் மோசடி தொடர்பிலேயே இந்த அழைப்பாணை பிறப்பிக்கப்பட் டுள்ளது.

முன்னாள் பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், தற்போதைய மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஏ.எச்.எம்.பீ. நவாஸ் மின்சாரத் துறை அமைச்சின் முன் னாள் செயலாளர் எம்.பி. பெர்ணந்து ஆகிய மூவருக்கே இவ்வாறு அழைப் பாணை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தனியார் மின்சார நிறுவ னத்துக்குக் காணி ஒன்றைக் கொள்வ னவு செய்வதில் மோசடி இடம்பெற்றுள் ளதாக இரண்டு விசாரணைக்குழுக் களின் அறிக்கைகளில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் பொறுப்புக் கூற வேண்டியவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்காதிருந்தமை ஊடாக, அப்போதைய சட்ட மா அதிப ராக இருந்த மொஹான் பீரிஸ் மற்றும் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் அப்போதைய சொலிசிட்டர் ஜெனர லாக இருந்த ஏ.எச்.எம்.பீ. நவாஸ் ஆகியோரால் இலஞ்ச, ஊழல் சட்டத் தின் கீழ் தவறிழைக்கப்பட்டிருப்பதாக, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவால் தாக்கல் செய்யப்பட்டுள்ள குற்றப்பத்திரிகையில் சுட்டிக்காட்டப்பட் டுள்ளது. அதன்படி குறித்த வழக்கில்

பிரதிவாதிகளுக்கு எதிரான குற்றப் பத்திரிகையில் 20 சாட்சியாளர்களும், 19 சாட்சிப் பொருட்களும் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு வால் பெயரிடப்பட்டுள்ளதாகத் தெரி விக்கப்பட்டது. (ரி2)

குடை சாய்ந்து பாரவூர்தி விபத்து

திருகோணமலை, ஜ.19

திருகோணமலை கிண்ணியா பகுதியில் பாரவூர்தி ஒன்று குடை சாய்ந்து விபத்துக்குள்ளானது.

கிண்ணியா நடுவூற்று கங்கைக்கு செல்லும் வீதியில் நேற்று முன்தினம் அதிகாலை இடம்பெற்றது.

கிண்ணியா தீனோரி,கண்டல் காட்டுப்பகுதியில் இருந்து பொலன்னறுவைக்கு நெல் மூடைகளை ஏற்றிச் சென்ற பாரவூர்தியே பள்ளத்துக்குள்வீழ்ந்துவிபத்துக்குள்ளானது.

இதில் எவருக்கும் உயிர்ச்சேதங்கள் ஏற்படவில்லை. சம் பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ற-40)

மண் மேடு சரிந்து இருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜன.19

பலாங்கொடை, பின்னவல பகுதியில் பாடசாலையொன் றில் பணிபுரிபுரிந்த ஊழியர்கள் இருவர் மீது மண் மேடு இடிந்து விழுந்ததில் உயிரிழந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். பாடசாலை கட்டட அமைப்புப் பணிகள் இடம்பெற்ற போதே இந்த சம்பவம் நடந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. உயிரிழந்தவர்கள் 30 மற்றும் 34 வயதுடையவர் என்றும், இருவரும் பின்னவல பகுதியில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற் கொண்டுள்ளனர். (ற)

மாலபேயை ரத்துச்செய்யக்கோரி துண்டுப் பிரசுரங்கள் விநியோகம்

கொழும்பு,ஜன.19

மாலபே தனியார் மருத்துவ கல்லூரியை மூடுவதாக அரசு பெற்றுக்கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுமாறு கோரி அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்று முற்பகல் கொழும்பு கோட்டை தொடருந்து நிலையத்திற்கு முன்னால் துண்டு பிரசுரங்களை விநியோகிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ரி2)

பொலிஸாரின் நிதி அனுசரணையில் தையிட்டியில் அடிக்கல் நடும் நிகழ்வு

காங்கேசன்துறை,ஜன.19

உயிரிழந்த பொலிஸாரின் குடும்பத்தினருக்கு 10 லட் சம் ரூபா பெறுமதியான வீட்டை அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று காங்கேசன்துறை தையிட்டிப் பகுதியில் இடம்பெற்றது.

வடமாகாண மூத்த பொலிஸ் அத்தியட்சகர் றொசான் பெர்னாண்டோ தலைமையில் வீட்டுக்கான அடிக்கல் நடப்பட்டது.

சிற்றம்பலம், தவராசா என்ற பொலிஸாரின் குடும்பத் தினருக்கே இந்த வீடு கட்டிக்கொடுக்கப்படவுள்ளது

வீடமைப்புக்கான நிதியை, யாழ்.மாவட்டத்தின் அனைத்து பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளும் வழங்கியுள்ளனர்.

இந்த நிகழ்வில் யாழ் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் பாலித பெர்னான்டோ, யாழ்ப்பாணம் மற்றும் காங்கே சன்துறைக்கு பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட் சகர், யாழ்ப்பாணம், காங்கேசன்துறை உதவிப்பொ லிஸ் அத்தியட்சகர்கள், யாழ்ப்பாணத்தில் உள்ள 14 பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ரி2,26)

சைக்கிள் சறுக்கியதில் பெண்ணொருவர் காயம்

தென்மராட்சி,ஜன.19

மணலில் மோட்டார் சைக்கிள் சில்லு சிக்கி சறுக்கியதில் அதில் பயணித்த பெண் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் கெற்பேலி மேற்கில் நேற்று இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த கணேசமூர்த்தி நாகருக்மணி (வயது43) என்பவரே காயமடைந்தார். காயமடைந்தவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ரி2,9)

விபத்தில் இருவர் காயம்

சாவகச்சேரி, ஜன.19

சமிக்ஞை விளக்கை எரிய விட்டு சாலையிலிருந்து ஒழுங்கைக்குத் திரும்பிய மோட்டார் சைக்கிளை அதே திசையில் வந்த வாகனம் மோதியதில் இருவர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று மீசாலைச் சந்தியில் இடம்பெற்றது. சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த கதிரேசபிள்ளை சண்முகநாதன் (வயது51) நடேசமூர்த்தி பிரதீபன் (வயது32) ஆகியோரே காயமடைந்தவராவர்.

கொடிகாமத்தில் இடம்பெற்ற மரண வீட்டுக்குச் சென்றுவிட்டு திரும்புகையில் சம்பவம் நடைபெற்றதெனத் தெரிவிக் கப்பட்டது.

காயமடைந்தவர்கள், சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு க.சண்முகநாதன் என்பவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற் றப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ரி2,9)

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மெய்வன்மைப் போட்டிகள்

சாவகச்சேரி, ஜன.19

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நேற்றுக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது கல்லூரி அதிபர் ந.ஜெயகுமாரன் தலைமையில் போட்டி கள் இடம்பெற்றன.

நிகழ்வில், தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) நா.கந்ததாசன், சாவகச்சேரி ஸ்ரார் ஹோட்டல் உரிமையாளர் வே.சிவ நீதன், சமூக சேவையாளர் மருத்துவர் சி.மோகன் கல் லூரி முன்னாள் அதிபர் க.அருந்தவபாலன் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ரி2,9)

அதிபர் வருகை தரவில்லை பூட்டு உடைத்து பாடசாலை திறப்பு

கண்டி, ஜன.19

அதிபர் வருகை தராததனால் பூட்டு உடைத்து பாடசா லையைத் திறந்த சம்பவம் கண்டி தெல்தோட்டை நாராங் ஹின்ன பாடசாலையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது.

அதிபர் பாடசாலைக்கு வருகை தராமையின் காரணமாக பாடசாலைக்குள் செல்ல முடியாமல் மாணவர்களும் ஆசி ரியர்களும் வீதியில் காத்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து பிள்ளைகளின் பெற்றோர்களும் ஆசிரியர்களும் இணைந்து கல்வி வலயத்தின் உத்தரவின் பேரில் போடப்பட்டிருந்த பூட்டை உடைத்து பாடசாலைக் குள் சென்றனர். கல்விச் செயற்பாடுகள் ஆரம்பித்து முடியும் வரை அதிபர் பாடசாலைக்கு வருகை தரவில்லை என ஆசிரியர்களால் தெரிவிக்கப்பட்டது.

இதனால் அதிபர் காரியாலயத்தை திறக்க முடியாமையால் ஆசிரியர், மாணவர்கள் வரவுப் பதிவேடுகளில் பதிவுகளை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டதாகவும் தெரிவித்த னர். இது தொடர்பாகக் கல்வி இராஜாங்க அமைச்சர் வேலு சாமி இராதாகிருஸ்ணனின் கவனத்துக்குக் கொண்டு வந்ததைத் தொடர்ந்து அவர் அதிபருக்கு எதிராக உடனடி நடவடிக்கை எடுக்குமாறு பணிப்புரை விடுத்தார்.

கடந்த காலங்களில் இந்தப் பாடசாலை அதிபர் தொடர்பில் பல்வேறு முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் வலயக் கல்விப் பணிமனையின் அதிகாரி ஒருவர் தெரிவித் தார். அதிபரை இடமாற்றம் செய்வதால் மாத்திரம் இதற்குத் தீர்வு காண முடியாது எனவும் அதனை விட அதிகமான ஒரு நடவடிக்கையை மாகாண கல்வி அமைச்சு எடுக்க வேண்டும் என பெற்றோர்கள் கோரிக்கை ஒன்றையும் முன்வைத்தனர். (ற)

வலி.மேற்கின் அபிவிருத்தியை முடிவுறுத்துவேன்

கூட்டமைப்பு வேட்பாளர் நடனேந்திரன்

யாழ்ப்பாணம்.

வலி.மேற்கில் பல முக்கிய உட்கட்டுமான அபிவிருத்திப்பணிகளை முன்னெடுத்தேன். பிரதேசசபைகளின் சட்ட வரம்புக்கு உட்பட்ட நகரசபையாக்கம், சங்கானை நகர அபிவிருத்தி மற்றும் மக்களுக்கு காணி உறுதி கையளிப்புபோன்ற நாற்பதுக்கும் மேற்பட்ட தீர்மானங்களை முன்மொழிந்து செயலாக்கியுள்ளேன். எனக்கு வீட்டுச்சின்னத்தில் சந்தர்ப்பம் வழங்குங்கள். மிகுதி நான்கு ஆண்டுகளுக்குள் அனைத்து வேலைகளையும் செய்துமுடிப்பேன் இவ்வாறு வலி. மேற்கு பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினரும், சமூக வீடமைப்புக் குழுவின் தலைவரும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு வேட்பாளருமான த.நடனேந்திரன் (கஜன்) தெரிவித்தார்.

அராலியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த நான்கு ஆண்டுகளில் சாலை அபிவிருத்திகள், சாலை மின்விளக்குகள், மயான அபிவிருத்தி, குடிதண்ணீர் விநியோகம், மற்றுத்திறனாளிகளுக்கான உதவிகள், திண்மக்கழிவு முகாமைத்துவம் மற்றும் அராலி, சங்கானையில் உள்ள 70 குடும்பங்களுக்கு காணிகளையும் வழங்கியிருந்தேன்.

அமரர் அமிர்தலிங்கத்துக்கு சிலை வைப்பதுக்கான தீர்மானத்தை முதன்முதலில் சபையில் முன்மொழிந்தேன். அத்தீர்மானம் தற்போது எமது நாடாளுமன்ற உறுப்பினர் ஈஸ்வரபாதம் சரவணபவனால் முன்னெடுக்கப்படுகிறது. இவ்வாறாக நான் 2011-2015காலப்பகுதியில் மக்களுக்காக பல சேவைகளைச் செய்தேன்.

வேள்ட்விசன் நிறுவனத்தின் மூலம் சங்கானையில் நவீன மலசலகூடம், பொன்னாலை குடியேற்ற மக்களுக்கான குடிதண்ணீர்த் திட்டம், வட்டு முதலி கோயிலடி மற்றும் அராலி குடிதண்ணீர்த் திட்டம், திண்ம கழிவுக்கான மூல உபாயதிட்டம் எனப் பல வற்றை முன்னெடுத்துள்ளேன்.

எனவே, மக்கள் 2018இல் எமக்கு வீட்டுச் சின்னத்தில் அராலி தெற்கு ஊடாக ஒரு சந்தர்ப்பத்தை வழங்கவேண்டும். வீட்டுக்கு ஒளியேற்றவேண்டும்-என்றார். (ய-50)

நிறுத்தப்பட்டிருந்த நாடக விழா சனிக்கிழமை இடம்பெறும்

சாவகச்சேரி, ஜன. 19

கடந்த மாதம் நடத்தவிருந்துகாலநிலைசீரின்மை காரணமாக இடைநிறுத்தப்பட்ட தென்மராட்சி இலக்கியஅணியின்அனுசரணையுடனான நாடக விழா நாளை சனிக்கிழமை பி.ப 5 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

சங்கத்தானை 'தமிழ்க் கோட்டம்' மண்டபத்தில் இது நடைபெறும்.

ஓய்வுநிலை உப அதிபர் செ.சிவபாதசுந்தரம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு கோப்பாய் தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் இ.கமல நாதன் எழிலுரை வழங்குவார். குழந்தை ம.சண்முகலிங்கத்தின் நெறியாள்கையில் 'தான் விரும்பாத தியாகி ஒருவர்" என்னும் நாடகமும், சாவகச்சேரி சித்திவிநாயகர் கலைமன்றத்தின் தயாரிப்பிலான 'மயானத்தில் மன்னன்' என்னும் இசை நாடகமும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (21-9)

அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், ஜன. 19

மாவிட்டபுரம் தெற்கு ,கம்பன் சீமா சிறி ஞானவைரவர் சுவாமி திருக்கோவில் கும்பாபிசேகதின அலங்கார உற்சவம் இன்று வெள்ளிக்கிழமைமாலை7மணிக்கு இடம்பெறும். மகாராஜாசிறி து.ஷ. இரத்தினசபாபதி குருக்கள் தலைமையில் திருவிழாக்கள் ஆரம்பமாகி 30 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அபிசேகமும், மாலை ஞானவைரவர் வீதியுலாவும் இடம்பெறும். அதனைத்தொடர்ந்து மறுநாள் 31 ஆம் திகதி புதிதாக அமையவுள்ள வசந்தமண்டபத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வும் தைப்பூச தின நிகழ்வும் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (21)



சாவகச்சேரியில் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணப் பாதுகாப்பு படைப்பிரிவுத் தலைமையகமும், கொழும்பு பல்கலைக்கழகமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த மருத்துவமுகாம் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த மருத்துவமுகாமில் சுமார் 300பேர்வரை கலந்துகொண்டு பயன்பெற்றனர். (ய-21)

கந்தபுராண விளக்கவுரை

யாழ்ப்பாணம், ஜன.19

யாழ்சின்மயாமிசன் வதிவிட ஆச்சாரியார் நடத்தும் கந்தபுராணம் வாராந்த விளக்கவுரை இன்றுகாலை 6.30 மணிமுதல் 7.30 மணிவரை நல்லூர் ஞானவேல் ஆச்சிரமத்தில் நடைபெறும். (ய-21)

மாணவர்களுக்கு கற்றல் உபகரணம்

சாவகச்சேரி, ஜன.19

சாவகச்சேரிலயன்ஸ் கழகத்தினரால் மீசாலை கமலாம்பிகை வித்தியாலயத்தில்தரம் ஒன்றில் இணைந்துள்ள மாணவர்களுக்கு அண்மையில் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

வித்தியாலயத்தில் நடைபெற்ற கால்கோள் விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட கழகத் தலைவர் உ.சிசில் றெமிண்டஸ் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கிவைத்தார். (ய-9)

கும்பாபிசேகம்

சாவகச்சேரி, ஜன.19

சாவகச்சேரி சப்பச்சிமா வடிப் பிள்ளையார் ஆலய புனராவர்த்தன மகாகும்பாபிசேகம் எதிர்வரும் 29ஆம்திகதி காலை இடம்பெறவுள்ளது. கும்பாபிசேகக் கிரியைகள் 22ஆம்திகதி அதிகாலை ஆரம்பமாகும். எண்ணெய்க் காப்புச் சாத்துதல் 27ஆம்திகதி காலை 8.00மணி தொடக்கம் மாலை 5.00 மணி வரை இடம்பெறும். கும்பாபிசேகக் கிரியைகள் சிவசிறி ந.லோகேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறும் என ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (ய-9)

மிதிவண்டி நீதிமன்றில் ஒப்படைப்பு

யாழ்ப்பாணம், ஜன.19

உரிமை கோரப்படாத துவிச்சக்கர வண்டி ஒன்று பருத்தித்தறை நீதவான் நீதிமன்றில் பொலிஸாரினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

69781134 இலக்கமுடைய துவிச்சக்கர வண்டியை இந்த உரிமையாளர் அதற்குரிய மூல ஆவணங்களைச் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ளுமாறும், தவறின் 2மாதங்களுக்குப் பின் அரசுடமை ஆக்கப்படும் என்றும் பதிவாளர் தெரிவித்தள்ளார். (ய-21)

புதுக்குடியிருப்பில் அரச தலைவரின் கட்டவுட் தீக்கிரை

முல்லைத்தீவு, ஜன.19

புதுக்குடியிருப்புபிரதேசத்தில்சிறிலங்காசுதந்திரக்கட்சி வேட்பாளர் அலுவலகம் ஒன்றில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த அரசதலைவரின் படம் பொறிக்கப்பட்ட விளம்பரப் பதாகை இனந்தெரியாத நபர்களினால் தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளது.

சம்பவவம் குறித்து தெரியவருவதாவது:

புதுக்குடியிருப்பு பிரதேசசபை தேர்தலில் மல்லிகைத்தீவு, மந்துவில், சிவநகர் மற்றும் ஆனந்தபுரம் போன்ற கிராமங்களை ஒன்றிணைத்த புனிதவளநகர் 6ஆம் வட்டாராம் தேர்தல் தொகுதியில் சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக அ.பரமதாஸ் என்பவர் போட்டியிடுகின்றார்.

இவர் தனது தேர்தல் பரப்புரைக்காக கட்சி அலுவலகம் ஒன்றை கடந்த 5ஆம் திகதி மல்லிகைத்தீவு 9ஆம் வட்டாரப்பகுதியில் திறந்துவைத்துள்ளார். கட்சி பரப்புரைக்கூட்டங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. அலுவலகம் அமைந்துள்ள வளாகத்தில் சர்வையைப் பார்த்தவாறு அரசதலைவரின் ஆறடி நீளம் கொண்டதும், மூன்று அடி அகலம் கொண்டதுமான கட்டவுட் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாத சிலர் அதற்கு தீவைத்துவிட்டுச் சென்றுள்ளார்கள்.

சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய பொலிஸ் அதிகாரியும் சம்பவ வருகை தந்து பார்வையிட்டு விசாரணைகளை துரிதப்படுத்துமாறு உத்தரவிட்டுள்ளார். (ய-ரி3)

யாழ்-ஹற்றன் பேருந்து சேவையை ஆரம்பியுங்கள்

யாழ்ப்பாணம், ஜன.19

யாழ்ப்பாணத்திலிருந்து ஹற்றனுக்கான இ.போ.ச. பேருந்து சேவையை ஆரம்பிக்குமாறு பயணிகள் கோரியுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பலர் ஹற்றன் பிரதேச அரச திணைக்களங்களில் பணியாற்றுகின்றனர். அங்கிருந்து பலர் யாழ்ப்பாணத்துக்கு வியாபாரம் மற்றும் தொழில்ரீதியாக வந்து செல்கின்றனர்.. தற்போது யாழ்ப்பாணத்திலிருந்து ஹட்டனுக்கு ஒரேயொரு தனியார் பேருந்து மட்டுமே சேவையில் ஈடுபடுகின்றது. இ.போ.ச. பேருந்து சேவையில் இல்லாததால் யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் பலர் தனியார் பேருந்திலேயே பயணிக்க வேண்டியுள்ளது. எனவே, யாழ்ப்பாணத்திலிருந்து ஹற்றனுக்கான, அரச பேருந்து சேவையைநடத்துவதுக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கைஎடுக்கவேண்டும் எனப்பயணிகள்கோருகின்றனர். (ய-9)

கலாநிதி இரவீந்திரனின் மூன்று நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், டிச.19

கலாநிதி இரவீந்திரனின் மூன்று நூல்களின் வெளியீடும் விமர்சன ஆய்வரங்கமும் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் வெலிங்டன் சந்திக்கு அருகாமையில் உள்ள எஸ்.டி.பி. வங்கிக் கட்டடத் தொகுதியில் பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது. வை.வன்னியசிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், வெளியீட்டுரையை ஓய்வுநிலை வங்கி முகாமையாளர் க.கமலசேகரம் நிகழ்த்துவார். ஏற்புரையை கலாநிதி ந.இரவீந்திரன் வழங்குவார். அத்துடன் ஆய்வரங்கமும் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ய-ரி)

மகளிர் தின விளையாட்டுப் போட்டிகள்

தென்மராட்சி, ஜன.19
பன்னாட்டு மகளிர் தினத்தையொட்டி சாவகச்சேரி நகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் அங்கத்தவர்களுக்கிடையில் நடத்தும் விளை யாட்டுப் போட்டி இன்று புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்துக்கு அருகில் உள்ள காணியில் நடை பெறும் என அறிவிக்கப் பட்டுள்ளது.
தமிழர்களின் பாரம்பரியத்தை வெளிக்கொணரும் வகையில் விளை யாட்டுப்போட்டிகள் நடை பெறும். சங்க அங்கத்தவர்களிடையே 35 வயதுக்குக்கீழ்ப்பட்ட-மேற்பட்ட இரு பிரிவுகளாகப் போட்டிகள் நடத்தப்படும்.
தேங்காய் துருவுதல், கிடுகு பின்னுதல், கடிகார ஓட்டம், கபடி, கெந்திப்பிடித்தல், உருவங்களுக்கு கண் வைத்தல், முட்டி உடைத்தல் மற்றும் அஞ்சல் ஓட்டம் போன்றவை இடம்பெறும் என சங்கத்தின் செயலாளர் திருமதி சிறிசாந்தி தெரிவித்தார். இப்போட்டிகள் 20 வருடங்களாக நடத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ய-9)

கொக்கிளாய் மீனவர்வாடி காணி வழக்கில் சிக்கல்

மகாவலி அதிகாரசபைக்குச் சொந்தம் என அறிவிப்பு

முல்லைத்தீவு, ஜன.19
முல்லைத்தீவு மாவட்டம் கொக்கிளாய்ப் பிரதேசத்தில் மீனவர்களின் வாடிகளை அமைப்பதுக்காக வழங்கப்பட்ட காணி குறித்த வழக்கு இடம்பெற்றுவரும் நிலையில், அக்காணி மகாவலி அதிகாரசபைக்கு சொந்தமானது என்று மகாவலி அதிகாரசபை எழுத்துமூலம் அறிவித்துள்ளது.
வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட பிரதேசம் என்றவகையில் அப்பகுதியை பிரதேச செயலாளர் வழங்கியமை தவறு எனக் குறிப்பிட்டு பிரதேச செயலாளருக்கும் நீரியல்வளத் திணைக்களத்துக்கும் அதிகாரசபை எழுத்தில் அறிவித்துள்ளது.

அதிகாரசபையின் இந்த அறிவிப்பானது தற்போது புதிய சிக்கலை ஏற்படுத்தியுள்ளதுடன் மீனவர்களின் பிரச்சினையை மேலும் நெருக்கடி நிலைக்குத் தள்ளியுள்ளது.
கொக்கிளாய் சென். அன்ரனிஸ் கடற்றொழிலாளர் சங்கத்துக்கு எதிராக நீரியல்வளத் திணைக்களத்தினரால் கடந்த 2016 ஏப்ரல் 4ஆம் திகதி முல்லைத்தீவு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு தற்போது வரை இடம்பெற்றுவருகின்றது.
கொக்கிளாய்ப் பகுதியில் மீனவர்களின் தொழிலுக்காக வாடி அமைப்பதுக்கு பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட இடமானது, திணைக்களத்தினால் கரைவலைத் தொழிலுக்கு அனுமதிக்கப்பட்ட இடம் என்று தெரிவிக்கப்பட்டு, அதற்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டிருந்தது.
இதன் அடிப்படையில் கடந்த 21மாதங்களாக இடம்பெற்று வந்த வழக்கானது தற்போது புதுவடிவம் பெற்றுள்ளது.
மேற்படி வழக்கினால் சங்கத்தைச் சேர்ந்த பல மீனவர்கள் இன்றுவரை தொழிலுக்குச் செல்லமுடியாத நிலையில் வாழ்வாதாரமின்றி பெரும் இடரை எதிர்கொண்டு வருகின்றனர். இந்தவிடயம் நீதிமன்றின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டிருந்தது. நில அளவீடு, சமரச முயற்சி எனப் பல முயற்சிகளும் தோல்வி கண்ட நிலையில் குறித்த வழக்கில் மற்றுமோர் திருப்பமாக இந்த அறிவிப்பு வந்துள்ளது. பிரதேச செயலாளரால் உள்ளூர் மீனவ சங்கத்துக்கு வழங்கப்பட்ட நிலமானது மகாவலி அதிகார சபைக்கு சொந்தமானது என்றும், வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட பிரதேசம் என்றவகையில் அப்பகுதியை பிரதேச செயலாளர் வழங்கியமை தவறு என்றும் அதிகாரசபை பிரதேச செயலாளருக்கும், நீரியல்வளத் திணைக்களத்துக்கும் எழுத்தில் அறிவித்துள்ளது.
இந்தநிலையில் குறித்த வழக்கு மீண்டும் 25ஆம் திகதி மாவட்ட நீதிமன்றில் எடுத்துக் கொள்ளப்படவுள்ளது. (ய)

கால்கோள் விழா

யாழ்ப்பாணம் ஜன 19
யாழ்ப்பாணம் நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தின் கால்கோள் விழாவும் மாணவ முதல்வர் சின்னஞ்சூட்டும் வைபவமும் இன்று காலை 10 மணிக்குப் பாடசாலை முதன்மை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.
வித்தியாலய அதிபர் மகேசன் கஜேந்திரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலய மூத்த பழைய மாணர் சின்னையா வேலாயுதப் பிள்ளை கலந்து சிறப்பிக்கவுள்ளார். அனைவரையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலைச்சமூகம் தெரிவித்துள்ளது. (21)

குடாநாட்டில் தண்ணீரின்றி வறண்டுபோகும் நெற்காணிகள்

யாழ்ப்பாணம், ஜன.19
யாழ்.குடாநாட்டில் உள்ள மேட்டுநில வயல்களில் தண்ணீரின்றி நெற்பயிர்கள் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. தற்போதைய காலநிலை வேறுபாட்டாலும் வறட்சியின் தாக்கத்தினாலும் வயல்களில்தண்ணீர்வற்றியுள்ளது. தண்ணீர் வற்றியதால் கிணறு வசதிகள் கொண்டவர்கள் வயல்களுக்கு தண்ணீரை இறைக்கின்றனர். நெற்பயிர்கள் புதிர்ப்பருவத்தில் காணப்படுவதால் தண்ணீர் முக்கியமானது. தண்ணீர் இறைத்து அவற்றைக் காப்பாற்றிக் கொள்ளும் வேலையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். (ய-17)

சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஜன.19
தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடத்திவரும் வாராந்த ஆன்மீக நிகழ்வுகளில் இன்று 10.30 மணிக்கு கந்தபுராணம் தொடர்சொற்பொழிவு இடம்பெறும்.
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மூத்த விரிவுரையாளர் அ.குமரவேல் சொற்பொழிவாற்றுவார். (ய-173)

பால்நிலை சமத்துவம்: மாவட்டச் செயலகத்தில் முக்கிய கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன.19
சொலிடாரிட்டி நிறுவனத்தின் அனுசரணையில் ஆரோக்கியமான வேலைச்சூழல் மற்றும் பால்நிலை சமத்துவம் தொடர்பான செயற்குழு கலந்துரையாடல் ஒன்று அண்மையில் யாழ். மாவட்டச் செயலாளர் காரியாலயத்தில் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் சட்டத்தரணிகள், மனிதஉரிமை ஆணைக்குழு, யாழ்.பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், யாழ். பல்கலைக்கழக பால்நிலை சமத்துவத்துக்கான செயற்பாட்டு மையம், ஐக்கியநாடுகள் நிறுவனப் பிரதிநிதிகள், அரச தாதியர் சங்கம், அரச வைத்திய அதிகாரிகள் சங்கம், வடக்கு மாகாண சுற்றுலாத்துறை ஒன்றியம், அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிகள், முகாமைத்துவ உதவியாளர் சேவைச் சங்கம், பொலிஸ்திணைக்கள சிறுவர், பெண்கள் பிரிவு, தொழில் திணைக்களம், யாழ்.மாவட்ட பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான இணைப்பாளர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, சொலிடாரிட்டி நிறுவன பால்நிலை சமத்துவம் தொடர்பான ஆலோசகர்களும் நிறுவனங் கலந்து கொண்டனர். இக்கலந்துரையாடலில்குறித்தசெயற்குழுவின் கடந்த ஆண்டு செயற்பாடுகள் தொடர்பான மீளாய்வும் 2018, 2019ஆம்ஆண்டுக்கான செயல்திட்ட முன்மொழிவுகளும்இடம்பெற்றன. (21)

பருத்தித்துறை கடைகளை பதிவுசெய்க

யாழ்ப்பாணம், ஜன.19
பருத்தித்துறை நகரப்பகுதியில் உள்ள கடைகள், வர்த்தக நிலையங்கள் யாவும் எதிர்வரும் 29ஆம் திகதிக்கு முன்னதாக வியாபார உரிமத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
இது குறித்து பருத்தித்துறை நகரசபையினால் ஒலிபெருக்கி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.
இவ்வாண்டுக்கான வியாபார உரிமத்தை உரிய காலத்துக்குள் பெற்றுக் கொள்ளுமாறும், இல்லையேல் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-173)

தங்கப் பெட்டகத்தைத் தேடி மற்றுமொரு அகழ்வு முயற்சி

தண்ணீர் பெருக்கெடுத்ததால் தோல்வி

முல்லைத்தீவு. ஜன.19
விடுதலைப் புலிகளால் மறைத்து வைக்கப்பட்டது என்று சந்தேகிக்கப்படும் இரும்புப் பெட்டகத்தைதேடி முள்ளிவாய்க்கால் பகுதியில்நேநற்று அகழ்வுநடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அந்த நடவடிக்கையும் தோல்வியில் முடிவு பெற்றது.
முள்ளிவாய்க்காலிலுள்ள காணி ஒன்றில் புலிகளினால் புதைக்கப்பட்டதாக கூறப்படும் தங்கப் பெட்டகத்தைத் தேடும் பணியில் பாதுகாப்பு பிரிவினர் ஈடுபட்டனர். இதற்காக பெக்கோ இயந்திரம் ஒன்று பயன்படுத்தப்பட்டு பாரிய குழி ஒன்று தோண்டப்பட்டது.
அந்தக் குழியில் இருந்து நீர் வர ஆரம்பித்ததால் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் கடும் சிரமத்துக்கு முகம் கொடுத்தனர்.
முல்லைத்தீவு நீதிமன்றத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட உத்தரவுக்கமைய நேற்று முன்தினம் பிற்பகல் இந்த அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர் ஒருவரினால் வழங்கப்பட்டதகவல்களுக்கமைய அந்த அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.
குழி அகழப்படும் போது நீர் வந்ததால் அகழ்வு நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன.
எனினும் தொடர்ந்து அந்த நடவடிக்கை மேற்கொள்ள முயற்சிக்கப்படும் என முல்லைத்தீவு பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். (21)

அழுத்தம்...

தேர்தலகள் தினைக்களத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தெரிவித்ததாவது:

வாக்காளர் அட்டைகளை உரிய இடங்களுக்கு வழங்கும் நடவடிக்கைகளை இன்று (நேற்று) ஆரம்பித்துள்ளோம். அரசியல் கட்சிகள் அதிகாரத்தில் இருக்கும் கட்சிகள் தமது அதிகாரங்களை பயன்படுத்தி தேர்தல் சட்டங்களை மீற வேண்டாம் என்பதை நாம் ஆரம்பத்தில் இருந்தே கூறுகின்றோம். அதேபோல் அரச சொத்துக்களை பயன்படுத்தவோ அல்லது முறைகேடாகவோ பயன்படுத்தவேண்டாம். அதேபோல் மக்களும் பொருள்களை வாங்கும் நோக்கத்தில், சொற்ப தேவைகளுக்காக வாக்களிக்கவும் வேண்டாம். மக்களும் தேர்தல் சட்டத்தைச் சரியாக கையாள வேண்டும்.

தேர்தல் ஊழல் இடம்பெற்று வருகின்றது என்பதை நாம் மறுக்கவில்லை. கடந்த காலங்களில் இருந்து தேர்தல் ஊழல் இடம்பெற்று வருகின்றது. இப்போது ஏற்பட்டுள்ள நல்ல மாற்றங்கள் எதிர்கால நகர்வுகளில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தும். இப்போது ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்களில் எமது வருங்கால சந்ததி சரியான தேர்தல் முறைமையின் கீழ் வழி நடத்தப்படும் வாய்ப்புகள் அதிகமாக உள்ளன. அந்த பொறுப்பு எம் அனைவரிடமும் உள்ளது. மக்களுக்கு அழுத்தம் கொடுத்து வாக்குகளை எவரும் பெற்றுக்கொள்ள வேண்டாம். மக்களைச் சிந்தித்துச் செயற்படுத்தும் கால எல்லையை வழங்க வேண்டும். அதற்கு அரசியல் கட்சிகள் அதிகாரத்தில் உள்ள நபர்கள் இடமளிக்க வேண்டும். அதுவே மக்களாட்சித் தேர்தல் சுதந்திரம் என்று கருதுகின்றோம். இவ்வாறான கலாசாரத்தில் இருந்து மீள வேண்டும் என்றால் அனைவரும் இணைந்து ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும். இது மனித உரிமைகளில் ஒன்றாகும். அதை தடுப்பதும் மனித உரிமை மீறலாகும்< என்றார். (ற-5)

ஐ. தே. கவினர்...

புடன் செயற்படுவோம்.

இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அவர் விடுத்துள்ள சிறப்பு ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது.

விசாரணை ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளதைப் போன்று 9.2 பில்லியன் ரூபாவை பேப்பச்சுவல் நிறுவனத்திடம் இருந்து மீளப்பெற்றுவிட முடியும். அதற்காக ஆணைக்குழு முன்வைத்துள்ள செயற்பாட்டை பின்பற்றுவோம். முழுப் பணத்தையும் அரசு பெற முடியும். அரசுக்கு இழப்பு ஏற்படாது.

ஊழல் மோசடிகளைத் தடுக்கவே நாங்கள் பதவிக்கு வந்தோம். கட்சி நிறம் மற்றும் எவ்வாறான பதவிகள் என்றாலும் ஊழலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். நாங்கள் ஆட்சிக்கு வந்து சில காலத்தில் பிணைமுறி தொடர்பான சர்ச்சை எழுந்தது. அதனை நாங்கள் கீழே போட்டு மறைக்கவில்லை.

குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டதும் முன்னர் எந்தஅரசும்அதுதொடர்பில்விசாரிக்கவில்லை. நாங்கள் மூன்று முறை இது தொடர்பில் விசாரித்தோம். கடந்த ஆட்சிக் காலத்தில் பலமுறை இவ்வாறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. நாடாளுமன்றத்தில் கேள்விகள் எழுப்பப்பட்டன. ஆனால் எதுவும் நடக்கவில்லை. எமது நாட்டில் நிதிக் கட்டுப்பாடு நாடாளுமன்றத்துக்கே உள்ளது. கடந்த காலத்தில் நாடாளுமன்றம் இந்த நிலையை மறந்திருந்தது. நாடாளுமன்றம் அந்த அதிகாரத்தை பய்ன்படுத்தி ஒரு சந்தர்ப்பமாக பிணை முறி விவகாரத்தை பார்த்தோம். இதன் மூலம் அரசு வெளிப்படைத் தன்மையுடன் செயற்படுகின்றது.

பிணைமுறி காரணமாக பேப்பச்சுவல் நிறுவனம் 9.2 பில்லியன் ரூபா சட்டவிரோதமாக உழைத்துள்ளது என்று ஆணைக்குழு அறிக்கை கூறுகின்றது. எமது அமைச்சின் கீழ் வருகின்ற மத்திய வங்கி அந்த நிறுவனத்திடமிருந்துதற்போதைக்கும் 12 பில்லியன் ரூபாவை வைத்துக்கொண்டுள்ளது. ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளதைப்போன்று 9.2 பில்லியன் ரூபா மீளப்பெற முடியும். ஆணைக்குழு முன்வைத்துள்ள செயற்பாட்டை பின்பற்று வோம். முழுப் பணத்தையும் அரசு பெற முடியும். அரசுக்கு இழப்பு ஏற்படாது.

அதேபோன்று இந்த மோசடியில் யாராவது அதிகாரி ஒருவர் தொடர்புபட்டிருந்தால் அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும். மோசடிக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டதி லிருந்து எமது அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஒத்துழைப்பும் வழங்கியுள்ளோம். தற்போது ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். எமது அரசு முறையான அரசு என்பதை இதன்மூலம் நிரூபித்துள்ளோம் - என்றுள்ளது. (ற-5,31)

பொறுப்பாகவிருந்த...

யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பான ஆள்கொணர்வு மனு தொடர்பான வழக்கு நேற்று யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் மேல் நீதிபதி மா. இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

வழக்கின் முதலாவது எதிரியான முன்னாள் நாவற்குழி இராணுவ முகாம் பொறுப்பதிகாரியும் தற்போது மன்னார் மாவட்ட கட்டளைத் தளபதியாக உள்ளவருமான மேஜர் ஜெனரல் துமிந்த கெப்பிட்டிபெலான, இரண்டாம் எதிரியான இராணுவத் தளபதி (அலுவலக ரீதியாக) மற்றும் மூன்றாம் எதிரியான சட்டமா அதிபர் (அலுவலக ரீதியாக) ஆகியோர் சார்பில் சட்டமா அதிபர் முன்னிலையாகின்றார் என்று அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந் மன்றுக்குத் தெரிவித்தார். மனுதாரர் சார்பில் சட்டத்தரணிகளான சுபாஜினி, குருபரன் ஆகியோர் முற்பட்டனர்.

துமிந்த கெப்பிட்டி பெலான சார்பில் அரச சட்டவாதி முற்படுவது தொடர்பாக மனுதாரர் சட்டத்தரணிகள் ஆட்சேபனை தெரிவித்தனர்.

அவர்கள் பன்னாட்டு மனிதவுரிமை சட்டம், குற்றவியல் சட்டம் போன்றவற்றையும், உயர் நீதிமன்றங்களில் இடம்பெறுகின்ற சித்திரவதை வழக்குகளையும் மேற்கோள்காட்டி வாதிட்டனர். "முதலாவது எதிரியான இராணுவ அதிகாரிக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் 2002, 2003 ஆண்டுகளின் நடந்த வழக்குகளில் இராணுவ அதிகாரியே பொறுப்புக் கூற வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அந்த நபர் மீதான தனிப்பட்ட குற்றவியல் பொறுப்பு காணப்படும்போது அவர் சார்பாக சட்டமா அதிபர் முற்படுவது காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் அரசு பொறுப்புக் கூறுகின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

உயர் நீதிமன்றங்களில் சித்திரவதை வழக்குகள் இடம்பெறுகின்றபோது அது தொடர்பில் சட்டமா அதிபர் முற்படுவதில்லை. இந்த இராணுவ அதிகாரிக்கு எதிராக குற்றச்சாட்டு நிரூபிக்கப்படும்போது அரசு கூட்டுப் பொறுப்பை ஏற்குமா?. அப்படி அரசு கூட்டுப்பொறுப்பை ஏற்காது தனிநபர் பொறுப்பாக கூறப்படுமாயின், தற்போது மக்களின் வரிப் பணத்தில் இயங்கும் சட்டமா அதிபர் எவ்வாறு தனிநபருக்காக வாதாட முடியும் என்ற கேள்வியும் ஏற்படுகின்றது.

ஜக்கியநாடுகள் மனிதவுரிமை ஆணையாளரின் அறிக்கையின்படி இலங்கையில் போர்க் குற்றங்களானது தனிப்பட்ட நபர்களூடாக மாத்திரமன்றி பரவலாக கட்டமைப்புரீதியாக இடம்பெற்றுள்ளன. அதற்கு இலங்கை அரசும் பொறுப்புக் கூற வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த வழக்கில் காணமற்போனோர் தொடர்பாக என்ன நடந்தது என்பது தொடர்பாக அரசு கூற வேண்டும். முதலாம் எதிரி சார்பாக சட்டமா அதிபர் முற்படுவது தொடர்பான விண்ணப்பத்துக்குத் தாம் ஆட்சேபனை தெரிவிக்கின்றோம்." என்று மனுதாரர் சட்டத்தரணிகள் வாதிட்டனர்.

அரச சட்டவாதி நாகரட்ணம் நிஷாந் தனது தரப்பு வாதத்தை முன்வைத்திருந்தார்.

"இந்த வழக்கில் இணைக்கப்பட்ட சத்தியக் கடதாசி மனுவை ஆராய்ந்த சட்டமா அதிபர், இந்த இராணுவ அதிகாரிக்கு எதிராக தனிப்பட்ட குற்றப் பொறுப்பு உள்ளது என்று கருதவில்லை. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் எந்த இடத்திலும் அந்த இராணுவ அதிகாரிக்கு எதிராக சாட்சியங்களோ சான்றுகளோ இணைக்கப்படவில்லை. அது தொடர்பாக மேல்நீதிமன்ற விசாரணையின் மூலமாகவே கண்டறிய முடியும். இத்தகைய காரணங்களால் தற்போதைய நிலையில் சட்டமா அதிபர் இந்த வழக்கில் முற்படமுடியும்." என்று அவர் வாதிட்டார்.

இருதரப்பு வாதங்களையும் பரிசீலித்த மேல் நீதிபதி, "இந்த வழக்கில் முதலாம் எதிரியான குறித்த இராணுவ அதிகாரிக்கு எதிராக சட்டமா அதிபர் முன்னிலையாக முடியுமா? முடியாதா? என்பது தொடர்பாக இரண்டு தரப்பினரும் எழுத்து மூலமாகச் சமர்ப்பணம் செய்ய வேண்டும்."என்று கட்டளையிட்டார்.

இந்த வழக்கின் முதலாம் எதிரியான இராணுவ அதிகாரியான துமிந்த கெப்பிட்டி பெலான அடுத்த வழக்குத் தவணையின்போது மன்றில் முற்பட வேண்டும் என்றும் பணித்தது. வழக்குத் தொடர் விசாரணைக்காக எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. (ற-4,71)

சு. கவை...

கட்சியும் கூட்டு எதிரணியும் இணைந்து ஆட்சியமைக்க சதித்திட்டம் தீட்டியுள்ளன.

இவ்வாறு அமைச்சர் மகிந்த அமரவீர குற்றஞ் சாட்டினார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணைமுறி மோசடி தொடர்பில் விசாரணைசெய்ய அரச தலைவர் ஆணைக்குழு வொன்றை மைத்திரிபால அமைத்தார். அந்தக் குழுவால் ஒன்றும் நடைபெறப்போவதில்லை என்று பெரியளவிலானபரப்புரைகள்முன்னெடுக்கப்பட்டிருந்தன. இப்போது இலங்கை வரலாற்றை இந்த அறிக்கை மாற்றியமைத்துள்ளது.

இந்த மோசடியை மக்களிடம் கொண்டுசெல்வதில் ஊடகங்கள் பெரும் பங்கை வகித்துள்ளன. கடந்த காலத்தில் பல ஆணைக்குழுக்களும், கோப் குழுக்களும் அமைக்கப்பட்டு ஊழல், மோசடிகள் தொடர்பில் விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டிருந்தன.

கடந்த காலத்தில் 30ஆயிரம் மில்லியன் ரூபா மதிப்பிலான மோசடியையும் நாங்கள் கோப் குழு மூலம் கண்டுபிடித்திருந்தோம். அந்த அறிக்கைகளை ஆணைக்குழுவை நியமித்தவர்கள் கூட பார்த்திருக்கமாட்டார்கள்.

நேற்றுத்தான் இரண்டாவது ஒப்பரேசனை மைத்திரி ஆரம்பித்துள்ளார். மறுபுறத்தில் பெரிய நிதி மோசடிகள் தொடர்பில் விசாரணை மேற்கொண்ட அரச தலைவர் ஆணைக்குழுவின் 34 அறிக்கைகளும் கிடைத்துள்ளன. அதில் குற்றம் சுமத்தப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் சுதந்திரக் கட்சியினர். அவர்கள் தற்போது வேறு ஒரு தரப்புடன் உள்ளனர். எவராக இருந்தாலும் மைத்திரி கட்டாயம் அதியுச்ச தண்டனையை வழங்கும் வகையில் செயற்படுவார்.

கூடிய விரைவில் வழக்குகள் தொடுக்கப்பட்டு விரைவில் மோசடியாளர்களுக்குத் தண்டனை வழங்கப்படும் வகையில் சிறப்பு நீதிமன்ற மொன்றை அமைக்கவும் ஆலோசிக்கப்பட்டுள்ளது.

ஜக்கிய தேசியக் கட்சியும் கூட்டு எதிரணியும் இணைந்து கூட்டு அரசிலிருந்து சிறிலங்கா சுதந்திரக் கட்சியை வெளியேற்றிவிட்டு அரசை அமைக்க சதித்திட்டமொன்றைத்தீட்டியுள்ளனர். நாங்கள் அரசிலிருந்து வெளியேறினால் சக்திவாய்ந்த ஜக்கிய தேசியக் கட்சி அரசே அமையும். அதற்காகவே கூட்டு எதிரணியில் உள்ளவர்களும், ஜக்கிய தேசியக் கட்சியினரும் அரசிலிருந்து எம்மை வெளியேற வேண்டும் என்று கூறுகின்றனர். கூட்டு எதிரணியில் சிலர் சிறிகொத்தாவிலும், அலரிமாளிகையிலும் பேசுகின்றனர். நாங்கள் அரசில் இருப்பதால்தான் மைத்திரி வலுவுடன் உள்ளார் -என்றார். (ற-5)

கொழும்பு...

விக்குறியாகியுள்ளது. இதுதொடர்பில் வெளிநாட்டுத் தூதுவர்களும், இராஜதந்திரிகளும் சிறப்பு அவதானம் செலுத்தியுள்ளனர்.

ஐ.தே.க. மற்றும் சு.கவினரைச் சமரசப்படுத்தி கூட்டு அரசின் ஆயுளை அதிகரிக்கும் நடவடிக்கைகளிலும் அவர்கள் இறங்கியுள்ளனர். இரு கட்சிகளிலும் உள்ள நடுநிலைவாத உறுப்பினர்களுடன் வெளிநாட்டுத் தூதுவர்கள் சிலர் பேச்சு நடத்தினர் என்றும் தெரியவருகின்றது.

இரு பிரதான கட்சிகளுக்கும் இடையே கூட்டு அரசு தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த ஒப்பந்தம் கடந்த டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் முடிவுக்கு வந்தது. அதன்பின்னர் இரு கட்சியினரும் ஒருவரை ஒருவர் கடுமையாக விமர்சிக்கின்றனர்.

தற்போது உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பரப்புரைகளும் ஆரம்பித்திருக்கும் நிலையில் சொற்போர் தீவிரமடைந்துள்ளது. இப்போது கூட்டரசு எப்போது வேண்டுமானாலும் உடையலாம் என்ற நிலமை தோன்றியுள்ளது.

அந்த நிலமை ஏற்பட்டால் அரசியல் உறுதித் தன்மை பறிபோகும். முக்கிய விடயங்களைக் கையாள முடியாத நிலமையும், மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் இல்லாத நிலமையும் ஏற்படும். புதிய அரசமைப்பை உருவாக்க முடியாத நிலமையும் ஏற்படும்.

ஆட்சி மாற்றத்துக்கு பன்னாடுகள் மறைமுக உதவிகளை வழங்கியிருந்தன. அதேபோன்று ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கைக்குக் கால அவகாசம் பெற்றுக்கொடுப்பதற்கான பின்னணியிலும் சில வெளியாட்டுத் தூதுவர்கள் செயற்பட்டிருந்தனர். இந்தப் பின்னணியில் திட்டமிட்ட அடிப்படையில் கூட்டரசின் ஆயுள் நீடிக்கப்பட வேண்டும் என்று அவர்கள் விரும்புகின்றனர்.

தற்போதுள்ள கொதிநிலையைத் தணித்து இருதரப்பினரையும் சமரசப்படுத்தும் நடவடிக்கைளில் அவர்கள் இறங்கியுள்ளனர். (ற-5)

நூதன...

அவரது மகனான 22 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பெண் திருகோண மலையில் இருந்து வந்து யாழ்ப்பாணம் புன்னாலைக் கட்டுவனில் குடியமர்ந்தார். 2017ஆம் ஆண்டு ஜூலை மாத இறுதியில் அவர் தனது அயலில் உள்ளவர்களிடம் தங்க நகைகள் இரவல் வாங்கினார். திருமண வீடொன்றுக்குச் செல்லப்போகின்றேன் என்று கூறியே அவர் நகைகளை வாங்கினார். அவற்றின் நிறை 35 பவுண் என்று கூறப்படுகின்றது. 5 லட்சம் ரூபா பணத்தையும் கடன் வாங்கினார்.

நகைகள் இரவல் பெற்றுக் கொண்ட ஒருவாரத்தில் அவர்களின் நடமாட்டத்தைக் காணவில்லை. அவர்கள் வீட்டிலுள்ள பொருள்களையெல்லாம் இடமாற்றிக்கொண்டு தலைமறைவானதை அப்போதே அயலவர்கள் உணர்ந்து கொண்டனர். சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். புன்னாலைக் கட்டுவன், திருகோணமலை ஆகிய இடங்களில் தேடுதல் நடத்தப்பட்டபோதும் அவர்கள் சிக்கவில்லை.

பொலிஸார் விசாரணைகளைத் தொடர்ந்தனர். மட்டக்களப்பு, காத்தான்குடியில் நேற்று அவர்கள் இருவரும் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் இருந்து இரு மோட்டார் சைக்கிள்களும் மீட்கப்பட்டன. மோசடி செய்த நகைகளை அவர்கள் வங்கிகளில் வைத்திருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரித்த நீதிவான் அவர்களை எதிர்வரும் 14ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். (ற-ரி2,26)

இலங்கையின்...

டுகான அறிக்கை நேற்று வெளியிடப்பட்டது. அதில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது

ஆட்சி மாற்றத்தின் பின்னர் 2017ஆம் ஆண்டு வரை ஊடகங்களுக்கும் மற்றும் சிவில் சமூகங்களுக்கும் பொதுவாக செயற்படுவதற்கான கதவுகள் திறந்துள்ளன. ஆனால் 2015ஆம் ஆண்டு ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கை வழங்கிய பொறுப்புக் கூறல் மற்றும் அரசியல் நல்லிணக்கம் பற்றிய வாக்குறுதி ஸ்தம்பித நிலையிலேயே உள்ளது.

அரசால் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்ப் பட்டியலை வெளியிடும் அரச தலைவரின் வாக்குறுதி இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காக பன்னாட்டுச் சாசனத்துக்கு இணங்க தயாரிக்கப்பட்ட சட்டம்திகதியிடப்படாமல்உள்ளது. மத சிறுபான்மையினர் பாதுகாப்பின்மை எனும் அச்சத்தில் உள்ளனர். 31 ரோஹிங்யா முஸ்லிம் அகதிகளை பௌத்த தீவிரவாதிகளிடம் இருந்து காப்பாற்ற அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. காலியிலும் வவுனியாவிலும் முஸ்லிம்களுக்கும் ஏனைய சமூகத்துக்கும் இடையே வன்முறை மூண்டது. முஸ்லிம்களின் வீடுகளும் வியாபார நிறுவனங்களும் சேதமாக்கப்பட்டன.

சிறப்பு நீதிமன்றத்தில் வெளிநாட்டு நீதிபதிகள் பங்கேற்பதை மூத்த அமைச்சர்கள் எதிர்க்கின்றனர். அரச தலைவரும், தலைமை அமைச்சரும் கூட அவ்வாறே தெரிவிக்கின்றனர்.

2015ஆம் ஆண்டு தீர்மானத்தின் படி நான்கு தூண்களில் ஒன்றாக காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம் அமைகிறது. அரசு இது தொடர்பாக சட்டம் இயற்றினாலும் 2017ஆம் ஆண்டு செப்ரெம்பர் வரை இது ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் காணப்படுகின்றது. காணாமல் ஆக்கப்பட்டோருகான அலுவலகத்துக்குரிய ஆணையாளர்கள் இதுவரை நியமிக்கபடவில்லை. மனித உரிமைகளைப் பாதுகாப்போம் என்று இலங்கை அரசு வழங்கிய வாக்குறுதி செயல்வடிவம் பெறாமல் உள்ளது என்றுள்ளது. (ற-5,31)

வீணையை...

தல்கள் ஆணைக்குழுவிடம் கோரியுள்ளேன்" என்று ஈ.பி.டி.பியின் செயலரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா குறிப்பிட்டார். (ற-5)

மைத்திரியின் மகனின் புதுமுயற்சி

கொழும்பு, ஜன. 19

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் மகன் தஹாம் சிறிசேன நேற்று முன்தினம் தனது பிறந்த நாளைக் கொண்டாடியிருந்தார்.

பொதுவாக அரச தலைவர் அல்லது அரசியல்வாதிகளின் பிள்ளைகள் நட்சத்திர விடுதிகளில் அல்லது வெளிநாடுகளுக்குச் சென்று பிறந்த நாள் கொண்டாடுவதையே வழக்கமாகக் கொண்டுள்ளனர். எனினும் அரச தலைவர் மைத்திரியின் மகன் தனது பிறந்த நாளை வித்தியாசமாகக் கொண்டாடியுள்ளார். அதற்மைய மீரிகமவில் அமைந்துள்ள மனநலம் குன்றிய குழந்தை பராமரிப்பு மற்றும் தொழிற்பயிற்சி மையத்தில் தனது பிறந்த நாள் கொண்டாட்டங்களை தஹாம் மேற்கொண்டுள்ளார். அங்குள்ள பிள்ளைகளுக்குத் தேவையான பாடசாலை கற்றல் உபகரணங்கள் உட்பட அனைத்து பொருள்களும் தஹாம் சிறிசேனவால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5)

கறுப்பாடுகளைக் களையெடுக்க கட்சிக்குள்ளும் மைத்திரி வாள்வீச்சு

துண்டானது சொய்சாவின் அமைப்பாளர் பதவி

கொழும்பு, ஜன. 19

மகிந்தவின் மிக முக்கிய சகாக்களுள் ஒருவரான ரஞ்சித் டி சொய்சா, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இறக்குவானை தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து தூக்கப் பட்டார்.

அவரின் இடத்துக்கு ஜி.கே.உபாலி சந்திரசேனவை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார். இதற்கான நியமனக் கடிதத்தை நேற்று அவர் பெற்றுக்கொண்டார்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ரஞ்சித் டி சொய்சா, சிறிலங்கா சுதந்திரக் கட்சியைக் கடுமையாக விமர்சித்து வருவதுடன், அரச தலைவருக்கு எதிராகவும் கருத்துகளை முன்வைத்து வருவதாலேயே அமைப்பாளர் பதவியிலிருந்து தூக்கப்பட்டார். என்று சு.கவின் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

மகிந்த அணியின் முக்கிய உறுப்பினர்களின் பட்டியலில் ரஞ்சித் டி சொய்சாவும் இருந்து வருவதால் அந்த அணிக்குப் பதிலடி கொடுக்கும் நடவடிக்கையாகவே மைத்திரி இதைச் செய்துள்ளார் என்று பேசப்படுகின்றது.

ஊழலுக்கு எதிராக வாள்வீச்சுப் பயணத்தை ஆரம்பித்திருந்த மைத்திரிபால சிறிசேன, சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்துவதற்காக கட்சிக்குள்ளும் தற்போது வாள்வீச்சை ஆரம்பித்துள்ளார் என்றும், கட்சிக்கு எதிராக செயற்படுபவர்களை அந்த வாள் பதம் பார்க்கும் என்றும் சு.கவின் செயற்பாட்டாளர் ஒருவர் தெரிவித்தார். (5)

வெளிநாடு செல்ல ரோஹிதவுக்கு அனுமதி

கொழும்பு, ஜன. 19

முன்னாள் பிரதி அமைச்சரும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரோஹித அபேகுணவர்தன வெளிநாடு செல்வதற்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சம்பத் விஜேரத்ன நேற்று முன்தினம் அனுமதித்தார்.

2004ஆம் ஆண்டு[illegible]கும் 2006ஆம் ஆண்டு[illegible]குமிடைப்பட்ட காலப்பகுதியில் 41.2 மில்லியன் ரூபா சொத்துகளைச் சட்டவிரோதமாகச் சேர்த்துள்ளார் என்று, ரோஹிதவுக்கு எதிராக இலஞ்சம் மற்றும் ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் எடுத்துக்கொள்ளப்பட்டபோது, பெப்ரவரி 18ஆம் திகதியிலிருந்து மார்ச் 15ஆம் திகதி வரையான காலப்பகுதியில் வெளிநாடு செல்லவேண்டியுள்ளதால் தமது சேவை பெறுநரின் கடவுச்சீட்டை விடுவிக்குமாறும் வெளிநாட்டுப் பயணத்தடையை தற்காலிகமாக நீக்குமாறும் அவர் சார்பில் முன்னிலையான அரச தலைவர் சட்டத்தரணி காலிங்க இந்ததிஸ்ஸவஜனால் கோரப்பட்டது. அதற்கமைய அவரின் கடவுச்சீட்டு விடுவிக்கப்பட்ட துடன், மார்ச் மாதம் 15ஆம் திகதி சாட்சிய விசாரணைகளுக்கான தினமாக அறிவிக்கப்பட்டது. (5)

பிரகீத் கடத்தல்

இராணுவத்தளபதியின் ஒத்துழைப்பைக் கோருகிறார் சந்தியா எக்னலிகொட

கொழும்பு, ஜன. 19

காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட தொடர்பான விசாரணைகளுக்கு உதவுமாறு அவரது மனைவி சந்தியா எக்னலிகொட, இராணுவத் தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவிடம், கோரிக்கை விடுத்துள்ளார்.

இராணுவத் தளபதியைச் சந்தித்து அவர், எழுத்து மூலமாக இந்தக் கோரிக்கையைக் கையளித்துள்ளார்.

2010ஆம் ஆண்டு பிரகீத் எக்னலிகொட காணாமல் போய், 8 ஆண்டுகளாகியும், அவரது நிலையைக் கண்டறிவதற்கான முயற்சிகளில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. பாதுகாப்புப் படைகள் ஒழுக்கமானது என்று மதிக்கிறேன். ஒரு சில நடவடிக்கைகளால் ஒட்டுமொத்த படைகளினதும், மதிப்பு பாழடிக்கப்படக் கூடாது.

பிரகீத் எக்னலிகொட காணாமல் ஆக்கப்பட்ட சம்பவத்துக்குப் பொறுப்பானவர்களை கண்டறியும் விசாரணைகளுக்கு இராணுவத் தளபதி ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள இராணுவத் தளபதி, எந்தவொரு விசாரணைகளுக்கும் இராணுவம் பக்கச் சார்பின்றி நிச்சயமாக ஒத்துழைப்பு வழங்கும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் தவறு செய்திருந்தால், அவர் உயர்நிலையில் இருந்தாலும், கீழ் நிலையில் இருந்தாலும், தண்டிக்கப்படுவார். குண்டர்களின் இராணுவத்தை என்னால் வழிநடத்த முடியாது என்றும் அவர் கூறியுள்ளார். (5)

'மிஸ் ஆன புக்'

பிணைமுறி மோசடி குறித்து நாடாளுமன்றத்தில் விவாதமொன்று வருமாயின் அதனை எதிர்கொள்ளத் தயாராகிய கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அதற்கு ஆதாரங்களைத் திரட்ட ஆரம்பித்தனராம்.

இதற்காகப் பிணைமுறி மோசடி நடக்கவேயில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுஜீவ சேனசிங்க எழுதிய புத்தகம் தேவைப்பட்டதாம். கூட்டு எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பிலுள்ள அனைத்து புத்தகக் கடைகளையும் அலசிப் பார்த்தனராம். ஒரு கடையில் கூட அந்தப் புத்தகம் கிடைக்கவில்லையாம்.

புத்தகங்கள் அனைத்தும் விற்கப்பட்டுவிட்டனவா அல்லது அவை பதிப்பகத்தாரால் மீளப் பெறப்பட்டுவிட்டனவா என்பது பற்றித் தெரியவில்லையாம்.

பிணைமுறி விவகாரத்தில் மோசடி ஒன்றும் நடக்கவேயில்லை என்று அந்தப் புத்தகத்தில் சுஜீவ குறிப்பிட்டிருந்தமை தெரிந்ததே.

மைத்திரியின் சகோதரர் பசில் ராஜபக்ச சந்திப்பு

பொலன்னறுவைக்கு சென்றிருந்த சிறிலங்கா பொதுமக்களின் முன்னணியின் தேசிய அமைப்பாளரான முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்சவை, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் சகோதரர் டட்லி சிறிசேன அவசரமாக சந்தித்துள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது. (5)

போர்க் காலத்தில் வழங்கிய பயிற்சிக்கு பாகிஸ்தானுக்கு நன்றி கூறிய மைத்திரி

கடந்த போர்க் காலத்தில் இலங்கை இராணுவத்தினருக்கு பாகிஸ்தான் பயிற்சிகள் வழங்கியமைக்கு நன்றி தெரிவிப்பதாக, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, பாகிஸ்தான் இராணுவத்தின் பதவிநிலை பிரதானி ஜெனரல் கமார் ஜாவேத் பஜ்வாவிடம் தெரிவித்தார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த பாகிஸ்தான் தளபதியுடன், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் சந்திப்பு நடத்தியிருந்தார். சந்திப்புத் தொடர்பில் அரச தலைவர் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நாட்டில் அமைதியான சூழ்நிலை நிலவி வருவதன் காரணமாக இலங்கை பெரிய அபிவிருத்திகளை அடைந்து வருவதை அவதானிக்க முடிந்துள்ளதாக பாகிஸ்தான் இராணுவத்தின் பதவிநிலை பிரதானி ஜெனரல் கமார் ஜாவேத் பஜ்வா தெரிவித்தார்.

ஏனைய உலக நாடுகள் பாகிஸ்தானிடமிருந்து விலகியிருந்த சந்தர்ப்பத்தில் இலங்கை கிரிக்கெட் குழு பாகிஸ்தானுக்கு மேற்கொண்ட வரலாற்றுரீதியான பயணத்தை நினைவு கூர்ந்த ஜெனரல் கமார் ஜாவேத் பஜ்வா இலங்கை பாகிஸ்தானின் நட்பு நாடாகும் என்றும் குறிப்பிட்டார்.

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையே நிலவும் நீண்டகால தொடர்புகளை இதன் போது நினைவுகூர்ந்த மைத்திரி, போர்க் காலத்தில் இலங்கை இராணுவத்தினருக்கு பயிற்சி வழங்குதல் போன்ற பல உதவிகளை நல்கியமைக்கு நன்றி தெரிவித்தார். இலங்கையில் ஏற்பட்ட இடர் நிலமைகளின் போது பாகிஸ்தானிடமிருந்து கிடைக்கப்பெற்ற அன்பளிப்புகளுக்கும் உதவிகளுக்கும் நன்றி தெரிவித்த அரச தலைவர், இரு நாடுகளுக்குமிடையேயும் காணப்படும் தொடர்புகளை மேலும் மேம்படுத்தி வலுப்படுத்தவும் விருப்பம் தெரிவித்தார். ஜக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையில் பாகிஸ்தான் இலங்கைக்கு வழங்கிய ஒத்துழைப்புக்கும் மைத்திரிபாராட்டுத்தெரிவித்தார்.

பாகிஸ்தானின் தற்போதைய பாதுகாப்பு நிலமை தொடர்பாக அரச தலைவருக்குத் தெளிவுபடுத்திய பாகிஸ்தானின் பதவிநிலை பிரதானி, பாகிஸ்தானில் அமைதியை உறுதிசெய்வதற்கு தற்போது பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், வெகு விரைவில் அதற்கான பயன்களைப் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் தெரிவித்தார்.

இலங்கை இராணுவத்தின் தொழிற் தகைமைகளைப் பெரிதும் பாராட்டிய பாகிஸ்தானின் இராணுவப் பதவிநிலை பிரதானி இலங்கையின் பாதுகாப்புத்துறை மேம்பாட்டுக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் வழங்க தனது நாடு தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார் - என்றுள்ளது. (5)

see more news in NEWUTHAYAN.COM

பிணைமுறி விவகாரம்

கண்டறியப்பட்ட விடயங்களை மாற்றினால் நடவடிக்கை

மைத்திரிபால சிறிசேன உறுதியாகத் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 19

பிணைமுறி ஆணைக்குழு சமர்ப்பித்துள்ள சாட்சிகள் மற்றும் மேற்கொள்ளப்பட்டுள்ள விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ள விடயங்களில் மாற்றங்கள் மற்றும் மேலதிகத் தவறுகள் கண்டறியப்பட்டால் அவற்றை மேற்கொண்டவர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

பிணைமுறி விசாரணை அறிக்கை மற்றும் பாரிய ஊழல் மோசடிகள் தொடர்பான விசாரணை அறிக்கை ஆகியவற்றில் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் குறித்து ஆராய்வதற்கான கலந்துரையாடல் அரச தலைவர் அலுவலகத்தில் மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்றுமுன்தினம் மாலை நடைபெற்றது.

சட்டமா அதிபர், மத்திய வங்கி ஆளுநர், ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட அதிகாரிகள்கலந்து கொண்ட இந்தக் கலந்துரையாடலில் பிணைமுறி ஆணைக்குழு அறிக்கையில்முன்வைக்கப்பட்டசிபாரிசுகளைநடைமுறைப்படுத்துவது தொடர்பாகக் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

மேற்கொள்ளப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறவேண்டியவர்களுக்கு எதிராகக் குற்றவியல் வழக்குத் தொடுத்தல், அரசுக்கும் ஊழியர் சேமலாப நிதியத்துக்கும் ஏற்பட்டுள்ள இழப்பீட்டை மீளப்பெறும் பொருட்டுச் சட்ட ரீதியற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகச் சிவில் வழக்குத் தொடுத்து இழப்பீட்டைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுத்தல் மேலும் பல்வேறு அரச நிறுவனங்களில் வேலைசெய்யும் இந்தக் குற்றத்துடன் தொடர்பான சட்டரீதியற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஆள்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் போன்ற விடயங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன.

ஒருங்கிணைப்பு

குற்றவியல் வழக்குத் தொடர்பில் சட்டமா அதிபரினாலும் ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழு பணிப்பாளர் நாயகத்தினாலும் மேற்கொள்ளப்படும். இந்தக் குற்றத்துடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புடையவர்களுக்கு எதிராகத் தண்டனைச்சட்டக்கோவை, பொதுச் சொத்துக்கள் சட்டம், பணச் சலவைச் சட்டம் போன்ற சட்டங்கள் பயன்படுத்தப்படும்.

இடம்பெற்றுள்ள குற்றம் தொடர்பில் மேலதிக விசாரணை செய்யும்போது சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு ஏற்ப குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தில்தனியானபிரிவொன்றை ஆரம்பிக்கவும் இலங்கை மத்திய வங்கி நிதிப் புலனாய்வுப் பிரிவினதும் செலாவணிக் கட்டுப்பாட்டாளரினதும் உதவியைப் பெற்றுக் கொள்ளவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கியின் ஊடாகச் சட்டக்கணக்காய்வொன்றை மேற்கொள்ளவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

விசாரணை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அனைத்து நிறுவனங்களுக்கிடையேயும் சிறந்த ஒருங்கிணைப்பை மேற்கொண்டு ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விசாரணை சார்ந்த பொருள்கள் மற்றும் சாட்சிகளை நேரடியாகக் கவனத்திற்கொள்ளக் கூடியவாறு ஊழல் மோசடி விசாரணை ஆணைக்குழு சட்டத்தைத் திருத்துவதற்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

குற்றவியல் நடவடிக்கை

குற்றவியல் நடவடிக்கைகளில் பொறுப்புக்கள் தொடர்பில் ஆள்களுக்கு எதிராகச் சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கும் சில நிறுவனங்களில் ஏற்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பில் சட்ட ரீதியான பொறுப்புக்களைக் கவனத்திற்கொள்ளவும் பரிந்துரைக்கப்பட்டது.

அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு மற்றும் இழப்பீட்டை அறவிடுவதற்குச் சிவில் வழக்குத் தொடரப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்ற போதும் சிவில் வழக்குக்கு நீண்ட காலம் எடுக்கும் என்பதால் இத்தகைய வழக்குகளுக்காகச் சிவில் வழக்கு ஏற்பாடுகள் செயன்முறையில் திருத்தங்களைக் கொண்டு வருவது தொடர்பாகச் சட்ட மா அதிபர் திணைக்களம் கவனம் செலுத்தும்.

பேர்ப்சுவல் ட்ரசரீஸ் நிறுவனம் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்கள் மற்றும் வேறு ஆள்களினால் பிணைமுறி கொடுக்கல் வாங்கல் ஊடாகச் சட்ட ரீதியற்ற வகையில் திரட்டப்பட்ட சொத்துக்களைத் தடை செய்வதற்குச் சட்ட மா அதிபர் கவனம் செலுத்திவருகிறார்.

அரசமைப்பை மீறாத சட்டம்

வழக்குச் செயன்முறைகளுக்கான தாமதம் காரணமாக அரசுக்கும் ஊழியர் சேமலாப நிதியத்துக்கும் அறவிடப்பட வேண்டிய பணத்தை அடைப்பதற்கு அரசமைப்பை மீறாத வகையில் நாடாளுமன்ற சட்டமொன்றை நிறைவேற்ற ஆணைக்குழு பரிந்துரைத்துள்ளது.

இலங்கையில் நிதிச் சட்டம், பிணைமுறிக் கட்டளைச் சட்டம் மற்றும் தேசிய திறைசேரி உறுதிமுறி கட்டளைச் சட்டம் போன்ற சட்டங்களைத் திருத்தவும் பரிந்துரைக்கப்பட்டது. ஊழியர் சேமலாப நிதியத்தின் நிதியைப் பயன்படுத்தி 2008 - 2014 காலப்பகுதியில் மத்திய வங்கியின் திறைசேரிப் பிணைமுறி மற்றும் உறுதிமுறிகள் கொடுக்கல்வாங்கல்களைக் கண்டறிவதற்குச் சட்டக் கணக்காய்வொன்றைச் செய்யவும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அர்ஜுனுடன் தொடர்பு கொண்ட எம்.பிக்கள்

அரச தொழில்முயற்சி தொடர்பான நாடாளுமன்றக் குழுவில் உறுப்புரிமை வகிக்கும் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தக் குழுக்களின் ஊடாகத் திறைசேரிப் பிணைமுறி மற்றும் பேர்பசுவல் ட்ரசரீஸ் நிறுவனம் தொடர்பான விசாரணை மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் அந்த நிறுவனத்தின் தலைவர் அர்ஜுன் அலோசியசுடன் தொடர்பாடல்களை மேற்கொண்டமையும் தெரியவந்துள்ளது.

இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்குச் சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டு வரப்படவுள்ளதுடன், அந்தக் குழுவின் உறுப்பினர்களுக்குச் சிறப்புநன்னடத்தை முறைமையொன்றை விதிப்பது தொடர்பில் சபாநாயகரின்கவனத்துக்குக்கொண்டு வரவும்பரிந்துரைக்கப்பட்டது.

இத்தகைய குற்றங்கள் இனியும் இடம்பெறுவதைத் தவிர்ப்பதற்கு மத்திய வங்கியில் அமைந்துள்ள அரச கடன்திணைக்களத்தையும் நிதிச் சபையையும் உரிய முறையில் மறுசீரமைக்கவும் வகைகூறலை உறுதி செய்யவும் நடவடிக்கை எடுக்குமாறும் அரச தலைவர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். (5)

திருடர்களுக்கு தண்டனை நிச்சயம்

மைத்திரிபால விடாப்பிடி

கொழும்பு, ஜன. 19

பிணைமுறி விசாரணை அறிக்கையிலும், மகிந்த காலத்து ஊழல் மோசடி அறிக்கையிலும் முன்வைக்கப்பட்ட நடவடிக்கைகளையும் உரியமுறையில் நடைமுறைப்படுத்தித் திருடர்களுக்குத் தண்டனை வழங்கவும் திருடப்பட்ட மக்கள் பணத்தை மீண்டும் அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

எல்பிடிய பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

அரசியல் விரோதிகள் எதனைக் கூறியபோதும் நான் நியமித்த ஆணைக்குழு இந்தநாட்டில் இதுவரையில் நியமிக்கப்பட்ட ஆணைக் குழுக்களில் மிகவும் தூய்மையாகவும், வெற்றிகரமாகவும் செயற்பட்ட ஆணைக்குழுவாகும். ஆணைக்குழுவின் எதிர்கால நடவடிக்கைகளுக்கு மூன்று புதிய சட்டங்களை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மீண்டும் மத்திய வங்கியில் அத்தகைய ஊழல், மோசடி நடைபெறாதிருப்பதை உறுதி செய்தல், தேவையான புதிய சட்டங்களை ஆக்குதல், களவாடப்பட்ட மக்கள் பணத்தை உடனடியாக மீண்டும் பெற்றுக்கொள்ளுதல் போன்றனவே அவையாகும்.

இலஞ்சம், ஊழல், மோசடி விசாரணைச் சட்டத்தைத் திருத்துவதற்கானநடவடிக்கைகள்தற்போதுநிறைவடைந்துள்ளன. அமைச்சரவைக் கூட்டத்தில் நான் உறுப்பினர்களுக்குச் சிறப்பு உரை நிகழ்த்தினேன். மக்களின் பணத்தைத் திருடுதல், அரச சொத்துக்களை முறையற்றுப் பயன்படுத்துதல், மக்களுக்குத் தொந்தரவுகளை ஏற்படுத்துதல், தேச விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுதல் போன்ற பாவக் காரியங்களின் விளைவுகளை விளக்கியதுடன், அவற்றிலிருந்து விலகி முன்னோக்கிச் செல்ல வேண்டியதன் தேவையைச் சுட்டிக்காட்டினேன். எதிர்வரும் 10ஆம் திகதி உள்ளூராட்சித் தேர்தலில் அனைவரிடமும் எதிர்பார்ப்பதும் அத்தகைய தூய ஆட்சியையே யாகும் - என்றார். (5)

மைத்திரிக்கு எதிராக மகளிர் மனுக்கள்

கொழும்பு, ஜன. 19

பெண்களுக்கு மதுபான விற்பனை நிலையத்தில் பணியாற்றவும் மதுவாங்கவும் வழங்கப்பட்டிருந்த அனுமதியைத் தடை செய்த அரச தலைவரின் கருத்தை எதிர்த்துப் பெண்கள் சிலர் உயர் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளனர்.

இலங்கையில் பெண்கள் மதுபான விற்பனை நிலையங்களில் பணியாற்றவோ, மதுபானம் வாங்கவோ விதிக்கப்பட்ட தடையைச் சுமார் நாற்பது ஆண்டுகளின் பின் நிதியமைச்சு விலக்கி அரசிதழ் அறிவித்தல் விடுத்திருந்தது.

நிதியமைச்சின் அறிவித்தலை இல்லாமல் செய்வதாக அரச தலைவர் அறிவித்தார்.

இதையடுத்து, தமது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டு, அரச தலைவரின் இந்தத் தடை குறித்து 21 வயதுக்கு மேற்பட்ட 7 பெண்கள் உயர் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளனர். (5)

முல்லை, கிளிநொச்சியில் அஞ்சல் வாக்காளர் குறைவு

கொழும்பு, ஜன. 19

உள்ளூராட்சித் தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு, முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்தே, குறைந்தளவிலான விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சித் தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு, 6 லட்சத்து ஆயிரம் அரச பணியாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டிருந்தன. அவற்றில், 41 ஆயிரம் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன.

அஞ்சல் மூல வாக்களிப்புக்கான குறைந்தபட்ச விண்ணப்பங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து அனுப்பப்பட்டன. அங்கிருந்து, ஆயிரத்து558விண்ணப்பங்களும், அதையடுத்து, கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து 2 ஆயிரத்து 208 விண்ணப்பங்களும், கிடைத்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார். (5)

எல்லை நிர்ணய அறிக்கை பெப்.4ஆம் திகதி கையளிப்பு

மாகாண சபைகளின் எல்லை நிர்ணய அறிக்கை எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி அரசிடம் கையளிக்கப்படவுள்ளதாக மாகாண சபைகளின் எல்லை நிர்ணயத்தை மேற்கொள்ள நியமிக்கப் பட்ட குழுவின் தலைவர் கே.தவலிங்கம் தெரிவித்தார்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதி மாகாண சபைகளின் எல்லை நிர்ணயம் தொடர்பாக ஐவர் அடங்கிய குழுவை நியமித்திருந்தார். இந்தக் குழு எல்லை நிர்ணயத் தயாரிப்புப் பணிகளை முன்னெடுத்து வருகின்றது.

இது தொடர்பில் குழுவின் தலைவர் கே.தவலிங்கம் தெரிவித்ததாவது,

எமது குழுவுக்கு 4 மாதங்கள் கால அவகாசம் வழங்கப்பட்டது. குறுகிய காலப் பகுதியில் 25 மாவட்டங்களிலிருந்தும் பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ள முடிந்தது.

மூன்று மொழிகளிலும் அறிக்கை தயாரிக்கும் நடவடிக்கை தற்சமயம் இடம்பெறுகின்றது.

எமது குழுவின் அறிக்கை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் பைசர் முஸ்தபாவிடம் எதிர்வரும் 4ஆம் திகதி சுதந்திரதினத்தன்று கையளிக்கப்படவுள்ளது - என்றார். (5)

தொடர்ச்சி...

காய்ச்சலால்...

மாதக் குழந்தை ஒன்று சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தது.

கரவெட்டியைச் சேர்ந்த நி.அமிஸ்ரன் என்ற குழந்தையே உயிரிழந்தது.

பருத்தித்துறை மருத்துவமனையில் குழந்தை நேற்று முன்தினம் சேர்க்கப்பட்டது. மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது. சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் குழந்தை உயிரிழந்தது.

விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ற-4,26)

வேட்புமனு நிராகரிப்புக்கு எதிரான மனுக்கள் இன்று பரிசீலனை

கொழும்பு, ஜன. 19

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காகத் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமையைச் சவாலுக்குட்படுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுக்கள் 12ஐயும் இன்று பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வதற்குமேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர் பிரீத்தி பத்மன் சூரசேன, நீதியரசர் சிரான் குணரத்ன முன்னிலையில் மனு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, மனுக்களில் கோரப்பட்டுள்ள விடயங்களின் ஒற்றுமைத் தன்மையின் அடிப்படையில் அவற்றை வகைப்படுத்தி பரிசீலனைக்கு எடுப்பதற்கானதினமாக இன்றைய நாள் அறிவிக்கப்பட்டது.

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியால் மஹரகம நகரசபைக்குப் போட்டியிடுவதற்காகத் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுவில் பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை கோரப்பட்டிருந்தமையைவிடகுறைவாகஇருந்தமையால் வேட்புமனு நிராகரிக்கப்பட்டதாக தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்திருந்தது. இதனைச் சவாலுக்கு உட்படுத்தியே மனுத் தாக்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தமைகுறிப்பிடத்தக்கது. (5)

முப்படைத் தளபதிகளுடன் பாக். தளபதி சந்திப்பு

கொழும்பு, ஜன. 19

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் இராணுவத் தளபதி ஜெனரல் ஜாவிட் பஜ்வா முப்படைகளின் தளபதிகளையும் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியுள்ளார்.

இராணுவ அதிகாரிகளுக்குப் பாகிஸ்தானில் வழங்கப்பட்டு வரும் பயிற்சிகள் தொடர்பாக இந்தப் பேச்சுக்களில் கூடுதல் கவனம்செலுத்தப்பட்டது. மேலும்பயிற்சிவாய்ப்புகளை அதிகரிப்பது குறித்தும் பேசப்பட்டுள்ளது. (5)

மைத்திரி மறுத்தாலும் அவரை விடமாட்டோம்

அடுத்த அரச தலைவர் தேர்தலிலும் சு.கவின் வேட்பாளர் அவரே

கொழும்பு, ஜன. 19

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவே போட்டியிடுவார். அவர் விரும்பாவிட்டாலும் நாங்கள் அவரை நியமிப்போம் என்று அரச தொழில் முயற்சிகள் இராஜாங்க அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சித் தலைமையகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது.

அரச தலைவர் முறைமையில் திருத்தம் கொண்டு வரப்படாவிட்டால் சுதந்திரக் கட்சியின் அரச தலைவர் வேட்பாளராக மைத்திரிபால சிறிசேனவே போட்டியிடுவார். அதில் எந்த மாற்றமும் இல்லை. அவர் முடியாது என்றாலும் நாங்கள் அவருக்கு அழுத்தம் கொடுப்போம். அரசமைப்பில் திருத்தம் கொண்டுவரும்போது நாடாளுமன்றத் தேர்தல் முறையிலும் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும். அதனை மறைத்துக் கொண்டு அரச தலைவர் முறையில் மாத்திரம் திருத்தம் கொண்டு வருவதற்கு நாங்கள் அனுமதிக்க மாட்டோம்.

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் தீர்மானங்கள் நாட்டுக்கு நன்மையை ஏற்படுத்தும் என்ற நம்பிக்கை மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. அதனால் அரச தலைவரின் திட்டங்களை மேற்கொள்ள அவருக்கு மேலுமொரு சந்தர்ப்பம் வழங்கப்படவேண்டும் என்ற நிலைப்பாடு மக்கள் மத்தியில் அதிகரித்து வருகின்றது - என்றார். (5,61)

ஐ.தே.கவால் ஆபத்து பதறுகிறார் விஜயதாச

கொழும்பு, ஜன. 19

ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்தே எனக்கு அச்சுறுத்தல் இருக்கின்றது. இவ்வாறு முன்னாள் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எனக்கு வழங்கப்பட்டிருந்த அமைச்சர் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஏழு பேரில் ஐந்து பேர் மீள அழைக்கப்பட்டுள்ளனர். நான் அமைச்சராக இருந்த காலத்திலேயே எனக்கு ஏழு பேர் பாதுகாப்பு வழங்கியிருந்தனர். பாதுகாப்பு நீக்கப்பட்டதில் பிரச்சினையில்லை. எனினும் அனைவருக்கும் ஒரே விதமான அணுகுமுறை பின்பற்றப்பட வேண்டும். ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட காரணத்தினால் எனது அமைச்சுப் பதவி பறிக்கப்படவில்லை. ரவி கருணாநாயக்க இன்று நாடாளுமன்ற உறுப்பினர் மட்டுமே. எனினும் அவருக்குப் பதினொரு பேர் பாதுகாப்பு வழங்குகின்றனர். ரவி கருணாநாயக்கவின் பாதுகாப்பில் கைவைக்க வேண்டாம். விஜயதாசவின் பாதுகாப்பைக் குறையுங்கள் என்று பொலிஸ் மா அதிபர் கூறியதாக எனக்குத் தகவல் கிடைத்துள்ளது.

எம்.ஏ.சுமந்திரன் ஓர் நாடாளுமன்ற உறுப்பினர். அவருக்கு உயிர் அச்சுறுத்தல் கிடையாது. எனினும் சுமந்திரனுக்குச் சிறப்பு அதிரடிப்படைப் பாதுகாப்பு வழங்கப்படுகின்றது. மனோ கணேசனுக்குச் சிறப்பு அதிரடிப்படை பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. எனது பாதுகாப்பைக் கூட்டுமாறு நான் கோரப்போவதில்லை. என்னைத் தாக்கினால் அவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களேயாவர். ஐக்கிய தேசியக் கட்சியிடமிருந்தே எனக்கு அச்சுறுத்தல் காணப்படுகின்றது - என்றார். (5)

கோத்தாவுக்கு அமெரிக்க குடியுரிமை இருக்கிறதா?

விசாரணை நடத்தப்படும் என்கிறார் அமைச்சர் நாவின்ன

கொழும்பு, ஜன. 19

முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச அமெரிக்கக் குடியுரிமை கொண்டவரா இல்லையா என்பதைக் கண்டறிய விசாரணைகள் நடத்தப்படும் என்று உள்நாட்டு விவகாரங்களுக்கான அமைச்சர் எஸ்.பி.நாவின்ன தெரிவித்தார்.



முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கீதா குமாரசிங்க தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட விசாரணை போன்று, கோத்தபாய ராஜபக்ச தொடர்பாகவும் விசாரணைகள் முன்னெடுக்கப்படும்.

குடியுரிமை கொண்டவர்கள் மாத்திரமே, நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு, தெரிவு செய்யப்பட முடியும் என்றும், இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் தேர்தலில் போட்டியிட முடியாது என்றும் அவர் தெரிவித்தார்.

அடுத்த அரச தலைவர் தேர்தலில் கூட்டு எதிரணியின் வேட்பாளராகக் கோத்தபாய ராஜபக்சவே போட்டியிடுவார் என்று, கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரொசான் ரணசிங்க கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (5)

அஞ்சல் வாக்குச்சீட்டுகள் விநியோகம் ஆரம்பம்

கொழும்பு, ஜன. 19

உள்ளூராட்சித் தேர்தலுக்கான அஞ்சல் வாக்குச்சீட்டுகள் விநியோகம் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

பொலிஸாரின் பாதுகாப்புடன், சம்பந்தப்பட்ட அரச நிறுவனங்களிடம் வாக்குச்சீட்டுகள் ஒப்படைக்கப்பட்டன.

5 ல்ட்சத்து 60 ஆயிரத்து 536 அரச பணியாளர்கள் அஞ்சல் மூலம் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

எதிர்வரும், 22ஆம், 24ஆம், 25ஆம் நாள்களில் அஞ்சல் வாக்களிப்பு இடம் பெறவுள்ளது. (5)

மேர்வின் சில்வாவாக 'ரணில்' மகிந்த அணியினர் கிண்டல்

கொழும்பு, ஜன. 19

மேர்வின் சில்வா நாடாளுமன்றில் இல்லாத குறையைத் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தீர்த்துவைத்தார் என்று கூட்டு எதிரணி உறுப்பினர்கள் கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது கிண்டலடித்துள்ளனர்.

கூட்டு எதிரணியின் கட்சித் தலைவர்களின் கூட்டம் நேற்று முன்தினம் முற்பகல் கொழும்பில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையில் இடம்பெற்றது. இதன்போதே மகிந்த அணி உறுப்பினர்கள் ரணிலை மேற்கண்டவாறு விமர்சித்துக் கருத்து வெளியிட்டுள்ளனர். இக்கருத்துக்கு முன்னாள் அரச தலைவர் மகிந்தவும் சிரித்துக்கொண்டே, மேர்வின் சில்வாவை விடவும் மோசமாகத்தானே ரணில் நடந்து கொண்டார் என்று கிண்டலடித்தார் என்றும் தெரியவந்துள்ளது.

தேர்தல் செயற்பாடுகள், சமகால அரசியல் நிலவரங்கள் மற்றும் மத்திய வங்கி பிணைமுறி மோசடி உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பில் கூட்டத்தில் ஆராயப்பட்டது. (5)

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111

10ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்
இராசப்பு அல்பிரட்
அருமைநாயகம்



மலர்வு
04.02.1944

உதிர்வு
19.01.2008

நெஞ்சம் மறப்பதில்லை
உங்கள் நினைவுகளினால்!
அழுது புலம்புகின்றோம்
உங்கள் பிரிவினால்
மாறாது என்றும் உங்கள்
- நினைவுகள்

மேரி இல்லம்
கரவெட்டி வடக்கு, வதிரி.

குடும்பத்தினர்

முச்சக்கர வண்டி ஒன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளல் - அறிவுரைப் பத்திரம் இலங்கை புகையிரத சேவை

மூன்று மாத காலத்திற்காக புகையிரத ஒட்ட பணியாளர் குழு யாழ்ப்பாண புகையிரத நிலையத்திற்கும், தங்குமிட வதிவிடத்திற்கும் இடையே நாளாந்தம் போக்குவரத்து செய்வதற்கு முச்சக்கர வண்டி உரிமையாளர்களிடமிருந்து விலைமனு கோரப்படுகின்றது.

இதற்குரிய அறிவுறுத்தல் மற்றும் கேள்விப்பத்திரம் புகையிரத நிலையப் பொறுப்பதிகாரி - யாழ்ப்பாணம் அலுவலகத்தில் மற்றும் போக்குவரத்து அதிகாரி - அநுராதபுரம் அலுவலகத்தில் 22.01.2018 ஆம் திகதியில் இருந்து 28.01.2018 ஆம் திகதி வரை இலவசமாக விநியோகிக்கப்படும்.

இது தொடர்பான சகல விவரங்களையும் பின்வரும் தொலைபேசி இலக்கங்களிற்கு அழைத்து பெற்றுக்கொள்ள முடியும்.

பிரதம புகையிரத நிலையப் பொறுப்பதிகாரி யாழ்ப்பாணம்.
021 222 2371
போக்குவரத்து அதிகாரி அலுவலகம் - அநுராதபுரம்
025 223 5005

பிரதேச போக்குவரத்து அதிகாரி,
பிரதேச போக்குவரத்து அதிகாரி அலுவலகம், அனுராதபுரம்.

(in 5571)

31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
டானியல் டேவிட்
(தாவீது)
(புகையிரதப் பகுதி முன்னாள் பணியாளர்)

கண்ணியம் மிக்க கணவனாக பாசமிகு தந்தையாக
பொன்னிகர் உறவுக்கு உரித்தாளனாக
நயமுறும் நகைச்சுவையால் ஈர்ப்பவரே
ஈற்றிலே மௌனத்தால் உறவாடி மௌனித்தாய்
போற்றியே தொழுகின்றோம் உம் தியாகத்தை
ஆற்றாது புலம்பியே மெழுகென கரைகின்றோம்
விண்ணதில் அமைதிபெற இயேசுவே அருள்தாரும்.

நினைவகலா துயருடன்
குடும்பத்தினர்.
28, ஆனந்தன் வடலி வீதி,
கொழும்புத்துறை.

மலர்வு
05.05.1931

உதிர்வு
20.12.2017

(CS 13012)(11)

நினைவஞ்சலி

38ஆம் ஆண்டு நினைவு 37ஆம் ஆண்டு நினைவு



மலர்வு
01
.
11
.
1980

மலர்வு
01
.
02
.
1981

திரு.திருமதி
சின்னத்துரை வள்ளிப்பிள்ளை

அன்பாலும் பண்பாலும் அரவணைத்து
எம் மனதில் குடிகொண்டிருக்கும் அன்புத் தெய்வங்களே
என்றும் உங்கள் பாதம் பணிந்து ஆசி வேண்டுகின்றோம்.

குமரகோட்டம்,
கோண்டாவில்.

(AJA 9082) (14,17)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

---

25 ஆவது ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
26
.
04
.
1926

மறைவு
19
.
01
.
1993

அமரர் இ.ச.பேரம்பலம் (ESP நிறுவன ஸ்தாபகர்)
(வாரிவளவு, காரைநகர்)

அன்புடன் எம்மை அரவணைத்து
ஆர்வமுடன் எம்மைக் காத்து
இன்முகமதாய் இனிய ஆறுரைகள் கூறி
ஏடேற வணிகத்தில் வழிகளில் பல காட்டி
உன்னதமான வாழ்வை மெக்களிக்க
ஊக்கமுடன் உழைத்து வந்தீர்
எண்ணிய சேவைகள் பல செய்து
ஏற்றமுற வைத்தீர்! எம்மையெல்லாம்
ஐயுறவு ஒதுமின்றி எம் வாழ்வு மலர்ந்திட
ஒற்றுமையாய் எம்மை அணைத்து
ஓதரிய பாடல் கலைகள் யாவும் புகட்டி
ஔவையின் அருஞ்சுரையும் இனிதேதந்து
வையத்துள் வாழ்வாங்கு வாழ வழிசமைத்த
தெய்வமே எங்கள் அன்புத் தந்தையே!
எம்மைவிட்டு விண்ணுலகு சென்று
ஆண்டுகள் இருபத்தைந்து ஆகின்றிட்ட போதும்
மறக்குமா எம் நெஞ்சம்!

என்றென்றும் உம் நினைவில் வாழும்
குடும்பத்தினர்.

மணிஓசை,
383, கோயில் வீதி,
நல்லூர்.

ESP. நாகரத்தினம் சக நிறுவனம்
54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(AJA/5569)(11)

அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
19
.
10
.
1922

மறைவு
24
.
12
.
2017

கடந்த 24.12.2017 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த எமது குடும்பத் தலைவி

அமரர் முருகேசு செல்லம்மா

அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்து கலந்து அனுதாபம் தெரிவித்-தவர்களுக்கும் தொலைபேசி வாயிலாக ஆறுதல் கூறியவர்களுக்கும், குடும்பம் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (19.01.2018) வெள்ளிக்கிழமை காலை 9மணியளவில் கீரிமலை தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (20.01.2018) சனிக்கிழமை காலை 7 மணியளவில் அன்னாரின் வற்றாப்பளை இல்லத்திலும் அதனைத் தொடர்ந்து மதியபோசனம் வற்றாப்பளை கண்ணகி அம்மன் கோயில் அன்னதான மடத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வற்றாப்பளை,
முள்ளியவளை.

(AVA/246)(11,17)

குடும்பத்தினர்.
024 324 4299, 071 845 7306,
077 089 1776

இராணுவ முகாம் அறிவித்தல் பலகையில் பிழை

யாழ்ப்பாணம், ஜன.19

பூநகரி இராணுவமுகாம் ஒன்றில் வைக்கப்பட்டிருக்கும் பெயர்ப்பலகையில் தமிழ்மொழி எழுதப்பட்ட விதம் குறித்து பிரதேச வாசிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

குறித்த பெயர்ப்பலகையில் உட்பிரவேசிப்பது தவைரயறுக்கப்படபிரதேசம என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உள்ளே பிரவேசிப்பது வரையறுக்கப்பட்ட பிரதேசம் என்ற வாசகமே இவ்வாறு பிழையாக எழுதப்பட்டுள்ளது. இதில் தமிழ் எழுத்துப் பிழையும், சொற்பிழையும் உள்ளது. உட்புகுந்து என்ன சொற்றொடர் என்ன என்றே புரியவில்லை. தமிழர்கள் வாழும் பிரதேசத்தில் இவ்வாறு தமிழ்மொழி கொச்சைப்படுத்தப்பட்டிருப்பது மிகுந்த கவலையைத் தருகின்றது. எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதனை உரியமுறையில் எழுத்துப் பிழைகளின்றி எழுதி காட்சிப்படத்த வேண்டும் என்று பிரதேசவாசிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (ய-21)

விளையாட்டுத் திடல்களை அமைக்கத் தேவையான நிதி இன்னமும் வந்துசேரவில்லை

யாழ்ப்பாணம், ஜன.19

தேசியரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் விளையாட்டுத் திடல்களை அமைக்கும் செயல்திட்டத்தை வடக்கு மாகாணத்தில் முழுமையாக்குவதுக்குத் தேவையான நிதி இன்னமும் கொழும்பு அமைச்சிடமிருந்து முழுமையாகக் கிடைக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

ஒவ்வொரு மாவட்டத்திலும் விளையாட்டுத் துறையை அபிவிருத்தி செய்வதுக்கு கடந்த ஆண்டில் சிறப்பு செயல் திட்டம் ஒன்று அரசினால் முன்னெடுக்கப்பட்டது. மாவட்டத்தில் உள்ளக விளையாட்டு மைதானம், நீச்சல் தடாகம், உள்ளக அரங்கு ஆகிவற்றை அமைக்கும் செயல்பாடாக இது அமைந்தது. இது வடக்கு மாகாணத்திலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் துரையப்பா விளையாட்டரங்கு அமைக்கப்பட்டது. இதில் நீச்சல்தடாகம், உள்ளக விளையாட்டரங்கு ஆகியவற்றை அமைப்பதுக்கு இடங்களை இனம்காணவேண்டிய தேவை இருந்தது. அதுக்கு 300 மில்லியன்வரையில் தேவை. ஆனால் இதில் உள்ளக விளையாட்டரங்கு அமைப்பதுக்கான சாத்தியமே நிலவுகின்றது. இதுக்கு 175 மில்லியன் ரூபா தேவை என்று தெரிவித்து கொழும்பு அமைச்சர் சபைக்கு கோரிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்திலும் இந்த செயல்பாடு மேற்கொள்ளப்பட்டது. ஆனால் மைதானம் அமைப்பதுக்கான நிதி இன்னமும் கிடைக்கவில்லை. ஏனைய இரண்டு செயல்பாடுகளும் நிறைவடையும் தருவாயில் உள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 2018ஆம், 19ஆம், 20ஆம் ஆண்டுகளில் இந்த வேலைத் திட்டங்கள் நிறைவுபெற வேண்டும். ஆனால் நிதிகிடைக்கவில்லை. இதுதொடர்பில் உரியவர்களுக்கு கோரிக்கைவிடுக்கப்பட்டு வருகின்றது-என்று தெரிவிக்கப்பட்டது. (ய-ரி)

முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்டுள்ள 64பேர் கடனாளிகள்!

வடக்கு சமூகசேவைகள் அமைச்சுமீது விசனம்

வவுனியா, ஜன.19

சமூக சேவைகள் அமைச்சினால் மலசல கூடத்துக்கான இறுதிக்கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்படாத காரணத்தினால் வவுனியா மாவட்டத்தில் முள்ளந் தண்டு வடம் பாதிக்கப்பட்ட 64 பேர் கடன்சுமைகளுக்கு மத்தியில் வாழ்ந்து வருகின்றனர். எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுதொடர்பாக மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

2015ஆம் ஆண்டு, சிறப்புத் தேவைக்குட்பட்ட முள்ளந் தண்டு வடம் பாதிக்கப்பட்ட வர்களுக்கென மலசல கூடங்களை அமைப்பதுக்கு வடக்கு மாகாண சமூக சேவைகள் அமைச்சு முடிவு செய்தது. அதுக்கான நிதி ஒதுக்கீட்டை அமைச்சின் வாகனக் கொள்வனவுக்கு என ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து வழங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது. இதற்காக வவுனியா மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் ஊடாக விண்ணப்பங்கள் கோரப்பட்டன. வவுனியா வடக்குப்பிரதேச செயலகப் பிரிவில் 40பேரும், வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலகப்பிரிவில் 4 பேரும், வவுனியா பிரதேச செயலகப்பிரிவில் 23 பேரும், வவுனியா தெற்கு பிரதேச செயலகப்பிரிவில் 14பேரும் விண்ணப்பித்திருந்தனர். மலசல கூடங்களும் அமைக்கப்பட்டன. அதன்பின்னர் முதல் கொடுப்பனவு, இரண்டாம் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன.

ஒரு சிலருக்கு முழுக் கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டன. எனினும், மலசல கூடங்களை அமைத்த 64 பேருக்கு இறுதிக் கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்படவில்லை.

இதனால் கடன்பட்டு அமைக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

கடந்த மூன்று வருடங்களாக எந்தவித உதவிகளும் இன்றி பட்டகடனை அடைக்க முடியாது திண்டாடுகின்றனர். இந்தநிலையில் புதிய மலசலகூடம் அமைத்துக்கொடுப்பதுக்கு அமைச்சு தற்போது முன்மொழிவுகளை மேற்கொண்டுவருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.

2015ஆம் ஆண்டு வடக்கு மாகாண சுகாதார அமைச்சராகப் பதவிவகித்த ப.சத்தியலிங்கம் இந்தத் திட்டத்தை மேற்கொண்டார். அவரால் வவுனியாபிரதேசசெயலகத்தில் வைத்து இதற்கான முன்பணமும் வழங்கப்பட்டது. இந்தநிலையில் அவரிடமிருந்து சுகாதார அமைச்சு பறிக்கப்பட்டது.

இதன்பின்னர் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதிக்கு என்ன நடந்துள்ளது என்பது இன்று வரையும் தெரியவில்லை. இறுதிக்கட்டக் கொடுப்பனவுகளும் வழங்கிவைக்கப்படவில்லை. எமக்குத் தேவையான ஒன்றை எப்படியாவது கட்டிமுடித்து விடவேண்டும் என்ற ஒரே நோக்கத்துக்காக நாம் கடன்பட்டு கட்டி முடித்துள்ளோம். அந்தக் கடன் மூன்று வருடங்களில் வட்டி, குட்டி என வளர்ந்து நிற்கிறது.

தற்போது நாம் மிகுந்த கஸ்தரத்தில் உள்ளோம். எங்களை அமைச்சு கடனாளிகளாக மாற்றிவிட்டது. இது தொடர்பாக துறை சார்ந்த அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியபோதும் அவர்கள் நடவடிக்கைஎடுக்கவில்லை என்று பாதிக்கப்பட்டவர்கள் தெரிவித்தனர்.

இதுதொடர்பாக தகவல்களைப் பெற்றுக்கொள்வதுக்கு வடக்கு மாகாண சமூகசேவைகள் அமைச்சின் செயலருக்கு தொலைபேசி அழைப்பை ஏற்படுத்திய போதும் அது பயனளிக்கவில்லை. (ய-21)

மருத்துவமனை அபிவிருத்திக்குழுவின் இயங்கு தன்மையை உறுதிப்படுத்துக

வடக்கு சுகாதார அமைச்சு அறிவிப்பு

வடக்குமாகாணமருத்துவமனைகளில் அபிவிருத்திக் குழுக்களின் இயங்குதன்மையை உறுதிப்படுத்த வேண்டும்என்றுமாகாண சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இறுதியாக அமைச்சில் நடைபெற்ற துறைசார் ஆலோசனைச் சபைக் கூட்டத்திலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது பற்றி மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

மருத்துவமனைகளில் அபிவிருத்திக் குழுக்கள் செயல்படுகின்றன. இவை ஊழியர்கள் மற்றும் பெளதீக வளங்கள் சார்பான அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. சில மருத்துவமனைகளில் அபிவிருத்திக்குழு ஆரம்பிக்கப்பட்டு இயங்கு தன்மை அற்ற நிலையில் காணப்படுகின்றன. இதனால் மருத்துவமனைகளின் அபிவிருத்தியும் பின்னடைவை நோக்கிச் செல்கின்றது.

இந்த குழுக்களின் ஊடாக பல்வேறு செயல்திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் சிறப்பான வினைத்திறனைப் பெறமுடியும். குழுக்கள் இல்லாமையினால் கிடைக்கவேண்டிய சலுகையும் இல்லாமல் போகின்றது.

எனவே, இதுதொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். மருத்துவமனைகளில் உள்ள அபிவிருத்திக் குழுக்களின் இயங்குதன்மை உறுதிப்படுத்தப்படவேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-ரி)

வவு. பேருந்து நிலைய விவகாரம்:

ஒற்றுமையாக இருந்திருந்தால் இந்தநிலை ஏற்பட்டிருக்காது

விக்கியின் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.19

வவுனியா பேருந்து நிலையம் தொடர்பில் முத்தரப்பினரும் ஒற்றுமையுடன் செயற்பட்டிருந்தால் இந்தநிலைமை ஏற்பட்டிருக்காது என்று வடக்கு மாகாண முதலமைச்சரின் செயலாளர் தெரிவித்தார்.

இ.போ.சபையினர், தனியார் பேருந்து உரிமையாளர்கள் மற்றும் பழைய பேருந்து நிலையத்திலுள்ள வர்த்தகர்கள் ஒன்றிணைந்து செயற்பட்டிருந்தால் பழைய பேருந்து நிலையத்திலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டிருக்காது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல் 2.30மணியளவில் வவுனியா பழைய பேருந்து நிலையத்திலுள்ள வர்த்தகர்கள் வர்த்தகர் சங்கத் தலைவருடன் முதலமைச்சரின் செயலாளரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

புதிய பேருந்து நிலை யத்தில் சேவைகளை மேற்கொள்ளும்போது வர்த்தகர்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் தொடர்பில் எவரும் பெரிதும் கவனத்தில் கொள்ளவில்லை.

பொதுமக்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளமை குறித்தும் எவ்வித முறைப்பாடுகளும் கிடைக்கவில்லை. பழைய பேருந்து நிலையத்திலுள்ள வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கைகூட எமக்கு குறைத்து மதிப்பிடப்பட்டே தெரிவித்துள்ளனர். இதன்காரணமாகவே நாங்கள் எடுத்த முடிவை நடைமுறைப்படுத்தியுள்ளோம்.

இதுதொடர்பாக ஒரு வாரத்தின் பின்னர் முதலமைச்சருடனாக சந்திப்புக்கு ஏற்பாடு செய்துதரப்படும்- என்றார்.

பழைய பேருந்து நிலையம் மூடப்பட்டதால் அந்த இடத்திலுள்ள வர்த்தக நிலையங்கள், நடமாடும் உணவகங்களுக்கு உணவுகள், சிற்றுண்டிகள் தயாரித்துத் கொடுத்தவர்கள் எனப்பலரும் பாதிப்படைந்துள்ள னர்.

இதையடுத்து நடமாடும் வியாபாரிகள் ஒன்றிணைந்து வடக்கு மாகாண முதலமைச்சின் செயலாளரை சந்தித்தனர்.

புதிய பேருந்து நிலையத்தில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதுக்கு அனுமதி பெற்றுத்தருமாறு கோரியிருந்தனர்.

அத்துடன் வவுனியாவுக்கான உள்ளூர்ப் பேருந்துகள் அனைத்தும் பழைய பேருந்து நிலையத்துக்கு வந்துசெல்வதுபோல் நடவடிக்கை ஒன்று எடுக்கப்படும் பட்சத்தில் மேற்படி பிரச்சினைக்கு தீர்வுகாண முடியும் என்றும் வர்த்தகர்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ய-21)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

பயன்தரா உத்தி!

"நாம் தற்போது நிதானமாக, நியாயமாக, நேர்மையாக ஒருமித்த நாட்டுக்குள் தமிழர்களுக்கு மதிப்பைப் பெற்றுக்கொள்ள முயற்சிக்கிறோம். அது நடைபெறாவிட்டால், எமது சம்மதம் இல்லாமல் நடைபெறும் ஆட்சியை மாற்றவேண்டிய நிலை ஏற்படும்"

இவ்வாறு தெரிவித்திருக்கிறார்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க் கட்சித் தலைவருமான இராஜவரோதயம் சம்பந்தன். உள்ளூராட்சித் தேர்தலையொட்டி திருகோணமலை மாவட்டத்தில்நடைபெற்றபரப்புரைக்கூட்டம் ஒன்றில் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்திருக்கிறார். புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் மீதான எதிர்பார்ப்புகள் பலவீனப்பட்டுவரும் நிலையில் சம்பந்தனின் இந்தக் கருத்து வந்துள்ளது கவனிக்கத்தக்கது.

பன்னாட்டுச்சட்டங்களின் அடிப்படையில் தமிழர்களுக்குச் சுயாட்சி உரித்து உண்டு என்றும் அதனடிப்படையிலான ஓர் தீர்வைப் பெறுவதற்குத்தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு முயற்சிக்கிறது என்றும் அந்த முயற்சி வெற்றிபெறவில்லை என்றால்அல்லது கொழும்பில் ஆட்சியில் உள்ள அரசுகள் அந்த முயற்சிக்குத் தடையாக இருக்குமானால் அந்த ஆட்சியை மாற்றவேண்டிய தேவை, நிலமை ஏற்படும் என்ற சாரப்படவே சம்பந்தனின் உரை அமைந்திருந்தது.

புதிய அரசமைப்பு முயற்சிகளில் இருந்துதற்போதையமைத்திரி – ரணில் கூட்டு ஆட்சி நழுவிச் செல்லுமானால் அந்த முயற்சியிலிருந்துவிலகிச்செல்லுமானால்இந்த ஆட்சியைக் கவிழ்க்கவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தயங்காது, எனவே புதிய அரசமைப்பை எப்படியாவது நிறைவேற்றுவதற்கு இந்த ஆட்சி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அவர் அரசுக்கு விடுத்திருக்கும் எச்சரிக்கையாகவும் இதனை எடுத்துக்கொள்ளலாம்.

இருந்தாலும் இது அரசுக்கு விடுக்கப்பட்ட ஆணித்தரமான இறுதி எச்சரிக்கையாகக் கொள்ளப்படவேண்டிய அவசியம் எதனையும்அவரதுஒட்டுமொத்தஉரையும்உணர்த்தவில்லை என்பதையும் கவனிக்கவேண்டும். முன்னாள்அரசதலைவர் மகிந்த ராஜபக்ச ஆட்சியை வீழ்த்தி மைத்திரி – ரணில் ஆட்சியை ஏற்படுத்தியதன்மூலம்தமிழர்களுக்குச்சில பல சாதகமான விடயங்கள்கிடைத்துள்ளன என்பதையும் அவர்தனது உரையில் முக்கியமாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

ஆக, அரசுக்கான அவரது காட்டமான எச்சரிக்கையாக இது அமையவில்லை. அத்தோடு இதேபோன்றதொரு கருத்தை இதற்கு முன்னரும் சில தடவைகள் சம்பந்தன் வெளிப்படுத்தியிருக்கிறார். தமிழ் மக்களை ஏமாற்ற முயன்றால் இந்த ஆட்சியையும் மாற்றத் தயங்கமாட்டோம் என்பதாக அது அமைந்திருந்தது. அதன் நீட்சியாகவே சம்பந்தனின் இந்தக் கருத்தையும் பார்க்கவேண்டும்.

எப்படியிருப்பினும் சம்பந்தனின் உரையெழுப்பும் முக்கிய கேள்வி, தற்போதைய ஆட்சிக்கான ஆதரவைக்கூட்டமைப்பு விலக்கிக்கொள்ளுமா இல்லையா என்பதல்ல. ஆட்சிகளை மாற்றுவதால்மட்டுமேகூட்டமைப்பால்இனப்பிரச்சினைக்கு, தமிழர்களின் பிரச்சினைக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்றைக்கூட்டமைப்பால்கொண்டுவந்துவிடமுடியுமாஎன்பதே அந்த முக்கிய கேள்வி.

ராஜபக்சவுக்குப் பதில் மைத்திரி ரணில். இனி மைத்திரி – ரணிலுக்குப் பதில் தனித்த ரணில் அல்லது வேறொருவர். அதற்குப் பின்னர் மற்றொருவர் என்று ஆட்சிகளை மாற்றுவதால்மட்டும்தமிழர்களுக்குத்தீர்வுகிடைத்துவிடாது என்பது நிச்சயம். தெற்கின் சிங்கள அரசியல் தலைமைகள் அனைத்துமே 'ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்' ஆக இருக்கையில் ஆட்சிகளை மாற்றுவதால் மட்டும் எந்தவிதப் பயனும் தமிழர்களுக்குக் கிடைக்கப்போவதில்லை. ஆட்சிக்கு வர விரும்புபவர்கள் அரசியல் தீர்வு என்கிற தூண்டிலைப் பயன்படுத்தி தமிழர்களின் ஆதரவைப் பெற்றுக்கொண்டு பின்னர் அவர்களைக் கைவிடுவது மட்டுமே நடக்கக்கூடியது. நடந்தும் இருக்கிறது.

இப்படி ஆட்சிகளை மாற்றுவதாலும் மாறுகின்ற ஆட்சிகளுக்கு ஆதரவளிப்பதாலும் எதையும் சாதித்துவிடமுடியாது என்பதற்கு ஜே.வி.பி. கட்சியே சிறந்த உதாரணம். சந்திரிகாவுக்கும், மகிந்தவுக்கும்பின்னர்மைத்திரிக்கும் என அதுமாறிமாறி ஆதரவளித்து ஆட்சிகளை மாற்ற உதவியதன் மூலம் கட்சியை அரசியலில் தக்கவைத்துக் கொண்டதைத் தவிர வேறு எந்தவொரு விடயத்தையும் அந்தக் கட்சி சாதித்ததில்லை. தமிழ் மக்களுக்குநிரந்தரமானதீர்வைப்பெறுவதற்கானதமிழ்த் தேசியக்கூட்டமைப்பின்உத்தியும் ஒன்றன்பின் ஒன்றாக ஆட்சிகளை மாற்றுவதுதான் என்றால் அதனால் உரிய பயன் ஏதும் விளையப்போவதில்லை என்பதை இப்போதே அடித்துக் கூறிவிடலாம்.

தமிழ் இளைஞர்களை திசைதிருப்புவது அரசியல் வாதிகளின் மிகப்பெரிய தவறு

இந்துமதி

வடபகுதியில் உள்ள சில அரசியல்வாதிகள் இளைஞர்களை உசுப்பேத்திவிடுவதில் அக்கறையுடன் செயற்படுவதைக் காண முடிகின்றது. இளைஞர்களைக் கவருவதற்கெனஇவர்கள்இனவாதக்கருத்துக்களை வெளியிடுவதிலும் ஈடுபட்டுள்ளனர். இது ஆபத்தான விளைவுகளுக்கு வழிவகுக்கும் செயற்பாடாகும்.

தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போர் தொடங்குவதற்குமுன்னர்இங்குஇருந்தஅரசியல்வாதிகளும் தமதுஅரசியல்வெற்றிக்காகஇளைஞர்களையே பயன்படுத்தி வந்தனர். இவர்கள்கூட இனவாதக் கருத்துக்களைமேடைகள்தோறும்விதைப்பதற்குத்தவறவில்லை. இளைஞர்களை உசுப்பேத்தி அதில்பயன்பெறுவதையே இவர்கள் தமது அரசியல் நோக்காகக் கொண்டிருந்தனர். இதனால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் தொடர்பாக, இவர்கள் சிந்தித்துப் பார்த்ததில்லை. பல ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு சந்தர்ப்பத்தில் அடுத்த ஆண்டு தமிழ் ஈழத்தில் தான் நாம் வாழ்ந்து கொண்டிருப்போம் என இளைஞர்கள் திரண்டிருந்த கூட்டமொன்றில் தமிழ்த் தலைவர் ஒருவர் வீரவசனம் பேசியமை இன்றுகூட எனது மனதில்நிழலாகிறது. இவர்எதைவைத்துஅன்று இவ்வாறுகூறினார்என்பதுபுரியவில்லை. இன்றுகூட எம்மில் சிலர் மேற்கண்டவாறு வீர வசனங்களைப்பேசிஇளைஞர்களைத்திசைதிருப்பமுயல்வதைக் காண முடிகின்றது. நீண்ட ஆயுதப் போராட்டம் தமிழர்களின் இருப்பையே நிலைகுலைய வைத்துவிட்டது. இவர்கள் தோற்றுப் போனதொரு இனத்தவர் என்றபார்வையும்உலகின் முன்னால் எழுந்துள்ளது. இதைப் போக்கிக் கொள்ளநீண்டநாள்கள் ஆகப்போகின்றன.

மற்றொரு ஆயுதப் போர் குறித்து தமிழ் மக்கள் சிந்திக்க இயலாது

இன்னுமொரு ஆயுதப் போர் ஆரம்பமாவதைத் தமிழர்கள் ஒருபோதுமே விரும்ப மாட்டார்கள். அதைத்தாங்கிக்கொள்ளக்கூடியசக்தியும்அவர்களிடமில்லை. எமதுஅரசியல்வாதிகள்தமதுஅரசியல் அபிலாசைகளை நிறைவேற்றுவதற்குத் துடிக்கிறார்களே தவிர, இனத்தின் எதிர்காலம் தொடர்பாக எண்ணிப் பார்ப்பதாகத் தெரியவில்லை. இதுவொரு ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய செயற்பாடாகும்.

இலங்கையின் அரசியல் நிலவரங்களைப் பார்க்கும்போது தமிழர்களுக்கு எதுவுமே கிடைக்காது என்பது உறுதியாகத் தெரிய வருகின்றது. சுய நிர்ணய உரிமை, அதிகாரப் பகிர்வு, கூட்டாட்சி என்பவை இந்த நாட்டைப்பொறுத்தவரையில் நிறைவேற்றப்பட முடியாத காரியங்களாகிவிட்டன. பிரபாகரனால் முடியாததை எமது தமிழ்த்தலைவர்கள் சாதித்துக் காட்டுவார்களென இனியும் நம்பிக் கொண்டிருக்க முடியாது. ஏனென்றால் போர் ஓய்ந்து பல ஆண்டுகள் கடந்த நிலையிலும் தமிழர்களின் வாழ்வியலில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

வேலையற்ற தமிழ் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும்

தற்போது வடபகுதியைப் பொறுத்த வரையில் அதிக எண்ணிக்கையான இளைஞர்கள் படித்து விட்டுத் தொழில் வாய்ப்பின்றி வீணாகப் பொழுதைக்கழித்துக் கொண்டிருக்கின்றனர். இவர்களில் சிலர் தவறான பாதையில் செல்வதற்கும் இதுவே பிரதான காரணமாகிறது. முதலில் இவர்களுக்கானதொழில்வாய்ப்புக்கள்உருவாக்கப்படல் வேண்டும். இவர்களது கவனம் தவறான திசையை நோக்கிச் செல்வதைத் தடுக்க வேண்டும். இதைவிடுத்து அரசியல்வாதிகள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக இளைஞர்களை அணிதிரளுமாறு அழைப்பதும், கூட்டங்களில் அவர்களை அணி திரளுமாறு அழைப்பதும் விவேகமான செயல்களல்ல.

உள்ளூராட்சித்தேர்தலிலும்இளைஞர்களில்பலர் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டுள்ளனர். ஆர்வமுள்ள இளைஞர்கள் அரசியலில் குதிப்பது தவறான செயலல்ல. ஆனால் தவறான அரசியல்வாதிகளின் பிடியில் அவர்கள் சிக்கி விடக் கூடாது.

இளைஞர்களை நல்வழிப்படுத்த வேண்டிய பொறுப்பு எமது அரசியல்வாதிகளுக்கு உண்டு

இன்றையஇளைஞர்களேநாளையதலைவர்கள் என்று கூறுவார்கள். ஆனால் இளைஞர்கள் எல்லோருமே தலைவர்களாக மாறிவிடமுடியாது. அரசியல் நெளிவு சுழிவுகளைப்புரிந்து கொண்டவர்கள் மட்டுமே அரசியலில் பிரகாசிக்க முடியும். அரசியலை ஒரு சாக்கடை என்றார் பேரறிஞர் பெர்னாட்ஷா. அவரதுகருத்துக்குமாற்றுக்கருத்து எதுவுமே இருக்க முடியாது. ஆனால் ஜனநாயக உலகில் அரசியல் இல்லாமல் எதுவுமே இல்லையென்றுதான் கூறவேண்டும். ஆனால் அரசியலைத் தூய்மையாக வைத்திருப்பது அரசியல்வாதிகளின்முக்கியகடமையாகும். அரசியல்ஒரு சாக்கடையல்ல; அதுவொரு தெளிந்த சுத்தமான நீரோடை என்பதையும் அவர்களே நிரூபிக்க வேண்டும்.

மேலும் அரசியல்வாதிகள் இளைஞர்களின் எதிர்காலத்துடன் விளையாடுவது உகந்ததொரு செயலல்ல. இளைஞர்களிடையேமறைந்துகொண்டு அரசியல்செய்வதும்கோழைத்தனமானசெயலாகும். அதிலும் தமிழ் அரசியல்வாதிகள் இளைஞர்களைத் தமது தேவைகளுக்குப் பயன்படுத்துவதும் ஏற்கத்தக்கதல்ல. இதனால் ஏற்படப்போகும் எதிர்விளைவுகளுக்கு அவர்களே பொறுப்புக் கூறவேண்டும். இதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கு அவர்களால் ஒருபோதுமே முடியாது.

இலங்கை வந்தடைந்தார் நேபாள இராணுவத் தளபதி

கொழும்பு,ஜன.19

இலங்கையின் அழைப்பையேற்று நேபாள இராணுவத் தளபதியான ஜெனரல் ராஜேந்திர சேத்ரி அவரது பாரியார் மற்றும் பத்து இராணுவப் பிரதிநிதிகள் உள்ளடங்கிய குழுவினர் இலங்கைக்கான உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டு கொழும்பு வந்தடைந்தனர்.

கொழும்பு பண்டாரநாயக்க பன்னாட்டு வானூர்தி நிலையத்தை நேற்று வந்தடைந்த நேபாள இராணுவத் தளபதியை இலங்கை இராணுவ பதவி நிலை அதிகாரி மேஜர் ஜெனரல் அமல் கருணாசேகர வரவேற்றார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அரச தலைவர், தலைமை அமைச்சர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர், பாதுகாப்பு தலைமை அதிகாரி மற்றும் முப்படை தளபதிகள் ஆகியோரைச் சந்தித்து நேபாள இராணுவ தளபதி பேச்சுவார்த்தை நடத்த வுள்ளார். (ற-ரி5)

மாலக சில்வாவுக்கு பிடியாணை பிறப்பிப்பு

கொழும்பு,ஜன.19

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வாவின் மகனான மாலக சில் வாவை கைதுசெய்யு மாறு கொழும்பு மூத்த நீதிவான் தர்சிகா விமல சிறி உத்தரவிட்டார்.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

வழக்கு மீண்டும் மார்ச் மாதம் 6ஆம் திகதி விசார ணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது எனவும் தெரி விக்கப்பட்டது. 2014ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கொழும்பிலுள்ள இரவு நேர களியாட்ட விடுதி ஒன்றில் பிரித்தானிய நாட்டவர் ஒருவருடன், மாலக சில்வா மோதல் சம்பவத்தில் ஈடுபட்டமை தொடர்பான வழக்கில் உரியமுறையில்நீதி மன்றில்முன்னிலையாகாமையால் மாலக சில்வாவை கைதுசெய்ய பிடியாணை பிறப்பிக்கப்பட்டது (ற-ரி5)

வர்த்தக நிலையங்களில் நேற்றுத் தீ விபத்து

கொழும்பு,ஜன.19

லிந்துலைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மெராயா நகரில் நேற்றுச் சில்லறை வர்த்தக நிலையங்கள் இரண்டில் தீவிபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் நிலையங்கள் முற்றாக எரிந்து சேதமடைந்துள்ளன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதேச பொது மக்கள், பொலிஸார், நுவரெலியா மாநகர சபையினரின் தீயணைப்பு பிரிவினர் ஆகியோர் இணைந்துதீயைக்கட்டுப்பாட்டுக்குள்கொண்டுவந்தனர். தீ ஏற்பட்டதற்கான காரணம் கண்டறியப்படவில்லை. மின்சார ஒழுக்கு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது.

இந்த விபத்துத் தொடர்பாக லிந்துலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற-ரி5)

வீதியைச் சீரமைக்கக் கோரி மட்டு. மக்கள் போராட்டம்

மட்டக்களப்பு, ஜன.19

மாவடிமுன்மாரி பிரதான வீதியூடாக மணல் ஏற்றிச் செல்வதை நிறுத்த வேண்டும் என்றும் சேதமடைந்துள்ள வீதியை சீரமைத்து தருமாறும் கோரி பிரதேச மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மண் ஏற்றிச்செல்லும் கனரக வாகனங்களை மறித்து வீதிக்கு நடுவே நின்று ஆர்ப்பாட்டம் செய்த மக்கள் தமது பகுதிகளில் உள்ள மண்ணை வேறு பகுதிக்கு கொண்டுசெல்வதை நிறுத்துமாறும் வலியுறுத்தினர்.

ஆர்ப்பாட்டம் இடம்பெற்ற இடத்துக்கு நேரடியாக சென்று, ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்திய பட்டிப்பளை பிரதேச செயலாளர் திருமதி தட்சணகௌரி தினேஸ் இந்தப் பகுதியில் மண் ஏற்றுவதை உடனடியாக நிறுத்துமாறு உத்தரவிட்டார்.

இதனையடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டதுடன் மனு ஒன்றும் பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டது. (ற-ரி5)

துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு,ஜன.18

எம்பிலிப்பிடிய, செவனகல, கடுபிலகம பிரதேசத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

39 வயதுடைய ஒருவரே உயிரிழந்தார் என விசாரணை களில் தெரிவந்தது.

துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்டவர் தொடர்பில் இதுவரை எந்தத் தகவலும் கண்டறியப்படாத நிலையில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)

தல்பே பகுதியில் ஆர்ப்பாட்டம்

காலி,ஜன.19

காலி - மாத்தறை பிரதான வீதியின் தல்பேப் பகுதியில் வசிக்கும் பிரதேசவாசிகளால் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் பகுதியில் அமைந்துள்ள பௌத்த விகாரை ஒன்றுக்குச் சொந்தமான காணியில் பிறிதொரு நபர் வீடொன்றை அமைத்துள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

காணி பல வருடங்களாக விகாரைக்குச் சொந்தமானதாகக் காணப்படுகின்ற போதிலும், வீட்டை அமைத்துள்ளவர் காணிக்கான உரிமத்தை வைத்துள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பகுதியிலுள்ள பிரதான வீதியை மறித்து ஆர்ப் பாட்டம் மேற்கொள்ளப்பட்டதால் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)

நடுவீதியில் குடைசாய்ந்து தடம்புரண்டது மகிழூர்தி

ஹற்றன், ஜன.19

கொழும்பில் இருந்து ஹற்றன் நோக்கிப் பயணித்த மகிழூர்தி(கார்) ஒன்று தலை கீழாக கவிழ்ந்து விபத்துக் குள்ளானது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் ஹற்றன் மல்லியப்பூ சந்தியில் இடம்பெற்றது.

காரில் பயணித்த இருவரும் காயங்கள் எதுவும் இன்றி காப்பாற்றப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கார் வீதிக்குக் குறுக்காக கவிழ்ந்து காணப்பட்டதால் ஒரு மணிநேரம் அதனுடான போக்குவரத்து ஒரு வழிப் பாதையாக மட்டுப்படுத்தப்பட்டது எனத் தெரிவிக் குப்பட்டது. (ற)

இலஞ்சம் பெற்ற நேரப்பதிவாளர் நேற்றுக் கைது

மட்டக்களப்பு,ஜன.19

கல்முனை வீதிப் போக்குவரத்து அதிகாரசபையின் பேருந்து நேரப் பதிவாளர் இலஞ்சம் பெற்றுக் கொண்ட குற்றச்சாட்டில் பிரதான பேருந்து நிலையத்துக்கு முன்னால் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டில் 100 ரூபா இலஞ்சம் பெற்றமை தொடர்பாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

பல காலமாக தனியார்பளபேருந்து ஊழியர்களிடமிருந்து முன்னால் வருகின்ற பேருந்துகளால் இடையூறு இன்றி தமது பேருந்தைச் செலுத்துவதற்குத் தேவையான வசதியை செய்து தருவதாகக் கூறி அவர் இலஞ்சம் பெற்றுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

சந்தேகநபரை அம்பாறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (ற-ரி5)

கமலுடனான கூட்டணியை காலம் முடிவு செய்யும்

என்கிறார் ரஜினி

சென்னை, ஜன. 19

தமிழ் திரையுலக முன்னணி நடிகர்கள் ரஜினியும், கமலும்அரசியலில்களமிறங்கியுள்ள நிலையில், தேர்தலில் கமலுடன் கூட்டணி அமைப்பது தொடர்பில் காலம் தான் தீர்மானிக்கும் என்று தெரிவித்துள்ளார் ரஜினி காந்த்.

கடந்த 31ஆம் திகதி தனது அரசியல் வருகையை உறுதிப்படுத்தியிருந்தார் ரஜினி. தமிழ் திரையுலகின் மற்றொரு முன்னணி நடிகரான கமலும் அரசியல் வருகையை தற்போது உறுதிப்படுத்தியுள்ளார். இதையடுத்துசென்னையில்நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், கமலுடன் கூட்டணி அமைப்பீர்களா என்று ரஜினியிடம் கேட்கப்பட்டது. இதற்குபதில்வழங்குகையிலேயேரஜினி இவ்வாறு தெரிவித்தார்.

"புதிய கட்சி தொடங்குவதாக அறிவித்த கமலஹாசனுக்கு எனது வாழ்த்துக்கள். காலம்தான் கமலுடனான கூட்டணி குறித்து பதில் சொல்லும்" என்று ரஜினி மேலும்தெரிவித்தார். (ம)

பங்களாதேஷில் தஞ்சமடைந்துள்ள

ரொஹிங்யர்களை மீண்டும் அழைக்க மியன்மார் தயார்

யாங்கூன், ஜன. 19

மியன்மாரில் மேற்கொள்ளப்பட்ட இனச்சுத்திகரிப்பை அடுத்து, அங்கிருந்து தப்பித்துச் சென்று பங்களாதேஷில் தஞ்சமைந்த ரொஹிங்யர்களை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்குள் திரும்பி அழைக்க மியன்மார் அரசு சம்மதம் தெரிவித்துள்ளதுடன் அது தொடர்பான ஒப்பந்தத்திலும் கைச்சாத்திட்டுள்ளது.

பௌத்த நாடான மியன்மாரில் சிறுபான்மை முஸ்லிம்கள்இனச்சுத்திகரிப்புக்குஉள்ளாக்கப்படுகின்றனர் என்று காலாகாலமாக குற்றம் சுமத்தப்பட்டு வருகிறது. ரொஹிங்யர்களின் உரிமைக்காக அங்கு ஆயுதக்குழுவொன்றும் போராடி வருகிறது. கடந்த ஓகஸ்ட் மாதம் 25ஆம்திகதி இந்தக்குழுநடத்தியதாக்குதலில் மியன்மார்சிப்பாய்கள்ஒன்பதுபேர்உயிரிழந்தனர். இதையடுத்து ரொஹிங்ய முஸ்லிம்களுக்கு எதிரான தனது அடக்குமுறைகளை பெரும் எடுப்பில் முன்னெடுத்தது மியன்மார் இராணுவம். 'இனச் சுத்திகரிப்புச் செய்வதற்கான பாடப்புத்தகம் போன்று மியன்மார் அரசின் செயற்பாடுகள் உள்ளன "என்று ஐ.நா. சபைதெரிவிக்கும்அளவுக்குநிலைமைமோசமாகியிருந்தது. இதையடுத்துசுமார்6லட்சத்து50 ஆயிரம் ரொஹிங்யர்கள் அயல்நாடான பங்களாதேஷுக்குள் சென்று அங்கு தஞ்சமடைந்தனர். அவர்களைமியன்மார்அரசுதிரும்பப்பெற வேண்டும்என்றுவலியுறுத்திவந்ததுபங்களாதேஷ். இதையடுத்தே குறித்த ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது. (ம)

அபூர்வமான

கென்யாவின் மாசை மாரா வனவிலங்கு
கோல்ட்ஸ்டீன் எடுத்துள்ள ஒளிப்படங்கள்.
"எனக்கு இப்படிஒரு காட்சிகிடைக்கும்என்
சிவிங்கிகளுக்கு இடையேஒருசிறுத்தைஅ
தில்அப்படியேநின்றேன். பிறகுதான்சுதாரி
என்ற இந்தப் பெண் சிறுத்தை மிகவும் பசி
ஆனால் வேட்டையாடுவதற்குச் சோம்பல்
தற்செயலாக இரண்டு ஒட்டகச்சிவிங்கிகள்
நின்றன.
தன்னைக் கவனிக்காத ஒட்டகச்சிவிங்கிக
தயாரானபோது, ஒட்டகச்சிவிங்கிக் கூட்ட
செய்யமுடியாதுஎன்றுநினைத்தசிறுத்தை
தமான காட்சிகள் கிடைத்துவிட்டன" என்கி



ஹௌதியின்ஏவுகணை சுட்டு வீழ்த்தியது சவூ

சனா, ஜன. 19

ஏமன் அரசுக்கு எதிராகப் போராடிவரும் ஆ
ஹௌதியால், சவூதியை நோக்கிச் செலுத்தப்
யொன்று தம்மால் சுட்டு வீழ்த்தப்பட்டது எ
வித்தது.
ஏமனில்கடந்தசிலவருடங்களாகஉள்நாட்டுப்
வருகிறது. ஏமன்அரசுக்குஎதிராகஆயுதம்ஏந்தி
ஈடுபட்டு வருகிறது ஹௌதி. ஹௌதிக்கு எ
அரசுக்கு ஆதரவாகவும் சவூதி தலைமையி
போரிட்டுவருகிறது.
இதனால் அவ்வப்போது சவூதியை நோக்கி ஏ
தாக்குதல்நடத்திவருகிறதுஹௌதி. அவ்வாறுவ
வீசப்பட்ட ஏவுகணையே தம்மால் சுட்டு வீழ்த்
சவூதி அறிவித்தது.

பாலம் இடிந்து விழுந்து 9 பேர் பரிதாபச் சாவு

பகோட்டா, ஜன. 18

கொலம்பியாவில் பாலமொன்று இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானதில் 9 பேர் உயிரிழந்தனர்.

கொலம்பியாவின் கண்டிநமார்கா. மேதாமாகாணஎல்லைகளுக்குஇடையேசிரஜாரா என்ற இடத்தில் கட்டப்பட்டுவந்த சுமார் 450 மீற்றர் நீளமுடைய பாலமே அவ்வாறு இடிந்து விபத்துக்குள்ளானது. உயிரிழந்த 9 பேரைத் தவிர மேலும் ஐந்து பேர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர் அவர்களில் பலரின் நிலமை கவலைக்கிடமாக உள்ளதால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புண்டு என்று அச்சம் வெளியிடப்பட்டது. (ம)

துர்க்மெனிஸ்தா

அஸ்கார்பத், ஜன. 18

துர்க்மெனிஸ்தான்நாட்டில்கறுப்புற
கப்பட்டுள்ளது. துர்க்மெனிஸ்தா
பொதுமக்களிடையேகடும்அதிருப்
என்று பன்னாட்டு ஊடகங்கள் செ
கடந்தமுதலாம்திகதிமுதல்இந்தநா

மான காட்சிதான்

னவிலங்குகள் பூங்காவில் ஒளிப்படக் கலைஞர் பால்
ப்படங்கள், பார்ப்பவர்களை உறையச் செய்துவிட்டன.
டக்கும்என்று எதிர்பார்க்கவே இல்லை. இரண்டு ஒட்டகச்
சிறுத்தை அமர்ந்திருந்ததைக்கண்டு முதலில் ஆச்சரியத்
தான் சுதாரித்துக்கொண்டு படங்கள் எடுத்தேன். முசியாரா
கவும் பசியோடுதான் இருந்தது.
ச் சோம்பல் பட்டுக்கொண்டு, அமர்ந்திருந்தது. அப்போது
சிவிங்கிகள் வந்து, சிறுத்தையின் இரண்டு பக்கங்களில்

ச்சிவிங்கிகளை ஒரு கை பார்க்கலாம் என்று சிறுத்தை
ங்கிக் கூட்டமே வந்துவிட்டது. இனி தன்னால் ஒன்றும்
சிறுத்தை, அமைதியாக அமர்ந்துவிட்டது. எனக்கு அற்பு
டன" என்கிறார் பால் கோல்ட்ஸ்டீன். (ம)



ஸ்பெய்னின் தலைநகர் மட்ரிட்டில், நெருப்புத் திருவிழா என்று அழைக்கப்படும் பண்டிகை நேற்றுமுன்தினம் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. நெருப்பை கருவாக வைத்து இந்தப் பண்டிகை கொண்டாடப்படும். நெருப்புக்கிடையே குதிரையொன்றில் இருந்தவாறு பாய்ந்து வருகிறார் நபரொருவர். இந்தப் படம் பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸால் வெளியிடப்பட்டது. (ம)

வுகணையை
து சவூதி

டிவரும் ஆயுதக் குழுவான
ச் செலுத்தப்பட்ட ஏவுகணை
ப்பட்டது என்று சவூதி அறி

டள்நாட்டுப்போர்நடைபெற்று
ஆயுதம்ஏந்தியபோராட்டத்தில்
ளதிக்கு எதிராகவும் ஏமன்
லைமையில் கூட்டுப் படை

ய நோக்கி ஏவுகணை வீசித்
அவ்வாறுநேற்றுமுன்தினம்
சுட்டு வீழ்த்தப்பட்டது என்று
(ம)





15 கோடி ரூபாவுக்கு ஏலத்தில் சென்றது
டைனோசரின் வால்

மெக்சிக்கன் சிற்றி, ஜன. 19
16 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்ததாகக் கருதப்படும் டைனோசரின் வால்பகுதி மெக்சிக்கோவில் ஏலத்தில் விற்கப்பட்டுள்ளது. இலங்கைமதிப்பில்சுமார்15கோடிரூபாவுக்கு இந்த வால் ஏலத்தில் விற்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.
தென் அமெரிக்கநாடுகளைகடந்த ஆண்டுசெப்டம்பர்மாதம்தாக்கிய இருநிலநடுக்கங்களால் மெக்சிகோவில் 480 பேர் உயிரிழந்தனர். சுமார் 5 ஆயிரம்பாடசாலைகள் கடுமையாகச்சேதமடைந்தன. இவற்றை சீரமைக்க நிதி திரட்டுவதற்காக சுமார் 16 கோடி ஆண்டுகளுக்குமுன்னர்மொராக்கோநாட்டின்மலைப்பகுதியில் வாழ்ந்ததாக கண்டுபிடிக்கப்பட்ட 56 அடி நீளமும், 22 ஆயிரம் கிலோ எடையும் கொண்ட அரியவகை டைனோசரின் பதப்படுத்தப்பட்ட 4 அடி நீளம்கொண்ட வால் ஏலத்தில் விடப்பட்டது. அது இலங்கை மதிப்பில் 15 கோடி ரூபாவுக்கு விற்கப்பட்டது. (ம)

பிரிஸ்தான் நாட்டில் கறுப்புநிற காருக்குத் தடை

ட்டில்கறுப்புநிறகாருக்குத்தடைவிதிக்
மனிஸ்தான் அரசின் இந்த முடிவு
டும்அதிருப்தியைஏற்படுத்தியுள்ளது
ங்கள் செய்தி வெளியிட்டன.
தல்இந்தநடைமுறைபின்பற்றப்பட்டு

வருகிறது. நடைமுறைக்குமாறாககறுப்புநிறகாரைச்செலுத்தினால் அந்தக் கார் பறிமுதல் செய்யப்படும்.
பின்னர் அதன் உரிமையாளர் காரின் நிறத்தை மாற்றும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டாலேயே கார் திரும்ப வழங்கப்படுகிறது என்றும் பன்னாட்டு ஊடகங்கள் மேலும் குறிப்பிட்டன. (ம)

பிரிட்டன் விலகல் தொடர்பான சட்ட வரைபு நிறைவேற்றம்

ஐரோப்பிய ஒன்றியத்துடனான உறவுகளை துண்டித்துக்கொள்ள வகை செய்யும் சட்ட வரைவு பிரிட்டன் நாடாளுமன்ற கீழ்சபையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.
ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து விலக பிரிட்டன் நாடாளுமன்றம் எடுத்தமுடிவுதொடர்பாககடந்த2016ஆம்ஆண்டுபொதுவாக்கெடுப்பு நடத்தப்பட்டது. இதில், பிரிட்டனில் இருந்து விலகும் தீர்மானத்தை ஆதரித்து அதிகமானோர் வாக்களித்தனர். 2019ஆம் ஆண்டு மார்ச் மாதம் இறுதிப் பகுதிக்குள் பிரிந்து செல்வது தொடர்பான நகர்வுகளை முன்னெடுத்து வருகிறது பிரிட்டன். இந்த நிலையில், ஐரோப்பிய ஒன்றியத்துடனான உறவுகளைத்துண்டித்துக்கொள்வதுதொடர்பாக பிரிட்டன்நாடாளுமன்ற கீழவையில்முன்வைக்கப்பட்ட சட்டவரைவு நிறைவேற்றப்பட்டது. அடுத்ததாக இந்த சட்ட வரைவு மேல்சபையின் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்படும். (ம)

உலகின் மிகப்பெரிய நீர்வழிக்குகை மெக்சிக்கோவில் இனங்காணப்பட்டது

மெக்சிக்கன் சிற்றி, ஜன. 19
மெக்சிகோவில், உலகின் மிகப்பெரிய நீர்வழிக் குகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தக் குகை 347கிலோமீற்றர்நீளமுடையதுஎன்றுதெரிவிக்கப்பட்டது. மெக்சிக்கோவின்கிழக்குக்கடற்கரையிலேயே இந்தக் குகை இனங்காணப்பட்டுள்ளது. இந்தக் குகை மாயன் இன மக்கள் பயன்படுத்தியது என அறியவருகிறது.
இந்தக்குகையின்மூலம்15ஆம்நூற்றாண்டுக்கு முற்பட்ட மக்களின் வாழ்க்கை முறைபற்றி அறிந்துகொள்ளலாம் என்று ஆராய்ச்சியாளர்கள்தெரிவித்தனர். (ம)

பழரச தொழிற்சாலையை தரமுயர்த்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன.19

சுன்னாகம் பலநோக்கு கூட்டறவுச்சங்கத்தின் பழரசத் தொழிற்சாலை (ஜசுபி) தரமுயர்த்தப் பட்டு, அது வடக்கில் சிறந்த உற்பத்தி தொழிற்சாலையாக மாற்றியமைக்கப்படும் என வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார். பழரச தொழிற்சாலைக்கு நேரில்சென்று பார்வையிட்டு பணியாளர்கள் மத்தியில் உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:

தொழிற்சாலையை தரமுயர்த்துவதன் மூலம் உற்பத்திகளும், சந்தைவாய்ப்புகளும் அதிகரிக்கும்.

கூடுதலானவர்களுக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கமுடியும்.

அத்துடன் எமது குடாநாட்டு பழ உற்பத்தியாளர்கள் தமது பழங்களை இந்தத் தொழிற்சாலை மூலம் சந்தைப்படுத்தி நன்மையடையலாம்.

வடக்கில் முடங்கிக் காணப்படும் கூட்டுறவு உற்பத்தி தொழிற்சாலைகள் அனைத்தையும் தரமுயர்த்துவதுக்கு கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்மூலம் நலிவுற்று பின்னோக்கிய நிலையில் உள்ள கூட்டுறவு அமைப்புகளின் வருமானத்தை அதிகரிக்கமுடியும் என்றார். (ய-17)

இரண்டு பேரவைகளும் ஒன்றைத்தான் கூறும்!

கஜேந்திரகுமார் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.19

தமிழ் மக்கள் பேரவை கூறுகின்ற கருத்துகளும், தமிழ்த் தேசியப் பேரவை கூறுகின்ற கருத்துகளும் ஒத்த கருத்துகளாகவே காணப்படுகின்றன என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.தமிழ்த்தேசியப் பேரவையின் தேர்தல் கொள்ளை விளக்க அறிக்கை வெளியீட்டு நிகழ்வு நல்லூர் இளம் கலைஞர் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தமிழ் மக்கள் பேரவையினால் 2016ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தீர்வுத்திட்டத்தை வென்றெடுப்பதையும், தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதியை பெற்றுக் கொள்வதையும் இலக்காக கொண்டு இந்தப் பேரியக்கம் இதயசுத்தியுடன் செயற்படும்.

நாம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறியபோது எம்மை துரோகிகள் என்றனர். மகிந்தவிடம் போய்விட்டோம் எனப் பல சாயங்களை எம்மீது பூசினார்கள். ஆனால் யார் துரோகிகள், யார் கொள்கையுடன் உள்ளனர் என இன்று மக்கள் அறிவார்கள். எமது அணியின் கொள்கையை முறியடித்து எமது தனித்துவத்தை நீக்கி, தமிழ் மக்களை ஒற்றையாட்சிக்குள் முடக்குவதுக்கு மிகப் பெரிய சதி நடந்து கொண்டிருக்கின்றது. உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிந்தவுடன் மக்களுக்குப் பொருத்தமல்லாத தீர்வுத் திட்டத்தை நிறைவேற்ற எண்ணியுள்ளனர். அந்த பின்னணியுடனேயே பலர் இங்கு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஆகவே தமிழ் மக்கள் எமக்கு ஆதரவு அளிப்பதன் ஊடாக எமது தேர்தல் அறிக்கையையும் தாண்டி தமிழ் அரசியலில் தெளிவான முடிவை கொடுத்துள்ளனர் என்பதைக் காட்ட முடியும். எமது கோரிக்கைகள் பொங்கு தமிழ் கோரிக்கைக்கு ஒத்த கோரிக்கையாகும். எமது அணிக்கு கிராம மட்ட உறுப்பினர்கள் எவரும் இருக்கக் கூடாது என நினைக்கும் தரப்புகளை மட்டும் நாம் எதிர்த்துப் போட்டியிடவில்லை. இலங்கை அரசுடன் இணைந்து நன்கு திட்டமிட்டு செயற்பட்டு வருகின்றனர்.

பொறுப்புக் கூறலை விரும்புகின்ற, நியாயமான தீர்வை விரும்புகின்ற மக்களுக்கு சாதகமான அணியாக தமிழ்த் தேசியப் பேரவை இருக்கும். நாங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து வெளியேறி இருக்காவிட்டால் தமிழ் மக்களுக்கு உண்மை நிலைமைகளை எடுத்துக்கூற ஒரு அணி இருந்திருக்காது. நாம் தேர்தல்களுக்கு அப்பால் மக்கள் இயக்கமாக செயற்படுவோம். எமது கட்சியைச் சேர்ந்தவர்களில் ஒருவர் கூட உள்ளூராட்சி சபை உறுப்பினராக இருந்ததில்லை. மாகாண சபை, நாடாளுமன்ற உறுப்பினராகவும் இருந்ததில்லை. ஆனாலும் நாம் வெற்றிப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றோம் என்றார். (ய-8)

வவுனியா வடக்குடனேயே மீண்டும் நான்கு வட்டாரங்களும் இணைப்பு

கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஜன.19

வவுனியா வடக்கு பிரதேசசபையுடன் இணைக்கப்பட்டுள்ள நான்கு வட்டாரங்களை மணலாறு (வெலிஓயா) பிரதேச சபையுடன் இணைக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டு குறித்த வட்டாரங்கள் மீண்டும் வவுனியா வடக்குடனேயே இணைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கு மாகாணசபையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தையும் மாகாணசபை உறுப்பினர் சத்தியலிங்கம் உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை மீள்நிர்ணயக்குழுவின் தலைவருக்கு எழுத்து மூலமாக விடுத்த கோரிக்கையையும் நிராகரித்துவிட்டே குறித்த வட்டாரங்கள் வவுனியா வடக்குடன் இணைக்கப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் சத்தியலிங்கத்தினால் உள்ளூராட்சி மன்றங்களின் எல்லை மீள்நிர்ணயக்குழுவின் தலைவருக்கு அனுப்பிய அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்த விடயங்கள் வருமாறு:

கலாபோகஸ்வெவ அண்டிய 17 குடியேற்றக் கிராமங்கள் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துடன் நேரடி நிலத் தொடர்பு அற்றவையாகும். இந்தக்கிராமங்களை உள்ளடக்கியதான 04 வட்டாரங்கள் கடந்த உள்ளூராட்சித் தேர்தலின்போது வவுனியா வடக்கு பிரதேச சபையுடன் இணைக்கப்பட்டிருந்தன. எனினும், இந்தக் கிராமங்களை சேர்ந்த மக்கள் தமது பிரதேச செயலக சேவைகளை மணலாறு (வெலிஓயா) பிரதேச செயலகத்திலிருந்தே பெற்று வருகின்றனர்.

2017ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலில் இவர்களின் பெயர்கள் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பாரம்பரிய தமிழ்க் கிராமசேவையாளர் பிரிவுகளான வெடிவைத்தகல்லு மற்றும் பட்டிக்குடியிருப்புடன் இணைக்கப்பட்டிருந்தன.

இந்த மக்கள் தமது சுகாதார சேவைகளை முல்லைத்தீவு மாவட்டத்திலும், வவுனியா தெற்கு சிங்களப் பிரிவிலும் பெற்றுவருகின்றனர். மின்சார, தொலைபேசி சேவைகளை அநுராதபுரத்தில் பெறுகின்றனர். வவுனியா வடக்கு பிரதேச செயலக, பிரதேசசபை சேவைகளைப் பெறுவதற்கு 75 கிலோ மீற்றர் காட்டுவழியினால் பயணிக்கின்றார்கள். இந்தநிலையில் கடந்த 2015ஆம் ஆண்டு வவுனியா வடக்கு பிரதேச சபையின் 47ஆவது அமர்வில் மேற்படிவட்டாரங்களைசேர்ந்த04உறுப்பினர்கள் தாங்கள் வவுனியா வடக்கு பிரதேச சபையின் ஆளுகையிலிருந்து விடுபடக்கோரி முன்வைக்கப்பட்ட பிரேரணை நிறைவேற்றப்பட்டுள்ளது.

மணலாறு (வெலிஓயா) பிரதேசத்துக்கு தனியான பிரதேச செயலகம் நிறுவப்பட்டுள்ளது. மேற்படி 17 கிராமங்களையும் சேர்ந்த மக்களையும் அவர்களின் விருப்பத்துக்கு ஏற்றவாறு மணலாறு பிரதேசசபையுடனோ அல்லது வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையுடனோ இணைத்திருக்க வேண்டும். இதுதொடர்பில் மாகாணசபையிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. எனினும் இவற்றை எல்லாம் புறம்தள்ளி வவுனியா வடக்கு பிரதேச சபையுடனேயே அந்த நான்கு வட்டாரங்களும் இணைக்கப்பட்டுள்ளன. இதுதொடர்பாக மாகாணசபை உறுப்பினர் சத்தியலிங்கத்தை தொடர்பு கொண்டு கேட்டபோது,

மாகாணசபையின் தீர்மானம் எடுபடவில்லை. எனது கடிதத்துக்கும் செவி சாய்க்கப்படவில்லை எனவிசனத்துடன் தெரிவித்தார். (ய-8)

ஈ.பி.டி.பி. சொல்வதைத்தான் தென்னிலங்கை கேட்குமாம்

கூறுகிறார் அதன் செயலாளர் டக்ளஸ்

யாழ்ப்பாணம், ஜன.19

தென்னிலங்கையில் யார் ஆட்சிக்கு வந்தாலும் ஈ.பி.டி.பி. கட்சியினரால் மட்டுமே அவர்களுடன் ஒத்துழைத்துச் செயற்பட முடியும். நாங்கள் சொல்வதைத்தான் அவர்கள் கேட்பார்கள்-இவ்வாறு தெரிவித்தார் ஈ.பி.டி.பி. கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா.

யாழ்ப்பாணம் சிறிதர் திரையரங்கில் அமைந்துள்ள ஈ.பி.டி.பி. கட்சி அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தாவது:

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு ஒற்றையாட்சியைக் கொடுக்க முயற்சி எடுத்து வருகின்றது. ஆனால், நாம் மத்தியில் கூட்டாட்சியையும், மாகாணத்தில் சுயாட்சியையும் கோரி வருகின்றோம். இதனை நாம் சொன்னால் மட்டுமே தென்னிலங்கை கேட்கும். டக்ளஸ் தேவானந்தா தென்னிலங்கையில் கூறினால்தான் அதனை அவர்கள் கேட்பார்கள். தென்னிலங்கையில் யார் ஆட்சிக்கு வந்தாலும் அவர்களுடன் இணைந்து செயற்பட எம்மால் மட்டுமே முடியும். இத்தனை காலமும் மக்கள் தம்மை ஏமாற்றிய நபர்களை இனம்கண்டுள்ளனர். இதனால் அவ்வாறானவர்கள் இரண்டு தரப்புகளாக பிரிந்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் முகமூடிக் கொள்ளைக்காரர்கள் போல செயற்பட்டு வருகின்றனர். அதில் ஒரு பகுதியினர் வாக்கு கிடைக்கா விட்டால் அரசமைப்பு கிடைக்கமால் போய்விடும் எனக் கூறுகின்றார். மற்றைய தரப்பு அரசியல் தீர்வு வராது எனக் கூறுகின்றனர். இம்முறை இடம்பெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றி பெறுவதுடன், இவ்வருட நடுப்பகுதியில் இடம்பெறவுள்ள வடக்கு மாகாணசபைத் தேர்தலிலும் பெரிய வெற்றியைப் பெறுவோம். தற்போதைய மாகாணசபையின் ஊழல் மோசடிகள் தொடர்பில் முழுமையான விசாரணைகளை நடத்த திட்ட மிட்டுள்ளோம் என்றார். (ய-8)

உலக நீதியின் மீதான தமிழர்களின் நம்பிக்கை தகர்க்கப்பட்டு விட்டது

கனடாவே பக்கபலம்: அனந்தி நம்பிக்கை

யாழ்ப்பாணம், ஜன.19

இலங்கையின் ஆட்சிமாற்றத்தின் மூலமாக தமது அரசியல், பொருளாதார நலன்களைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்திவரும் உலக நாடுகள், தமிழர்கள் விடயத்தில் கண்டு கொள்ளாது இருக்கின்றன. இது உலகநீதியின் மீதான நம்பகத்தன்மையினை தகர்த்தெறிவதாக அமைந்துள்ளது. இந்தநிலையில் கனேடிய தலைமை அமைச்சரின் அறிவிப்பு நம்பிக்கை தருகின்றது என வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், ஜெனிவா அமர்வில் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க இருப்பதாக கனடா தலைமை அமைச்சர் ஜஸ்ரின்ரூடோ உறுதி தெரிவித்துள்ளமைக்கு அவர் நன்றியும் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பான அவரது செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இலங்கை அரச படைகளால் தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்டதாகக் கூறப்படும் இனப்படுகொலைக்கான நீதி தொடர்ந்தும் தாமதப்படுத்தப்பட்டு வருகின்றது.

காரணம் இந்தக் குற்றத்துடன் நேரடியாகத் தொடர்புடையதாகக் கருதப்படும் இலங்கை அரசு தனது பொறுப்புக்கூறலை நிறைவேற்றா மையே.

தமிழர்களின் பிரச்சினைக்கு உரிய தீர்வை வழங்குவோம் என்ற முன்னைய அரசின் உறுதிமொழிகளின் அடிப்படையிலேயே போருக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் உலக நாடுகள் ஆதரவு வழங்கியிருந்தன.

ஆனால், அதன் பின்னர் இனப்படுகொலைகளுக்கான பொறுப்புக்கூறலை இலங்கை அரசு வழங்காது மௌனமாக இருப்பதானது தமிழர்களிடையே பெரும் ஏமாற்றை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான கையறு நிலையில், கனடா நாட்டின் தலைமை அமைச்சரின் அறிவிப்பானது பெரும் உத்வேகத்தை தந்துள்ளது. பொறுப்புக் கூறல் பொறிமுறை தேவையென்ற விடயத்தில் தனிப்பட்ட முறையில் தாம் உறுதியாக இருக்கிறார் என அவர் கூறியிருப்பதன் மூலம் தனது உள்ளார்ந்தமான ஈடுபாட்டை வெளிப்படுத்தியுள்ளார்.

இதே உறுதியுடன், ஈழத் தமிழர்களின் நீதிக்கான முன்னெடுப்புகளில் தோளோடு தோள் நின்று கனடா அரசு தொடர்ந்தும் பலம் சேர்க்கவேண்டும் என்று உலகத் தமிழர்களின் சார்பில் கேட்டுக் கொள்கின்றேன் -என்றுள்ளது. (ய-21)

மக்கள் மனமறிந்து செயற்பட வேண்டும் கூட்டமைப்பு

சேரலாதன்

காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவுகளும், தமது சொந்த நிலங்களில் மீள்குடியமர முடியாத நிலையிலுள்ள கேப்பாப்பிலவு மக்களும் அரசை மட்டுமல்லாது கூட்டமைப்பினரையும் மோசமாகத் திட்டினார்கள் என்று ஊடகங்கள் சில செய்தி வெளியிட்டுள்ளன. உள்ளூராட்சித்தேர்தலுக்குக் குறுகிய நாள்களே மீதமுள்ள இன்றைய நிலையில், கூட்டமைப்புக்கு இதுவொரு உவப்பான செய்தியாக இருக்க முடியாது.

எதிர்க்கட்சித் தலைமைத்துவம் வாய்த்தபோதிலும் தமிழ் மக்களுக்கு பயனேதும் கிட்டவில்லை

எதிர்க்கட்சித் தலைமைப் பதவி கூட்டமைப்புக்குக் கிடைத்தபோதிலும் அரசுக்கு ஆதரவானதொரு நிலைப்பாட்டையே கூட்டமைப்பு எடுத்துச் செயற்படுகின்றது. இதற்குப் பிரதியுபகாரமாக அரசு கூட்டமைப்பின் கோரிக்கைகளை நிறைவேற்றியிருக்கவேண்டும். ஆனால் அவ்வாறு எதுவுமே நடந்து விடவில்லை. இதனால் தமிழ் மக்கள் ஏமாற்றத்தின் உச்சநிலைக்குச் சென்று விட்டனர். கூட்டமைப்பு அரசுடன் சேர்ந்து துரோகமிழைப்பதாகவே அவர்கள் நம்புகின்றனர். கூட்டமைப்புக்கு எதிரான தமிழ் அரசியல்வாதிகள் இதற்குத் தூபம் இட்டு வருகின்றனர். இவர்கள் தாம் ஒதுங்கி நின்று கொண்டு மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்காமைக்குக் கூட்டமைப்பே காரணமெனக் கூறி வருகின்றனர். மக்களும் இதை நம்புவதாகவே தெரிகின்றது. இந்த நிலை தொடருவது கூட்டமைப்பின் எதிர்காலத்துக்கு நல்லதாகத் தெரியவில்லை. அவர்கள் இன்னமும் இறந்த காலத்துக்குள் மூழ்கியிருப்பதாகவே தெரிகின்றது. ஆனால் நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் இவர்கள் ஒருமுறை சிந்தித்தப் பார்க்க வேண்டும். மக்களின் மனவோட்டத்தையும் இவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

தம்மீது சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுக்களுக்கு உரிய பதிலை வழங்காமல் மௌனம் காப்பது கூட்டமைப்பின் மிகப்பெரிய குறைபாடாகக் காணப்படுகின்றது. இதை இவர்கள் தொடர்ந்து கடைப்பிடிப்பது எந்த வகையிலும் ஏற்கத்தக்கதாகக் கருதமுடியவில்லை. எதிராளிகளுக்கு இது நன்மை செய்வதாகவே அமைந்துவிடும். கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தன் கூட தம்மீதும், கூட்டமைப்பின் மீதும் தெரிவிக்கப்படுகின்ற எதிர்மறையான கருத்துக்களுக்கு உடனுக்குடன் பதில் வழங்குவதில்லை. இதுவும் மிகப் பெரியதொரு குறைபாடாகும்.

தொடரும் தமிழ்மக்களது அவலங்கள்

மேலும் அரசுக்கு கூட்டமைப்பு எல்லா வகையிலும் ஆதரவு வழங்குவதால் இதுவரையில் எது வித பயனும் கிடைத்ததாகத் தெரியவில்லை. போருக்குப் பின்னரான காலப்பகுதியில் தமிழர்கள் பல வகைகளிலும் அவலங்களை எதிர்கொள்ளவே செய்கின்றனர். இடம் பெயர்ந்து இன்னமும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாத மக்கள் எத்தனை காலத்துக்குத்தான் பொறுமை காக்க முடியும்? தமது கண் முன்னாலேயே தமக்குரிய சொந்தக்காணிகளை அந்நியர்கள் கையகப்படுத்துவதையும், நிரந்தரமான குடியிருப்புக்களை அமைத்துக் கொள்வதையும் பார்த்துக் கொண்டு இவர்களால் எவ்வாறு நிம்மதியாக வாழ முடியும்? 2015 ஆம் ஆண்டு பதவிக்கு வந்த மைத்திரிபால சிறிசேன தங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படுத்துவாரென நம்பியிருந்த இந்த மக்கள் இறுதியில் ஏமாற்றத்தையே சந்தித்துள்ளனர். அவர்களின் வெறுப்பு அரசின் மீது மட்டுமல்லாது, கூட்டமைப்பின் மீதும் திரும்பியுள்ளது.

இதைப் போன்றுதான் காணாமல் போனவர்கள் மற்றும் இறுதிப் போரில் உயிரிழந்தவர்களது உறவினர்களும் மனங்களில் கவலையுடன் நடைப் பிணங்களாக நடமாடித் திரிகின்றனர். இவர்கள் நீதிகேட்டு அலைந்து களைத்துப்போய் விட்டார்கள். இவர்களும் வெறுப்பின் உச்சக் கட்டத்துக்கு வந்துள்ளனர். அரசு தமக்குத் தீர்வைத் தருமென்ற நம்பிக்கையையும் இவர்கள் இழந்து விட்டனர். தாம் வேதனையில் துடிக்கும்போது தமது ஏகப்பிரதிநிதிகளான கூட்டமைப்பினர் அரசுடன் உறவைப்பேணுவதை அவர்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை.

தறுக்கணித்துப் போயுள்ள அரசமைப்பு உருவாக்க முயற்சி

இதோ வருகின்றது; அதோ வருகின்றது எனக் கூறப்பட்ட புதிய அரசமைப்புஉருவாக்க முயற்சியும் தறுக்கணித்துப் போயுள்ளது. அதன் இடைக்கால அறிக்கையில் பிரிக்கப்பட முடியாத ஒருமித்த நாடு என்ற பதம் காணப்படுகின்றது. அத்துடன் தமிழர்களின் நீண்ட நாள் அபிலாசையான கூட்டாட்சி முறை குறித்த யோசனை முற்றாகவே அடிபட்டுப் போய்விட்டது. ஒற்றையாட்சி நடைமுறையைக் கைவிட சிங்கள ஆட்சியாளர்கள் தயாராக இல்லை என்பது உறுதியாகிவிட்டது. பௌத்தத்துக்கும், சிங்கள மொழிக்கும் முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே புதிய அரசமைப்பினால் தமிழர்களுக்கு நன்மை கிடைக்குமென எந்த வகையிலும் எதிர்பார்க்க முடியாது. இது கூட்டமைப்பைப் பொறுத்த வகையில் பெரும் பின்னடைவு என்று தான் கூற வேண்டும். அதுவும் அரசுடன் இணக்கமாகச் செயற்பட்டபோதிலும் அரசு பாராமுகமாக நடந்து கொள்வது ஏற்கத்தக்கதல்ல.

ஆகவே இனிமேலாவது கூட்டமைப்பு தமிழ் மக்களின் மனமறிந்து நடப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். அரசியலில் மக்களின் ஆதரவின்றி எதையும் சாதிக்க முடியாது. அசைக்க முடியாதவரென வர்ணிக்கப்பட்ட மகிந்த ராஜபக்சவையும் பதவியிலிருந்து வீழ்த்தியவர்கள் நாட்டு மக்களே என்பதை நாம் மறந்து விடலாகாது. கூட்டமைப்பு இராஜதந்திரத்துடன் அரசியல் செய்தாலே எதிர்காலத்தில் மக்களின் ஆதரவைப் பெறமுடியும். இல்லையேல் மக்களால் நிராகரிக்கப்படும் நிலை உருவாகிவிடும்.

> அரசுக்கு கூட்டமைப்பு எல்லா வகையிலும் ஆதரவு வழங்குவதால் இதுவரையில் எந்தவித பயனும் கிடைத்ததாகத் தெரியவில்லை. போருக்குப் பின்னரான காலப்பகுதியில் தமிழர்கள் பல வகைகளிலும் அவலங்களை எதிர்கொள்ளவே செய்கின்றனர். இடம் பெயர்ந்து இன்னமும் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாத மக்கள் எத்தனை காலத்துக்குத்தான் பொறுமை காக்க முடியும்? தமது கண் முன்னாலேயே தமக்குரிய சொந்தக்காணிகளை அந்நியர்கள் கையகப்படுத்துவதையும், நிரந்தரமான குடியிருப்புக்களை அமைத்துக் கொள்வதையும் பார்த்துக் கொண்டு இவர்களால் எவ்வாறு நிம்மதியாக வாழ முடியும்?

66

ஆசிரியருக்கான கடிதம்

சிந்தித்துச் செயற்படல் சிறப்புத் தரும்

கடந்தவாரம்எமதுபகுதியிலுள்ளஆலயம்ஒன்றுக்குச்சென்றிருந்தேன். ஆலயபூசை வழிபாடுகள் முடிந்த பின்னர் அருகில் அன்னதான மடத்தில் அன்னதானம் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது.

அடியவர்களுக்கு அன்னதானம் வழங்குவது மிகப் பெரிய புண்ணியப் பேறாகும். ஆனால் அப்படிப்பட்ட புனிதமான இடத்திலும் எனது மனதை வேதனைப்படுத்திய சம்பவமொன்றைப்பற்றிக்குறிப்பிடவிரும்புகிறேன். எத்தனையோஅடியார்கள்அளவுக்கு அதிக உணவுகளைப் பெற்று, அதில் முடிந்த அளவை உண்ட பின்னர் மீதியை வெளியில் கொட்டிச் சேதமாக்கினர்.

இன்று தமிழர் தேசத்தில் போரின் பின்னர் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் பல விதப் பாதிப்புக்களுடன் ஒருநேர உணவுக்கே வழியற்ற நிலையில் வறுமையுடன் போராடும்போது, நாம் உணவு வகைகளை இப்படித் தேவையற்ற விதத்தில் வீணாக்கலாமா? ஏன் பொறுப்புடன் செயற்படக் கூடாது? அதை விட இன்றைய சூழலில் தாயகத்தில் சிறுவர் இல்லங்கள், ஆச்சிரமங்கள், முதியோர் இல்லங்கள் போன்ற பல அமைப்புக்கள் இயங்குகின்றன. அவர்களையும் நாம் மறந்துவிடக்கூடாது. அவர்களுக்கு உணவு கிடைப்பதில்லை என்று நான் கூறவரவில்லை. அவர்களுக்கு உதவுமாறுதான் கோருகின்றோம். தாயகத்தில் உள்ள அனைத்து உறவுகளுக்கும் எனது தாழ்மையான வேண்டுகோள் என்னவெனில், ஆலய உற்சவங்கள், திருமண நிகழ்வுகள் மற்றும் கொண்டாட்டங்கள் முடிவடைந்த பின்னர் மீதமாக இருக்கும் உணவு வகைகளை அவம்போகச் செய்யாதீர்கள். மேலே குறிப்பிட்ட நிறுவன பொறுப்பதிகாரிகளுடன் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது அந்தந்தப் பிரிவு கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு மீதமாகும் உணவு வகைகளை உணவு தேவைப்படுவோருக்கு வழங்கினால், ஆண்டவனுக்குசெய்யும்தொண்டாகவேஅந்தப்பணியைக்கருதலாம். இனிவரும் காலங்களிலாவது சகலரும் இது குறித்துச் சிந்தித்துச் செயற்படுவோமே!

அ. அன்பு, வரணி.

புன்சிரிப்பு

"புன்னகை பூப்பதும் ஓர் அறமே!" என்று கூறினார்கள், நபிகள் நாயகம் (ஸல்) இது மிக எளிதான, எவரும் அன்றாடம் செய்யக்கூடிய ஓர் சிறந்த அறச்செயல் ஆகும். இதற்கு எந்தச் செலவும், உழைப்பும் தேவையில்லை. இதற்குத் தேவைப்படுவது மனித நேயம் மட்டுமே. எம்மில் பலருக்கும் முகத்தில் எளிதாக புன்னகை வந்து விடுவதில்லை.

சந்திக்கும் மனிதர்களின் பதவி, செல்வம், புகழ் ஆகியவற்றைக்கணக்குப் போட்டுப் பார்த்து, பலத்த யோசனைக்குப் பிறகு புன்முறுவல் பூப்பார்கள். தம்மை விட அந்தஸ்தில் குறைந்தவர்களைப் பார்த்து எளிதில் சிரித்துவிட மாட்டார்கள். ஆட்சியாளர்கள், ஆன்மிகவாதிகள், சிந்தனையாளர்கள் மக்களுடன் எளிதில் கலந்து விடுவதில்லை; நகைச்சுவையாகப் பேசுவதும் இல்லை. ஆனால் மனித நேயம் கொண்டவர்கள், எவரைப் பார்த்தாலும், எவ்வித தயக்கமும் இல்லாமல் புன்னகை புரிவார்கள்.

நபிகள் நாயகம் ஆன்மிகத் தலைவர், ஆட்சியாளர், படைத்தளபதி, தத்துவஞானி எனப் பல பரிமாணங்களைக் கொண்டிருந்தாலும், எப்பொழுதும் சிரித்த முகத்துடனும், கலகலப்பாகவும் காணப்படுவார்கள்.

"நபிகளாரின் வாழ்வு புன்முறுவல் கலந்த ஒன்றாக இருந்தது. வளத்திலும் வறுமையிலும், இன்பத்திலும் துன்பத்திலும், வீட்டிலும் வெளியிலும், பிரயாணத்தி லும் போரிலும், பள்ளிவாயிலிலும் ஏன் நோயில் வீழ்ந்திருந்த போதிலும்! இப்படி எல்லா நிலைகளிலும், சந்தர்ப்பங்களிலும் நபிகளார் சிரிக்க மறந்ததில்லை" என்கின்றார், நபித்தோழர் அபூ ஹுரைரா (ரலி) (நூல்: பைஹகி)

வெள்ளிக் கிழமைகளில் பள்ளிவாயிலில் நபிகளார் உணர்ச்சியோடு உரை நிகழ்த்திக் கொண்டிருந்த போதிலும், அதை இடை மறித்து கோரிக்கை வைத்தவருக்கு பதிலளித்தது மாத்திரம் அல்லாமல் புன்னகைக்கவும் செய்திருக்கிறார்கள் என்று அனஸ் பின் மாலி என்ற நபித்தோழர் கூறுகிறார்.

* மக்களை மகிழ்விப்பதற்காக பொய் பேசி சிரிக்க வைப்பவனுக்குக் [illegible]ண்டாகும்.

* நகைச்சுவையாக பேசுகிறோம் என்ற பெயரில், கேலி, கிண்டலான வார்த்தைகளைக்கூறக்கூடாது. ஆக, நபிகளார் எமக்கு எல்லாவற்றிலும் முன்மாதிரியாக இருப்பதைப் போல நகைச்சுவை, விளையாட்டு கலந்த இயல்பான வாழ்க்கைக்கும் சிறந்த வழிகாட்டுதலை வழங்கியுள்ளார்கள்.

மொகமட் அமீர்

தாராளமாகச் சிந்திக்கும் திறமையுடைய கடக ராசிக்காரர்களே நீங்கள் புதுமை படைக்க எண்ணுபவர்கள். இந்த மாதம் எதிர்ப்புகள் விலகும். கடன் தொடர்பான பிரச்சினைகள் தீரும். பல வகையான யோகங்கள் ஏற்படும். குரு கேந்திரம் பெற்றிருப்பதால் உடல் நோய்கள் நீங்கி ஆரோக்கியம் உண்டாகும். மனக் குழப்பம் நீங்கும். ஆனால் பிறருடன் பழகும் போது நிதானம் தேவை.

தொழில், வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். தொழில் தொடர்பான காரியங்கள் வெற்றி பெறும். பொருளாதார முன்னேற்றம் உண்டாகும். பழைய பாக்கிகள் வசூலிப்பதில் வேகம் பிடிக்கும். வியாபாரம் தொடர்பான பிரச்சினைகளில் சாதகமான நிலையே உண்டாகும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் நன்மை தீமை பற்றிக் கவலைப்படாமல் தங்களுக்கு கொடுக்கப்பட்ட பணியை திறம்படச் செய்வார்கள். போட்டிகள் மறையும்.

திருமணம் தொடர்பான காரியங்கள் சாதகமாக பலன் தரும். குடும்பத்தில் இருந்த மறைமுக எதிர்ப்புகள் மறையும். உங்களது வார்த்தைக்கு மதிப்பு கூடும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனக் கசப்பு நீங்கும். பிள்ளைகள் உங்களது பேச்சுக்கு செவி சாய்ப்பார்கள். வாய்க்கு ருசியான உணவும் கிடைக்கும்.

பெண்களுக்கு: கடன் தொடர்பான பிரச்சினைகள் தீரும். பணவரத்து கூடும். மன குழப்பம் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும்.

அரசியல்வாதிகளுக்கு: மேலிடத்தில் இருந்து மனதிற்கு இனிமையான செய்திகள் வந்து சேரும். தொகுதி மக்களைச் சந்திப்பீர்கள். பணம் சம்பந்தப்பட்ட விடயங்கள் சாதகமாக முடியும்.

கலைத்துறையினருக்கு: இலாபமான காலமாக இருக்கும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும். பெரிய அளவிலான ஒப்பந்தகளும் கையெழுத்தாகும்.

மாணவர்களுக்கு: கல்வி தொடர்பான விஷயங்களில் சாதகமான நிலை காணப்படும். திறமையாக செயல்பட்டுப் பாராட்டுப் பெறுவீர்கள்.

பரிகாரம்: திங்கள் கிழமைகளில் சோமவார விரதம் கடைப்பிடிப்பது கஷ்டங்களை போக்கும்.

வரலாற்றில் இன்றைய தினம் 19.01.2018

1917 - லண்டனில் வெடிபொருள் தயாரிப்பு தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 73 பேர் உயிரிழந்ததுடன் 400 பேர் காயமடைந்தனர்.

1920- லீக் ஒப் நேசனில் அமெரிக்கா இணைந்து கொள்வதற்கு எதிராக அமெரிக்க காங்கிரஸ் வாக்களித்தது.

1960 - ஜப்பானும் அமெரிக்காவும் பரஸ்பர பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச் சாத்திட்டன.

1981 - அமெரிக்காவும் ஈரானிய அதிகாரிகளும் ஒப்பந்தம் ஒன்றில் கைச் சிட்டத்தையடுத்து 52 அமெரிக்க பணயக் கைதிகள் 14 மாத தடுத்து வைப்பின் பின்னர் விடுவிக்கப்பட்டனர்.

2014 - பாகிஸ்தானின் பன்னு நகரில் இராணுவ தொடரணி மீது மேற் கொள்ளப்பட்ட தாக்குதலொன்றில் 36 சிப்பாய்கள் உயிரிழந்தனர்.



1993 - செக்குடியரசும் ஸ்லோவாகியாவும் ஐக்கிய நாடுகள் சபையில் இணைந்தன.

நாளை

20.01.2018

சனிக்கிழமை

தை - 07 சதுர்த்தி விரதம்

திதி: திருதியை பி.ப 12.56
நட்சத்திரம்: சதயம் பி.இ. 04.08 வரை
சுபநேரம்: 03.35–05.05 வரை
ராகுகாலம்: 09.35–11.05 வரை

பத்தி எழுத்து

என்றும் உயர்ந்தது எமது தமிழ்மொழி

உலகின் மிகத் தொன்மையான சில மொழிகளில் தமிழும் ஒன்றாகும். தமிழ் எந்த மொழியையும் தழுவி உருவாக்கப்படவில்லை. இதில் ஏராளமான காப்பியங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. தமிழிலிருந்து வேறு மொழிகளும் உருவாகியுள்ளன. இதன் காரணமாகவே தமிழைச் செம்மொழியென அழைக்கின்றோம்.

தமிழ்மொழியைப் பேசுபவர்களைத் தமிழர்கள் என அழைக்கின்றோம். தமிழர்கள் உலகின் பல நாடுகளிலும் வாழ்கின்றனர். இவ்வாறு சுமார் 12 கோடி தமிழர்கள் வாழ்கின்றனர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இதில் ஏழு கோடிக்கும் மேற்பட்டவர்கள் இந்தியாவின் தமிழ்நாட்டில் வாழ்கின்றனர்.

தமது பிள்ளைகள் ஆங்கில மொழியில் பாடங்களைக் கற்க வேண்டும் என்ற விருப்பம் பெரும்பாலான வசதி படைத்த பெற்றோரிடம் காணப்படுகின்றது. இதற்கு அதிக பணத்தைச் செலவிடவும் இவர்கள் தயாராக இருக்கின்றனர். இவர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் வகையில் ஆங்கிலமொழியில் கல்வி கற்பிக்கப்படுகின்ற பாடசாலைகளும் செயற்பட்டு வருகின்றன. பாலர் வகுப்பில் அங்கு சேர்ந்து கல்வி கற்கின்ற சிறார்கள் ஆங்கில மொழியைப் பயன்படுத்துவதைக் காணக்கூடியதாக உள்ளது. தமது பெற்றோர் மற்றும் உறவினர்களிடம் ஆங்கில மொழியிலேயே இவர்கள் உரையாடுவதையும் காணமுடிகின்றது.

இந்தக் குழந்தைகள் தமது தாய்மொழியைப் பயன்படுத்துவதில் சிரமங்களை எதிர்கொள்வதையும் காணமுடிகின்றது. தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் அந்தந்த நாட்டு மொழிகளைப் பயன்படுத்துகின்றனர். இவர்கள் தாய் நாட்டுக்கு வரும்போது குழந்தைகள் தமது பெற்றோருடன் தாம் வாழ்கின்ற நாட்டு மொழியில் உரையாடுவதையும் காணமுடிந்தது.

தொலைக்காட்சிகளில் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்குபவர்கள் ஆங்கில மொழிக்கே முக்கியத்துவம் வழங்குகின்றனர். இந்த நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருக்கும் ஆங்கிலம் தெரியாத நேயர்கள் ஒன்றுமே புரியாது உட்கார்ந்திருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. தொலைக்காட்சிகள் தமிழைப் புறக்கணிப்பதன் நோக்கம் என்னவென்றும் புரியவில்லை. மொழிக்காக இந்த நாட்டில் மிகப்பெரிய போராட்டமே நடந்துள்ளது. தனது மொழியை மறப்பது தாயை மறந்தவர்களுக்குச் சமமெனக் கூறுவார்கள். அந்த அளவுக்கு மொழி முக்கியத்துவம் வாய்ந்தது. புரட்சிக் கவிஞர் பாரதியாரும் பாவேந்தர் பாரதிதாசனும் தமது உயிருள்ளவரை தமிழையே தமது மூச்சாகக் கொண்டிருந்தார்கள். இவர்களைவிட ஏராளமான புலவர்களும் அறிஞர்களும் தமிழை வளர்ப்பதற்காகப் பாடுபட்டுள்ளனர். நாமும் எமது தமிழ் மொழியைக் கண்ணெனக் காப்போம்.

துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூஷணி அம்பாள்

வெள்ளவத்தை பெர்னாந்து வீதியில் அமைந்துள்ள நாகபூஷணி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்கு கூறும் ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள் நாளை சனிக் கிழமையில் இருந்து திங்கட்கிழமை வரை (20,21,22) ஆம் திகதிகளில் ஞான வைரவர் ஆலயம் கலாசாலை வீதி. 2 ஆம் ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு, யாழ்ப்பாணத்தில் அருள்வாக்கு கூறுவார்.

ஞாயிற்றுக்கிழமை அன்னதானம் இடம்பெறும்.

அடியவர்கள் அனைவரும் வருகைதந்து அருள் ஆசியை பெற்றுக்கொள்ளவும்.

பூசை நேரம்: முற்பகல் : 10.30 - 12.30 மணிவரை
மாலை : 5.30 - 6.30 மணிவரை

குறிப்பு : கலாச்சார உடையுடன் வருகை தரவும்.

தொடர்பு : 021 221 9127/ 077 801 2226

விஷேட வைத்திய நிபுணர் சேவையும் மருத்துவ ஆய்வுகூட வசதியும்

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (21.01.2018) அன்று யாழ். மாவட்டத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள எமது **"ஜ மாஷன்ஸ் மெடிக்கல்ஸ்"** நிலையத்தில் விஷேடவைத்திய நிபுணர்சேவை நடைபெறவுள்ளது.

விஷேட வைத்திய நிபுணர் **Dr.Sivaraman VP** முதன் முறையாக வருகைதரவுள்ளார்.

இடம்: i mashan's medicals (pvt) Limited,
No.514/2. Hospital Rd,
Jaffna. (யாழ். போதனா வைத்தியசாலை முன்பாக)

எமது வைத்திய நிலையத்திற்கு ஆண், பெண் இருபால ருக்குமான சுய வேலைவாய்ப்புக்கான விண்ணப்பங்கள் யாழ். மாவட்டத்தின் சகல பகுதிகளிலிருந்தும் வவுனியா விலிருந்தும் கோரப்படுகின்றன.

தொடர்புகளுக்கு - 076 366 1553, 021 222 2625 (Jaffna), 076 76 38531 (Vavuniya) (AVA 248/15)

TRINITY STEEL PRIVATE LIMITED

ஏற்றுமதி சார்ந்த நிறுவனத்தின் வேலை வாய்ப்புக்கள்

உலக சந்தைகளுக்கு விசேடமாக தயாரிக்கப்பட்ட உலோக இணைப்பு பொருள்களைத் தயாரித்து ஏற்றுமதி செய்வதில் நாம் ஈடுபட்டுள்ளோம். எமது நவீன உற்பத்திச் சாலையில் தரமான உற்பத்திகளைத் தயாரிப்பதில் நிலைபேறான, தொழில்நுட்ப ரீதியில் அதிசிறந்த, திடநுட்பமான இயந்திர சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இலங்கையின் அதி உயர் கைத்தொழில் பிரதேசமான கட்டுநாயக்க ஏற்றுமதி வலயத்தில் எமது தொழிற்சாலை அமைந்துள்ளது.

தொடர்ச்சியான நடைமுறை முன்னேற்றத்துடன் தரத்தில் வேறு பாடற்ற தன்மையை உறுதிப்படுத்துவதற்கு கடுமையான தர முறைமை களுடன் சகல செயற்பாடுகளும் கண்காணிக்கப்படுகின்றன. முழுமை யான தர முகாமைத்துவக் கலாசாரத்தை மனதில் பதியவைத்து அதி உயர் தரத்தைப் பேணுவதில் ஒவ்வொரு ஊழியரும் தொடர்ச்சியாக விழிப்புடன் செயல்பட வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றோம்.

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான விண்ணப்பதாரர்களை நாம் எதிர்பார்க்கின்றோம்.

01. PRODUCTION HELPER — 40
- க.பொ.த.சாதாரண தரம்

LKR 30,000/- To 40,000/-

02. MECHANICAL TECHNICIAN — 04
- NVQ
- நிலை 5 உடன் தொடர்புடைய துறையில் 3-5 ஆண்டு வரை அனுபவம்

NEGOTIABLE

03. LATHE MACHINE OPERATOR — 02
- NVQ
- நிலை 5 மற்றும் 6 உடன் தொடர்புடைய துறையில் 2-4 ஆண்டு வரை அனுபவம்

NEGOTIABLE

04. MILLING OPERATOR — 02
- NVQ
- நிலை 5 மற்றும் 6 உடன் தொடர்புடைய துறையில் 2-4 ஆண்டு வரை அனுபவம்

NEGOTIABLE

04. GRIDING OPERATOR — 04
- NVQ
- நிலை 3 மற்றும் 6 உடன் தொடர்புடைய துறையில் 2-6 ஆண்டு வரை அனுபவம்

NEGOTIABLE

மாற்றத்தை அடிப்படையாக கொண்டு 12 மணிநேர சேவை (Shift Basis)

2018 ஜனவரி 20ம் திகதி சனிக்கிழமை நேர்காணல்நடைபெறும்

இடம் மற்றும் நேரம்	
கிளிநொச்சி	யாழ்ப்பாணம்
கூட்டுறவு மண்டபம்	சுபாஸ் ஹோட்டல்
மப்போ ஜங்ஷன், ஏ9 வீதி,	இல.49, விக்டோரியா வீதி,
கிளிநொச்சி.	யாழ்ப்பாணம்.
காலை 9.30 மணிமுதல் மதியம் 12.00 வரை	மாலை 2.00 மணிமுதல் மாலை 5.00 வரை

உங்கள் CV ஐ மனிதவள முகாமையாளருக்கு அனுப்பி வைக்கவும்

Trinity Steel (Pvt) Ltd,
Lot No. 09, Phase 01, Katunayake EPZ,.
Contact - +94 112 253 707 / 0777 322 957
Email: david@trinitysteel.lk/ hrd@trinitysteel.lk

DLB உதுலுபதி CAR PLUS

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வரம் 41
சீட்டிழுப்பு திகதி 17.01.2018

வெற்றி இலக்கங்கள்: 10 18 26 G
அதிஷ்ட நாள்: ஞாயிற்றுக் கிழமை
இரண்டாம் வெற்றியாளர்கள்: பத்து இலட்சம் | ஒரு இலட்சம்: 01 | 16
வழங்கப்பட்ட மொத்த பரிசு: 45, 81, 700/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>DL என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது தூரித அனுப்பு 1919

அடுத்த சீட்டிழுப்பு 2018.01.24ஆம் திகதி முற்பகல் வேளை நடைபெறும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வரம் 1434
சீட்டிழுப்பு திகதி 18.01.2018

வெற்றி இலக்கங்கள்: 37 51 53 63 அதிஷ்ட எழுத்து W

அடுத்த திங்கட்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 15, 347, 668/=

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது தூரித அனுப்பு - 0114 824 824, 0112 333 776

ஜஸ்ன் நீர் டிக்கெட்டுகள் 2018.01.22 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கெட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சவர்தன வாகனாவ

Development Fortune

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வரம் 110
சீட்டிழுப்பு திகதி 18.01.2018 | வியாழக்கிழமை

வெற்றி இலக்கங்கள்: 05 27 30 63
சுப்பர் இலக்கம்: 01
அதிஷ்ட மாதம்: ஒக்டோபர்

அடுத்த மிகப்பெரிய ஜக்பொட்	அடுத்த சுப்பர் ஜக்பொட்	அடுத்த ஜக்பொட்
ரூ. 8,403,844/=	ரூ. 3,309,341/=	ரூ. 1,146,186/=

2018.01.20ஆம் திகதி சனிக்கிழமை இளஞ்சிவப்புநிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கனிதி கொல்வின் ஆர்.டீ சில்வா மாவத்தை, பூளியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அனுப்பு: 0114 824 824 www.dlb.lk

எமது கல்லூரியின் ஆசிரியர்
திரு.பொ.கேதீஸ்வரன்
அவர்களின் அன்புத் தந்தை
வல்லிபுரம் பொன்னம்பலம்
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கண்ணீர் அஞ்சலி

நலன்புரி கழகம், யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி.

(CS 13037/15)

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி நாகேஸ்வரி வரதலிங்கம்
(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

மண்ணில் 01.04.1937 — விண்ணில் 30.01.2017

அல்லும் பகலும் எம்மை ஆதரித்தாயே!
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
சென்றதேனோ?
துயர் உற்றவேளையில் எம்துயர் துடைத்தீர்கள்
இன்று எங்கள் துயர்பகிரவோ எம்மோடு
தாயே நீங்கள் இல்லை...!
ஆண்டொன்று ஆனதம்மா – உங்கள்
அரவணைப்பை நாம் இழந்து
கருணை நிறைந்த கடவுளே மீண்டும் ஒரு கருவறை
தந்தால் எம் அன்னையின்
வயிற்றில் உதிக்கும் வரத்தைத் தந்திடுவாய்

உங்கள் பிரிவால் துயருறும்
கயல்விழி ராஜாராம் (மகள்).
077 480 9821

"நாகேஸ்தான்"
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

(CS 12098/17)

தினகரன்

விளம்பர தொடர்புகளுக்கு
021 493 1111,
advt@uthayan.com

போட்டிப்பரீட்சை விஷேட வகுப்புக்கள்

திறந்த பல்கலைக்கழக சட்டமானி நுழைவுக்கு
பிரதி ஞாயிறு
9.00 → 1.30

ஆசிரியர் தெரிவுக்கு
பிரதி ஞாயிறு
10.00 → 1.30

கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதி சனி
9.00 → 12.30

திட்டமிடல் சேவை
Limited,
பிரதி சனி 9.30 → 2.00
Open,
பிரதி சனி 10.30 → 3.00

கணக்காளர் சேவை
சனி, ஞாயிறு
9.00 → 4.00

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு யாழ்.நகர்.

கார், வான் வாடகைக்குத்தேவை

கார்கள், வான்கள் மாதாந்த வாடகைக்கு தேவை.
தொடர்பு - 071 0404 978

தவறிவிட்டது

பொன்னர் துரைராசா ஆகிய எனது சாரதி அனுமதிப் பத்திரம் (A 004088068) 17.01.2018 ஆம் திகதி சுன்னாகத்தில் இருந்து யாழ்ப்பாணம் பயணித்த பேருந்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
077 945 1099

வேலையாள் தேவை

தனியார் கல்வி நிலையத்திற்கு
*அலுவலக உதவியாளர் (ஆண் / பெண்)
*பகுதி நேர வேலையாள் (ஆண்)
T. P : 077 469 6695, 070 339 6695

விற்பனைக்கு

கிளிநொச்சி வட்டக்கச்சியில் 4 ஏக்கர், 5 ஏக்கர் காணிகள் விற்பனைக்குண்டு. ஒவ்வொன்றிலும் பயன்தரு தென்னைகள், வீடு, கிணறு தொலைபேசி மின்சாரம், நெல்வயல் உண்டு.
தொடர்பு - 075 0824 530

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna

கார்கிள்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)

இப்பொழுது திரையில்

10.00 / 1.00 / 4.00 / 7.00 — வெள்ளி/சனி 10.00 PM

10.15 / 1.15 / 4.15 / 7.15 — வெள்ளி/சனி 10.15 PM

10.30 AM / 4.30 PM — வெள்ளி/சனி 10.30 PM
1.30 PM / 7.30 PM

விசாரணை ☎ 021-2227712
MajesticCineplexSL
www.ceylontheatres.lk

முதலாம் ஆண்டு நினைவுதின அழைப்பு

கடந்த (29.01.2017) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த

திருமதி கௌரிமனோகரி பவளநாதன்

அவர்களின் முதலாம் ஆண்டுத் திவச நிகழ்வுகள் இன்று (19.01.2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் வருகைதந்து அன்னாரின் ஆத்மாசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
021 221 6900

அம்மன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

cx 13014-13)

For Medical Profession

Extra flexible Knee Hummer



Rechargeable Examination Torch With Charger cable



Square Parts for Bp Meter & Stethoscope
Export Quality Examination Gloves GRIFF 100'S – 507/=
High Quality Malaysian Gloves BERGAMOT 100'S– 585/=

Vanikaa Surgicals 203, Hospital Road, Jaffna.
Tel - 021 222 0077 Mob - 077 4422367
E-mail - vanisurgi@sltnet.lk

உதயன்
விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com, 021 493 1111

மரண அறிவித்தல்

அரியரத்தினம் கனகரத்தினம்

உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்)

உரும்பிராய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அரியரத்தினம் கனகரத்தினம் 17.01.2018 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அரியரத்தினம் - குட்டிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னம்பலம் - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும், ரகுநாதன் (பிரான்ஸ்), சிவகுமார் (ஜேர்மனி), ஜெயகுமார் (பாரதி.com உரும்பிராய்), நாகஜோதி, பத்மதீபன் ஆகியோரின் அன்பு தந்தையும், பாஸ்கரன் (வலயக்கல்வி அலுவலகம், தீவகம்), கவிதா (பிரான்ஸ்), ராதிகா (ஜேர்மனி), பிரசன்னா (பாரதி.com உரும்பிராய்) ஆகியோரின் அன்பு மாமாவும், சுபப்பிரியன், மதுஷாங்கி, ஷானியா, ஆதர்ஷி (பிரான்ஸ்), நிவேதிகா, சதுர்சன், சாருகேஸ் (ஜேர்மனி), துவாரகா, யதுர்சனா, தரணிகன், பிருதீவ், காவ்யா (உரும்பிராய்) ஆகியோரின் ஆசைப்பேரனும், காலஞ்சென்ற பாலசிங்கம், செல்வரத்தினம், சிவகுருநாதன், தனபாலசிங்கம் (மிருக வைத்தியர்), காலஞ்சென்ற திருநாவுக்கரசு ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2018) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

077 727 9794

(AIA/13015)(11)

மரண அறிவித்தல்

சின்னத்துரை கமலேஸ்வரன் (பேபி)

(ஊழியர் - மஸ்கன் லிமிட்டெட், ஈவினை)

மூளாய், தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும், சிந்தாமணிப் பிள்ளையார் கோயிலடி, நவாலிதெற்கு, மானிப்பாயையும் கனடாவையும் வசிப்பிடமாகக் கொண்ட சின்னத்துரை கமலேஸ்வரன் 15.01.2018 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-சீதேவிப்பிள்ளைதம்பதிகளின் அன்புமகனும், நகுலேந்திரன்-தங்கரெத்தினம் (கனடா) தம்பதிகளின் அன்பு மருமகனும், நகுலேஸ்வரியின் அன்புக் கணவரும், ரிஷிகேசவன், ருஷாளினி, தர்சன், சுபாங்கன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற திருமதி கமலேஸ்வரி மற்றும் சுகன்யா ஆகியோரின் சகோதரரும், சிவமணி (ஓய்வுபெற்ற அதிபர்), வின்சன் விஜயகுமார் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (18.01.2018) வியாழக்கிழமை கனடாவில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சிவமணி குடும்பம்

சிந்தாமணிப் பிள்ளையார் கோயிலடி, நவாலி தெற்கு, மானிப்பாய்.

தோற்றம் :- 30.05.1960
மறைவு :- 15.01.2018

077 725 0914

(AIA/13015)(11)

மரண அறிவித்தல்

வினாசித்தம்பி ஏகாம்பரநாதன்

யாழ். மிருசுவில் வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வினாசித்தம்பி ஏகாம்பரநாதன் 17.01.2018 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி - தையல்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வரும் காலஞ் சென்றவர்களான வேலுப்பிள்ளை - சரஸ்வதிப்பிள்ளை தம்பதி களின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்ற இரவிச்சந்திரகுமார் மற்றும் பாலச்சந்திரகுமார் (வீமன்), குகச்சந்திரகுமார் (கனடா), சிவச்சந்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற காமாட்சியின் அன்புச் சகோதரரும், தயாளினி(கனடா), நர்மதா(சுவிஸ்), பத்மலோஜினி(கனடா), சிவாந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும், இராகவி, ஆத்மிகா, கவீனா, காவியா, கனித்ரா, அதிசனா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2018) வெள்ளிக்கிழமை பி.ப 03.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மிருசுவில், பெரியானோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

குகன் (கனடா +16474075644
செல்லிடப்பேசி : +16478795644)
சிவன் (இலங்கை
செல்லிடப்பேசி : +94770234426)

மிருசுவில் வடக்கு,
மிருசுவில்.

(C 5578/15)

'மாரி 2' இல் பாடவுள்ளார் இளையராஜா

மாரி படத்தின் வெற்றியைத் தொடர்ந்து மீண்டும் பாலாஜி மோகன் – தனுஷ் கூட்டணியில் 'மாரி – 2' உருவாகி வருகிறது. இதில் தனுஷுக்கு ஜோடியாக சாய்பல்லவி நடிக்கிறார். மேலும் முக்கியகதாபாத்திரத்தில்வரலட்சுமிசரத்குமாரும்நடிக்கஒப்பந்தமாகி இருக்கிறார்.

வில்லன் கதாபாத்திரத்தில் மலையாள நடிகர் டோவினோ தோமஸும், முக்கிய கதாபாத்திரத்தில் கிருஷ்ணாவும் நடிக்கிறார்கள்.

10 வருடங்களுக்கு பிறகு தனுஷ் படத்திற்கு யுவன் ஷங்கர் ராஜா இசைமைக்கிறார் என்பது சிறப்பம்சம். அதை விட சிறப்பம்சம் என்னவென்றால் யுவன் இசையில்உருவாகும்சிறப்புப்பாடலுக்கு இளையராஜா பாட்டு பாட இருக்கிறார்.

ருவிற்றர்

twitter.com/kds_twitz

தன் பெற்றோர்களை சுமையெனக்கருதிய ஒருவன் தன் பிள்ளைகளால் சேர்க்கப்பட்டான் முதியோர் இல்லத்தில்!!!

twitter.com/pcshubha

ஊசியின் துளையை சரிசெய்த பின்னரே உடையின் கிழிசலை சரிசெய்கிறது நூல்

twitter.com/_itzJude

முள்ளை முள்ளால் எடுத்தலும் என்னை என்னால் திருத்துவதும் உலகின் தலைசிறந்த காரியங்களில் சில..

உலகிலேயே அதிக ஊதியம் வழங்குவதற்கு தகுதியான பணி எது?

பொறுமையான முதலாம் வகுப்பு ஆசிரியரும்

நோயாளியின் காயத்தில் வழியும் சீழை மனங்கோணாமல் துடைக்கும் தாதியுமே

அதிக ஊதியம் பெறத் தகுதியானவர்கள்.

ஒரு நல்ல நண்பன் நாம் விழனும்னு நினைக்க மாட்டான்.

அப்படி விழுந்திட்டா சிரிக்காம இருக்க மாட்டான்



நவீன உற்பத்தியும் உணவும்

உன்னோட அப்பா என்ன வேலை செய்கிறார்...

எங்க அம்மா சொல்ற எல்லா வேலையும் செய்வார் சேர்...

சுடோக்கு

எண் விளையாட்டு

9			4					
4				7	9	2		
7	5			1		4		
2		3						
			8		5			
						7		3
		1		4			8	5
		5	6	9				7
					3			2

நேற்றைய விடை

8	7	5	9	2	6	4	1	3
4	2	1	7	3	8	5	9	6
9	6	3	5	4	1	8	7	2
5	1	2	8	7	3	6	4	9
7	4	6	2	1	9	3	5	8
3	8	9	6	5	4	1	2	7
6	3	7	1	9	5	2	8	4
1	9	8	4	6	2	7	3	5
2	5	4	3	8	7	9	6	1

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரை களையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளை யும் கொண்டி ருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டி களுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

இன்றைய நாள்

உங்களுக்கு எப்படி?

மேடம்: கடின பணிகளையும் எளிதாக நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த இடையூறு விலகும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

இடபம்: பொது இடங்களில் வீண் பேச்சு வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பொறுப்பு அதிகரிக்கும். லாபம் சுமாராக இருக்கும். ஓய்வு உடல்நலத்தை சீராக்கும்.

மிதுனம்: சிறு அளவிலான குளறுபடி ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும். பணியர்ளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். உறவினரால் உதவி கிடைக்கும்.

கடகம்: தவறாக விமர்சித்தவர் கூட அன்பு பாராட்டுவர். தொழில், வியாபாரம் வளர்ச்சிபெற கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்துவது நல்லது. இலாபம் சுமாராக இருக்கும்.

சிங்கம்: நேர்மை எண்ணத்துடன் செயல்படுவீர்கள். தொழில், வியாபாரத்தில் நடைமுறை சிறப்பாக இருக்கும். குடும்பத்தினரின் தேவையை நிறைவேற்றுவீர்கள்.

கன்னி: செயல்களில் நிதானம் பின்பற்றுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மந்தநிலை உருவாகலாம். இலாபம் சுமார். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாகலாம்.

துலாம்: செயல்களில் கவனச்சிதறல் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் கழன உழைப்பும் தேவைப்படும். பணவரவை விடச் செலவு அதிகரிக்கும்.

விருச்சிகம்: மன நிறைவுடன் வாழ முற்படுவீர்கள். உறவினர் வருகையால் வீட்டில் மகிழ்ச்சி அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும்.

தனுசு: புதிய முயற்சியில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை தாமத கதியில் இயங்கும். சேமிப்பு பணம் முக்கிய செலவுகளுக்குப் பயன்படும்.

மகரம்: எதிர்பார்த்த முக்கிய செயல் எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரம் செழித்து புதிய சாதனை உருவாகும். கூடுதல் வருமானம் கிடைக்கும்.

கும்பம்: குடும்பச் சிரமம் பற்றி பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரம் சீர் பெற விடாமுயற்சி தேவைப்படும். பணியாளர்கள் பணிச்சுமையை சந்திப்பர்.

மீனம்: முன்யோசனையுடன் செயல்பட்டு நன்மை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்திப்பணி சிறந்து விளங்கும். கூடுதல் இலாபம் கிடைக்கும்.

கத்தரிக்கோலும் ஊசியும்

ஓர் ஊரில் தையற்காரர் ஒருவர் இருந்தார். அவர் அதிகம் படிக்காதவர் ஆனால் கேள்வி ஞானத்திலும் இறை அன்பிலும் சிறந்தவர். ஆதலால் அந்த ஊர் மக்கள் தங்கள் பிரச்சினைகளுக்காக அவரிடம் சென்று நல்ல நியாயமான தீர்வுகளைப் பெறுவதோடு மன அமைதியையும் பெற்றுச் செல்வது வழக்கம். அவருடைய சொல்லும் செயலும் அறிவு பூர்வமானதாக இருக்கும் அதனால் அவருடைய புகழ் எங்கும் பரவி இருந்தது.

இவர் பற்றிக் கேள்விப்பட்ட அந்த ஊர் அரசர் அவரைத் தன் அரண்மனைக்கு வரவழைத்தார். அவரும் அரசனின் விருப்பப் படி அரண்மனைக்கு வந்தார். அரசர் அவரை சிறப்பாக வரவேற்று அவரது தொழிலைக்குறிக்கும் வண்ணமாகத் தங்கத்தில் செய்து வைரம் முத்துக்கள் ஆகியன பதித்த கத்தரிக்கோல் ஒன்றை அவருக்குப் பரிசாக அளித்தார். தையற்காரரோ அந்தப் பரிசை ஏற்க மறுத்தார். வியப்படைந்த அரசர் "ஐயா இது மிகவும் விலையுயர்ந்த பரிசு. இதை ஏன் மறுக்கிறீர்கள். இதைவிட மேலான பரிசு வேறு ஏதாவது வேண்டுமா? அப்படியானால் அது என்னவென்று எனக்குச் சொல்லுங்கள். உடனே அதனை உங்களுக்கு வழங்க உரிய ஏற்பாடுகளைச் செய்கிறேன் என்றார். அவரோ "ஆம் அரசே ! எனக்கு இந்தக் கத்தரிக்கோல் வேண்டாம். ஒருசிறிய ஊசியை எனக்குப் பரிசாக அளியுங்கள். அதுவே நான் விரும்பும் பரிசு" என்றார். மன்னனுக்கோ ஆச்சரியம் தாங்க முடியவில்லை. "அறிவில் சிறந்தவரே உமது விருப்பம் மிகவும் புதுமையாக உள்ளதே. விலைமதிப்பற்ற இந்தத் தங்கக் கத்தரிக்கோலை விடவும் நீங்கள் கேட்கும் ஊசி எந்த விதத்திலே உயர்ந்தது?" என்று கேட்டார்.

"மன்னா! நீங்கள் எனக்குத் தரவிருக்கும் கத்தரிக்கோல் விலைமதிப்புள்ளதுதான். ஆனால் அதன் வேலை வெட்டுவதே. ஆனால் ஊசியோ வெட்டுண்டதை இணைத்து ஒன்று சேர்த்திடும் உயர்ந்த பணியைச் செய்கிறது. நான் வெட்டுவதை அல்ல இணைப்பதை மட்டுமே விரும்புபவன்"என்றார்.

இதனைக் கேட்ட அரசர் அவர் விரும்பிய பரிசை வழங்கியதுடன் புதிய தோர் செய்தியை உணர்ந்து கொண்ட மகிழ்ச்சியில் திளைத்தார்.

தையல் இயந்திரம்

துணிகளை ஆடைகளாக்குவதற்கு தையல் மிகவும் முக்கியமான ஒன்று. அதைச் செய்வதற்கு ஒரு பொறியை அமைக்க வேண்டும் என மனிதன் உணர்ந்தான். 1790ஆம் ஆண்டில் தோமஸ் செயிண்ட் என்னும் ஆங்கிலேயர் ஒரு தையல் இயந்திரத்தை அமைத்தார். தோலைத் தைப்பதற்காகவே அது செய்யப்பட்டது. ஆனால்அது உபயோகப்படுத்தப்படவில்லை. 1830ஆம் ஆண்டில் பார்த்தெலமி திம்மோனியர் என்னும் ஒரு எளிய பிரெஞ்சு தையல் தொழிலாளி ஒரு தையல் இயந்திரத்தை அமைத்தார். அந்தப் பொறி ஏறக்குறைய இன்றைய தையல் இயந்திரத்தை ஒத்திருந்தது. இது சிலகாலம் பிரெஞ்சு நாட்டில் உபயோகத்தில் இருந்தது. ஆனால் கைத் தொழிலாளர் தையல் இயந்திரத்தை தமது எதிரியாகக் கருதினர். அது தமது பிழைப்புக்கு உலைவைத்து விடும் என்று கருதி சீற்றமடைந்தனர். அவர்கள் கூட்டமாகத் திரண்டு வந்து திம்மோனியரின் தொழிற்சாலையையும் அங்கு உற்பத்தி செய்யப்பட்டு வந்த தையற்பொறிகளையும் தாக்கி அழித்தனர். அவர்களது வெறிச் செயல்களால் திம்மோனியர் வறுமைப்பிடியிலிருந்து மீள முடியாமல் மாண்டார்.

முதல் தையல் இயந்திரத்தை உபயோகத்துக்குக் கொண்டு வந்த பெருமை எலியாஸ் ஹோலே என்பவருக்குக் கிடைத்தது. 1851ஆம் ஆண்டு ஐஸக்சிங்கர் என்பவர் தனது தையல் இயந்திரத்தைப் பெருவாரியாக உற்பத்தி செய்து விற்பனை செய்யும் தனியுரிமையை அமெரிக்காவில் ஏற்படுத்தினார். யாருடைய தையல் இயந்திரத்துக்கு முதலிடம் தரவேண்டும் என்பது பற்றி ஹோலேயிக்கும் சிங்கருக்குமிடையே பிரச்சினை ஏற்பட அவர்கள் நீதிமன்றம் சென்றனர். ஹோலே வெற்றி பெற்றார். அப்போது உபயோகத்தில் இருந்த ஒவ்வொரு வகையையும் சேர்ந்த தையல் இயந்திரத்துக்கும் அவருக்கு கண்டு பிடிப்பு உரிமைத் தொகை கிடைத்தது. இன்று ஆயிரக் கணக்கான விதங்களில் தையல் இயந்திரங்கள் கிடைக்கின்றன. தோலைத் தைப்பதற்கும் சிறப்புத் தொப்பிகளைத் தயாரிக்கவும் பொத்தான்களைத் தைக்கவும் பூ வேலைப்பாடுகள் செய்வதற்கும் தனித்தனியாக தையல் இயந்திரங்கள் உள்ளன.

பிறருக்கு உதவுவோம்

குட்டி முயல் ஒன்று இரை தேடுவதற்காக தனது இருப்பிடத்தை விட்டு வெளியே வந்தது. அது ஓரிடத்தில் மண்ணில் புதைந்திருந்த கரட் கிழங்கைக் கண்டது. அந்த முயல் சிறியதாக இருந்ததால் அந்தக் கிழங்கைத் தோண்டி எடுக்க முடியவில்லை. அதனை வெளியே எடுக்க என்ன செய்யலாமென யோசித்தது. அருகில் ஒருமான் அங்கிருந்த பசும் புற்களை மேய்ந்து கொண்டிருப்பதைக்கண்டது. உடனே அது அந்த மானிடம் சென்று அந்தக் கிழங்கைத் தனக்கு தந்துதவும்படி கேட்டது. மானும் கிழங்கை புதைந்திருந்த இடத்தில் தனது கொம்பைக் கொண்டு நிலத்தைக் கிளறிவிட்டது. அப்போது முயல் எளிதாக அந்தக் கிழங்கை எடுத்துச் சாப்பிட்டது. உடனே மானுக்கும் நன்றி சொன்னது. பின்னர் மகிழ்ச்சியுடன் திரும்பிச்சென்றது.

புல்வெளிக்கு ஓடிச் சென்ற மான் வேடன் ஒருவன் விரித்த வலையில் சிக்கி.கொண்டு அலறி என்ன செய்வதென்று தெரியாமல் தவித்து நின்றது. மானின் அலறல் சத்தம் கேட்டு ஓடிவந்த முயல் மான் சிக்கியிருந்த வலையில் சில பகுதிகளைத் தனது கூர்மையான பற்களால் கடித்து வலையைத் துண்டித்து மானை விடுவித்தது. வலையில் இருந்து விடுபட்ட மான் அந்தக் குட்டி முயலுக்குத் தனது நன்றியையும் பேரன்பையும் தெரிவித்தது. அன்றிலிருந்து மானும் முயலும் சிறந்த நண்பர்களாயினர்.

நாம் செய்வதே. எமக்குத் திரும்பிக் கிடைக்கும்
நல்லதே செய்வோம் நன்மையைப் பெறுவோம்.

பாவோபாப் ஓர் அதிசயமரம்

இம்மரங்கள் 16 அடிமுதல் 98அடிவரை வளரக் கூடியவை. இந்த மரத்தின் குறுக்களவு விட்டம் 23 அடிமுதல் 36 அடிவரை உள்ளது. அதற்கு இணையாக மரத்தின் சுற்றளவு 154 அடிவரை உள்ளது. இந்த மரங்களின் அடிமரத்தின் உட்பகுதி மூங்கில் போல் வெற்றிடம்கொண்டதாகும் நீர் நிறைந்தும் இருக்கும் பெரியதோர் பாவோபாப் மரத்தின் நீர் கொள்ளளவு ஒரு லட்சத்து 20 ஆயிரம் லீற்றர்கள் ஆகும். கடும் கோடையில் கூட சொட்டு நீரும் இந்த மரத்தில் இருந்து ஆவியாகிப் போவதில்லை. இந்த மரங்கள் முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட நாடு மடகஸ்கார். ஹட்விகாலத்தில் மடகஸ்கார் மற்றும் ஆபிரிக்க நாட்டு ஏழை மக்கள் இந்த மரத்தின் நீரைப் பருகிப் பயன்பெறுவர். இந்த மரத்தின் நீரில் பயனுள்ள சத்துக்கள் இருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த மரத்தின் மேல் மரம் காய்ந்துவிட்ட போதிலும் பல கிராம மக்கள் அடி மரத்தை நீர்தேக்கத் தொட்டியாகப் பயன்படுத்துவதாக அறிவியலாளர்கள் கூறுகின்றனர். இந்த மரங்களில் ஏழு வகை மரங்கள் உள்ளன. இவற்றில் ஆறுவகை மடகஸ்கார் நாட்டுக்குரியவை. இந்த ஆறில் ஒரு வகை மட்டும் ஆபிரிக்க நாடுகளில் உள்ளது. ஏழாவது வகை ஆஸ்திரேலிய நாட்டுக்குரியதாக விளங்குகிறது.

பாவோபாப் என்று இந்த வகை மரங்களின் பொதுவான பெயர். இம்மரத்தை போஆப் போவா போவா, தலைகீழ் மரம், குரங்குரொட்டி மரம் என்றெல்லாம் அழைக்கின்றனர். தென் ஆபிரிக்காவின் லிம்போமா மாகாணத்தில் உள்ள மரம் உலகின் பெரிய மரமாகக் கருதப்படுகிறது. ஏனைய மரங்களில் அவற்றின் வயதைக் குறிக்கும் வளர்ச்சி வட்டங்கள் போல இந்த மரங்களுக்குக் கிடையாது. ஆனால் காபன் டேட்டிங் முறையில் இவற்றின் வயதைக் கணிக்க இயலுமெனக் கூறப்படுகிறது. இம்மரத்தின் இலைகளைக் கீரைபோல சமைத்து உண்ணலாம். ஆபிரிக்கா நாடுகளான மலாவி, சிம்பாப்வே, சகோல் ஆகியவற்றில் இலைகளைப் பச்சையாகவும் உலரவைத்துப் பொடிசெய்து உணவாக உண்கின்றனர். நைஜீரியா நாட்டில் பாவோபாப் இலைகளை கூக்கா என்று குறிப்பிடுகிறார்கள். இந்த இலைகளில் இருந்து கூக்கா சூப் தயாரித்து உண்கிறார்கள். இந்த மரத்தின் பழங்களில் தோடம்பழத்தைக் காட்டிலும் கூடுலனான அளவில் விற்றமின் சி நிறைந்துள்ளது. பசும்பாலைக் காட்டிலும் கல்சியமும் நிறைந்துள்ளது. இந்தப் பழத்தின் சதைப்பகுதியை விதை நீக்கி அப்படியே சாப்பிடலாம்.



புள்ளிகளை இணைத்து படத்தை முழுமை செய்வோம்

இரா. நிஷாந்தன்

ஆதி பராசக்தி கண்ட தாட்சாயணி அவதாரம்

தட்சன் கொண்ட சிவ நிந்தனையையும், கண்ட அருள் ஒப்பனையையும் புரிதல்

உலக சிருஸ்டியின் பொருட்டு, ஐந்தொழில்களில் ஒன்றான படைத்தல் தொழிலை மேற் கொள்கின்ற பிரம்மதேவனின் புதல்வனாக தட்சன் விளங்குகிறான். பிரஜாபதிகளில் ஒரு வனாக திகழ்கிறான். முழுமுதற்பொருளான சிவப் பரம்பொருளை விடவும் மகாவிஸ்ணு வையே போற்றித் துதித்து முழுமுதல் கடவு ளாக ஏற்று வழிபாடு இயற்றி வந்தான்.

தாட்சாயணியின் அவதாரம்

இந்தநிலையில் உலக முழுமையின் இயக் கம் என்பது சிவப் பரம்பொருளின் ஆக்க சக்தியாகவும், அன்பின் ஊக்க சக்தியாகவும் திகழும் பார்வதி தேவியின் சக்தியின் வாயி லாகவே நடைபெறுகின்றது என்பதை அறிந் தும் உணர்ந்தும் கொண்டான் தட்சன். பார்வதிதேவியேதனக்கு மகளாகப் பிறக்க வேண்டும் என கடும் தவம் மேற்கொண் டான். அதன்படியே, அவன் விருப்பத்தினை நிறைவேற்று வதற்கு திருவுளம் கொண்ட ஆதி பராசக்தியானவள் தட்சன் மகளாக அவதாரம் கொண் டாள். இத்தகு தன்மையின் சிறத் தல் கொண்டே பராசக்தியான வள் 'தாட்சாயணி' மற்றும் 'சதி தேவி' எனும் நாமகரணங்கள் கொண்டு சிறப்புற்றாள்.

தாட்சாயணி ஈசனை மணம் புரிதல்

சிவப் பரம்பொருளே தன் கணவனாக வர வேண்டும் என்ற விருப்பின் களிப்போடு சிறு பராயம் முதலே தவம் புரியத் தொடங்கி னாள் தாட்சாயணி. மகளின் இத்தகு செயற் போக்கினை அவதானம் கொண்ட தட்சனோ மனம் கலங்கினான். தன் மகள் சிவ பெரு மானை துணைவனாக அடைவதை விரும் பாதிருந்தான். ஆனாலும் தாட்சாயணியோ தன் முடிவில் மாற்றமின்றி உறுதியாக இருந்தாள். இறுதியில் அவள் விருப்பப்படியே சிவப் பரம்பொருளும் அவளை மணம்பு ரிந்து கைலாயம் அழைத்துச் சென்றார்.

தட்சன் மேற்கொண்ட யாகம்

இது இவ்வாறு இருக்க ஒரு தடவை தட்சன் மிகப் பெரும் யாகம் ஒன்றினை நடத்தி னான். அந்த யாகத்துக்கு விஸ்ணு, பிரம்மா மற்றும் இந்திரன் முதலான தேவாதி தேவர் கள் அனைவருக்கும் அழைப்பு விடுத்தி ருந்தான். ஆனால் தன் மகளான தாட்சாய ணியையும் மற்றும் யாகங்களில் முதன்மை பெறும் மும்மூர்த்திகளில் ஒருவராகவும், தன் மருமகனாகவும் திகழும் சிவப்பரம் பொருளையும் அழைக்காது யாகத்தை நடத்தி முடிக்கவும் தீர்மானித்தான் தட்சன்.

யாகத்தில் கலந்துகொள்ள தாட்சாயணி விருப்பம் கொள்ளல்

இந்த சந்தர்ப்பத்திலே தன் தந்தை நடத்தும் யாகம் தொடர்பில் அறிந்துகொண்ட தட்சா யணி, குறித்த யாகத்தில் தானும் கலந்து கொள்ளும் விருப்பம் கொண்டாள். தன் பதி யான சிவபெருமானிடத்தில் தந்தையின் யாகத்தில் கலந்து கொள்வதற்குரிய அனும தியை வேண்டினாள். சிவப் பரம்பொருளும் தாட்சாயணியை விழித்து, "தேவி...! தட்சன் நடத்தும் யாகம் தொடர்பில் எமக்கு அழைப்பு விடுவிக்கப்படவில்லை. ஆகவே, அழையா தவர் ஒருவரின் நிகழ்வில் கலந்து கொள்வது நற் செயலன்று. அங்கு செல்ல வேண்டாம்." எனக் கூறினார்.

ஆனால் தாட்சாயணியோ இணக்கம் தெரி விக்க மறுத்தாள். தன் பதியான ஈசனை விழித்து, "இந்த நிகழ்வு என் வீட்டு நிகழ்வு. அதில் கலந்து கொள்ள எமக்கு அழைப்பு விடுக்க வேண்டிய அவசியம் இல்லை. நான் கண்டிப்பாக அவ்விடம் செல்லவே விரும்பு கின்றேன்." என தன் நியாயத்தை உறுதிபட மொழிந்து நின்றாள். கைலையம்பெருமா னும் தாட்சாயணியின் வார்த்தைகளை செவிமடுத்தவராய் அவருடைய பயணத்தை தடுக்க விரும்பாது, "தேவி...! தாராளமாக உன் தந்தையின் யாக நிகழ்வுக்கு சென்று வரலாம். ஆனால் நான்வரமுடியாது. உமைஅவ மதிக்கும் விதமான செயற்பா டுகள் ஏதாவது நடந்தேறின், அதனை நான் பொறுத்துக் கொள்ள மாட்டேன்." எனக் கூறி தாட்சாய ணியை யாகத்துக்கு அனுப்பி வைத்தார்.

தட்சன் சிவ நிந்தனை புரிதல்

இவ்வாறாக தன் தந்தை மேற்கொள்ளும் யாக நிகழ்வுக்கு வருகை தந்த தாட்சாய ணியை தட்சன் கண்டு கொள்ளவோ, அவ ளுக்கு வரவேற்பளிக்கவோ இல்லை. மகள் என்ற பாசமும் பரிவும் இன்றி அவளை அவ மானப்படுத்தும் வகையில் பல வார்த்தை களை மொழிந்தான். தாட்சாயணியின் முன்பாகவே சிவபெரு மானை பலவாறாக நிந்திக் கத் தொடங்கினான். தன் முன்பாகவே தன் பதியா கிய ஈசனை அவமதித் தமை குறித்தும், மகள் என்றும் பாராமல் தன்னை அவமதித்த தன்மை கண்டும் மனச் சஞ்சலம் கொண்டாள். அக்கணமே அங்கிருந்த யாக குண்டத்தில் பாய்ந்து தன் உயிரையும் மாய்த்துக் கொண்டாள்.

> தன் உயிரில் சரிபாதியாக, தன் சக்தியாக திகழும் தாட்சாயணி அக்னியில் பாய்ந்து உயிரை மாய்த் துக் கொண்ட செய்தியறிந்து கோபம் கொண்டு சிவதாண்டவம் புரிந்தார் ஈசன். தன் சடாமுடியில் இருந்து தன் அம்சமாக திகழும் வீரபத்திரை தோற்றுவித்தார். தட்ச னின் யாகசாலைக்கு சென்று, அங்குள்ள அனைவரையும் கொன்று தட்சனையும் கொன்று திரும்புமாறு கட்டளையிட் டார். அதன்படியே வீரபத்திரரும் தட்சனின் யாகசாலையை அடைந்து, அங்கு தன்னை எதிர்த்த அனைவரையும் தண்டித் தார். தட்சனின் தலையையும் துண்டித்துத் திரும்பினார்.

வீரபத்திர உருவமும் தட்ச வதமும்

தன் உயிரில் சரிபாதியாக, தன் சக்தியாக திகழும் தாட்சாயணி அக்னியில் பாய்ந்து உயிரை மாய்த்துக் கொண்ட செய்தியறிந்து கோபம் கொண்டு சிவதாண்டவம் புரிந்தார் ஈசன். தன் சடாமுடியில் இருந்து தன் அம்ச மாக திகழும் வீரபத்திரை தோற்றுவித்தார். தட்சனின் யாகசாலைக்கு சென்று, அங் குள்ள அனைவரையும் கொன்று தட்சனை யும் கொன்று திரும்புமாறு கட்டளை யிட்டார். அதன்படியே வீரபத்திர ரும் தட்சனின் யாகசாலையை அடைந்து, அங்கு தன்னை எதிர்த்த அனைவரையும் தண் டித்தார். தட்சனின் தலையை யும் துண்டித்து திரும்பினார்.

தட்சன் பெற்ற அருட்கடாட்சம்

தன் தவறுகளை உணர்ந்து கொண்டவ னாய் சிவபெருமானிடம் மன்னிப்பினை வேண்டி அவர் திருவருளைப் பெற்றுக் கொண்டான் தட்சன். ஆம், சிவபெருமானின் கருணையாலும், அருட்கடாட்சத்தாலும் தட் சன் ஆட்டின் தலையைப் பெற்று உயிர் கொண்டு எழுந்தான். இது வரலாறு. தவிர புராணம் கூறும் பக்தியின் சால்புடைய கதையாடல்.

அருந்துங்கள் விருந்து

சைவம் - அசைவம்
தினமும்
இரவு போசனம்
மதி மறவா இல்லற உணவு சுவை
தினமும்
இன்சுவை ஒடியல் கூல்

(c5579)(8)

விருந்து @ யாழ்பாடி
49 - 51 அம்மன் வீதி நல்லூர், 021 222 6868,
யாழ்ப்பாணம். 075 9875 800, 0777 360 353

சிவமயம்

"தொண்டர் நாள்தோறும் துதியே வருள் செய் கேதீச்சரமதுதானே"

அருள்மிகு
கௌரி இணை
திருக்கேதீச்சரநாதர்
திருக்கோயில்

திருஞான
சம்பந்தர் -
சுந்தரர் மடம்

திருக்கேதீச்சர திருத்தலத்தில் புனருத்தாரணம் செய்யப்பட்ட திருஞானசம்பந்தர் - சுந்தரர் மடமானது தைப்பூச தினமான நிகழும் ஏவிளம்பி வருட தைத்திங்கள் 18 ஆம் நாள் (31.01.2018) புதன்கிழமை பூச நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய காலை 9.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது. சும் பெருமான் அடியார்கள் எல்லோரையும் இப் புண்ணிய நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

புலவர் அ. திருநாவுக்கரசு
திரு.செ. இராகவன்
இணைச் செயலாளர்கள் திருக்கேதீச்சர ஆலய திருப்பணிச்சபை.

(c31785)(8)

தொ.பே : 023 2050 800, 023 323 0034

மரண அறிவித்தல்

மண்ணில்
27
08
1945

விண்ணில்
15
01
2018

திருமதி திரிபுரசுந்தரி செந்தில்நாதன்

காரைநகர் அறுகம்புலத்தை பிறப்பிடமாகவும் லண்டனில் வசித்தவருமான **திருமதி திரிபுரசுந்தரி செந்தில்நாதன்** 15.01.2018 அன்று லண்டனில் காலமானார். இவர் காலஞ்சென்ற யாழ்ற்றன் நடராசா, தங்கோடை பாலாமணியின் சிரேஷ்ட புத்திரியும் செந்தில்நாதனின் அன்பு மனைவியும் சகுந்தலாவின் அன்புத் தாயாரும், மனோக்குமாரின் அன்பு மாமியும், துஷி மற்றும் துலக்ஷியின் அன்புப் பேத்தியுமாவார். அன்னாரின் பூதவுடல் இல 35, Kenton Park Parade, Kenton Road, Harrow, Ha3 8DN இல் அமைந்துள்ள Sanjay Lodhia, Funeral Director இல் 20.01.2018 சனி அன்று காலை 08 மணியிலிருந்து காலை 10 மணிவரை பார்வைக்காக வைக்கப்பட்டு தகனக்கிரியைகள் Harow Road, White City, London W10 4RA இல் அமைந்துள்ள Kensal Green Cemetry இல் 22.01.2018 திங்கட்கிழமை காலை 09 மணியிலிருந்து காலை 10.30 வரை நடைபெறுமென்பதை தெரிவித்துக் கொள்கிறோம். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
தாய் : பாலாமணி நடராசா

6/1, Frakfort Place,
Colombo - 04.

தினகரன்

தொடர்புகளுக்கு
021 493 1111,
advt@uthayan.com

பத்தொன்பதாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு
08
10
1925

இறப்பு
19
01
1999

ஸ்ரீமான் செல்லப்பா கனகசபை

[ஸ்தாபகர் - கணேசன் ஸ்ரோர்ஸ், சிவகணேசன் ஸ்ரோர்ஸ்]

திதி : பூர்வபக்கதுதியை 19.01.2018

அன்புக்கு இலக்கணமாய் அவனியில் வாழ்ந்து
பண்புடைமையுடன் பக்தி வழி நடந்தீர்கள்
இரக்கத்தின் இருப்பிடமாய் ஈகை பலசெய்து
எல்லோருக்கும் நல்லவராய் நாணயமாய் நடந்தீர்கள்

ஆண்டுகள் பதினொன்பது
நகர்ந்து மறைந்திடினும்
ஆறுமோ வெந்துயர் அன்பு அப்பாவே!
மாண்டு விடவில்லை

நீங்கள் எம் மனங்களில்
மறையாது என்றும் வாழ்கின்றீர்கள் - எம்
உயர்வுக்கு உன்னத வழிகாட்டி வாழ்வை
அர்ப்பணித்த பாசத்தின் தீபமே!

உங்கள் நினைவு எங்கள்
நெஞ்சங்களில் என்றும் நிலைத்து வாழும்.

அன்னாரின் நினைவாக இன்று (19.01.2018) வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் துர்க்காமணி மண்டபத்தில் அன்னதானம் நடைபெறும்.

115, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

உங்கள் பிரிவால் துயருறும்.
பிள்ளைகள்.

(CS 13043/15)

மரண அறிவித்தல்கள்

திருமதி பரமேஸ்வரி செல்வரத்தினம்

இணுவில்கிழக்கைப்பிறப்பிடமாகவும்வசிப்பிடமாகவும்கொண்ட திருமதி பரமேஸ்வரி செல்வரத்தினம் 16.01.2018 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை - சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சரவண முத்து சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற செல்வரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும், சிவபாலன் (ஜோமனி), குலசேகரம் (கனடா), காலஞ்சென்ற சுகந்தினி மற்றும் உதய குமாரன் (முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் வலி. தெற்கு, சுன்னாகம்) ஆகியோரின் அன்புத்தாயும், ஞான அருட்கரசி (ஜோமனி), தானியா (கனடா), சுகந்தினி (ஆசிரியர், யாழ். உடுவில் மான்ஸ் த.க.பாடசாலை) ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்ற வர்களான சங்கரலிங்கம், கனகரத்தினம், சிவராசா, கைலாயநாதன் ஆகியோரின் சகோதரியும், காலஞ் சென்ற ஆயிலியத்தின் மைத்துனி யும், பாலமயூரன், ராம்கி, வேனியா, அபிரா, அன்ரா, விக்ரோரியா, சம்பத்மேனன் ஆகியோரின் பேர்த்தி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.01.2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவசக்தி இல்லம்
இணுவில் கிழக்கு, இணுவில்.

தகவல்:
செ.உதயகுமாரன் (மகன்)
077 046 0150

(aja 13023) (13)

திருமதி திரேசா செபஸ்ரியன் (பூமணி)

மண்ணில்
28.10.1936

விண்ணில்
18.01.2018

(ஓய்வு பெற்ற தாதி - Green Memorial hospital manipay)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திரேசா செபஸ்ரியன் (18.01.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சூசைப்பிள்ளை செபஸ்ரி யனின் அன்புமனைவியும் ஜேம்ஸ் மில்பேட்டின் அருமைத்தாயும் டன்சிக்கா எழிலியின் (யா/ வேம்படி மகளிர் உயர்தரப்பாடசாலை) அருமைமாமியும் அன்ரன் இலங்கைநாயகி, இலங்கைநாயகம், மோகன், நேசன், இராசகுமாரி, வசந்தகுமாரி, வதனி, றாயு ஆகியோரின் சிறியதாயும் பிரியாந்தி டெலிசியா, கபிஸ்ரன், வினோத், ஜெறி, ஜெனா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை நாளை (20.01.2018) சனிக்கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின் மானிப்பாய் புனித அன்னாள் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் ஆனைக்கோட்டை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கெலக்லேன் மானிப்பாய்.
077 201 8711

(8)

தகவல்:
ஜேம்ஸ் (மகன்)

கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



இறால்	600	900	900	1000
நண்டு	500	500	500	400
கணவாய்	700	900	800	1000
பாரை	600	600	600	700
சுறா	500	700	800	–
சீலா	400	400	500	400
விளை	400	400	500	600
முரல்	300	400	400	400
கும்பிளா	300	350	400	–
கிளாக்கன்	800	–	500	–
ஒரா	300	300	500	–
திரளி	200	200	200	200
நகரை	200	200	400	–
சூடை	100	180	160	200
ஒட்டி	150	200	300	300
திருக்கை	250	200	400	300
மதனம்	200	250	250	–
கொய்	150	100	50	100
பாலை	200	200	400	400
வாளை	180	200	300	–

மரக்கறிகளின் நேற்றைய விலை நிலவரம்

மரக்கறிகள்	சாவகச்சேரி	சுன்னாகம்	மந்துவாமடம்	நெல்லியடி	திருநெல்வேலி
முள்ளங்கி	100	100	60	120	40
கத்தரி	100	150	80	100	80
மரவள்ளி	60	50	35	40	40
பயிற்றை	120	150	120	100	120
பாகல்	180	240	220	180	160
க.கிழங்கு	60	60	50	80	40
பெ.வெங்காயம்	120	140	140	150	140
சி.வெங்காயம்	350	350	260	260	240
பூசணி	40	60	50	60	60
தக்காளி	60	150	40	60	60
வாழைக்காய்	80	70	70	60	60
கீரை	20	40	30	10	30
பொன்னாங்காணி	50	40	40	40	30
ப.மிளகாய்	100	200	120	100	140
புடோல்	60	70	80	80	60
கோவா	70	100	40	60	40
வெண்டி	100	100	120	100	80
போஞ்சி	120	180	160	160	140
லீக்ஸ்	220	200	220	180	180
தேங்காய்	75	80	100	100	70
உ.கிழங்கு	80	60	60	70	60
தேசிக்காய்	50	40	50	40	50
வல்லாரை	20	20	60	20	20
கறிமிளகாய்	150	250	220	180	180
கரட்	100	150	120	100	140
முருங்கைக்காய்	800	–	–	–	–

லசந்த...

கொழும்பு, ஜன. 19

சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்படுவதற்கு முதல் நாள் அவரது அலுவலகத்தை மருதானை திரிப்போலி இராணுவ புலனாய்வு முகாமைச் சேர்ந்த இராணுவ புலனாய்வா ளர்கள் சிலர் வட்டமிட்டமை நாம் இதுவரை முன்னெடுத்துள்ள விசாரணை களில் உறுதியாகியுள்ளது என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு நீதிமன்றுக்கு நேற்று அறிவித்தது.

இந்தக் கொலை இடம்பெற்ற காலப்பகுதியில் அது தொடர்பில் விசாரணை செய்த கல்கிசை பொலிஸாரும் அதன் பின்னர் விசாரித்த பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினரும் (ரி.ஐ.டி.) கொலையாளிகளைக் கண்டுபிடிக்க விசாரணைகளைச் செய்யாது சாட்சியங்களை அழிக்கவே விசாரணைகளை முன்னெடுத்துள்ளமை தற்போதைய விசாரணைகள் ஊடாக வெளிப்படுத்தப்பட்டது என்று நீதிவானுக்கு சமர்ப்பிக்கப்பட்ட சிறப்பு மேலதிக விசாரணை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

லசந்த விக்கிரமதுங்க படுகொலை விவகாரம் தொடர்பிலான வழக்கு விசாரணைகள் நேற்றுக் காலை, கல்கிசை நீதிவான் மொஹம்மட் மிஹால் தலைமையில் நடைபெற்றது. நீதிமன்றில் மேலதிக விசாரணை அறிக்கையை முன்வைத்த பொலிஸ் பரிசோதகர் சுதத் குமார நீதிமன்றில் கருத்துக்களை முன்வைத்தார்.

"தற்போது வரை 950 வாக்கு மூலங்களை நாம் பதிவு செய்துள்ளோம். அதில் 295 பேர் இராணுவ புலனாய்வாளர்களாவர். இவர்களின் கையெழுத்து மற்றும் கைவிரல் ரேகைகளும் பெறப்பட்டுள்ளன. குறிப்பாக லசந்தவின் காரில் இருந்த சந்தேகிக்கத்தக்க கைவிரல் ரேகை அடையாளத்துடன் இவர்களின் கை ரேகையும், லசந்தவை வைத்தியசாலைக்கு அழைத்துச் சென்ற நபர்களின் கைரேகைகளையும் நாம் ஒப்பீடு செய்தோம். அவை ஒத்துப் போகவில்லை. லசந்த விக்ரமதுங்கவின் காரை அன்று பின் தொடர்ந்த தொலைபேசி இலக்கம் ஒன்றை மையப்படுத்தியே விசாரணைகள் செல்கின்றன. அந்த இலக்கமானது மருதானை திரிப் பொலி புலனாய்வு முகாமுக்குரிய இலக்கமாகும். இந்த விவகாரத்தில் ஆரம்பத்தில் விசாரணைகளை முன்னெடுத்த பயங்கரவாத புலனாய்வுப் பிரிவினர் 17 இராணுவ புலனாய்வாளர்களைக் கைது செய்திருந்தனர். பின்னர் அவர்களை விடுதலையும் செய்தனர். அவர்கள் எதற்காக கைது செய்யப்பட்டனர், ஏன் விடுவிக்கப்பட்டனர், அவர்களுக்கும் இக்கொலைக்கும் இடையிலான தொடர்பு என்ன என்பது குறித்து தற்போது தீவிர விசாரணை இடம்பெறுகின்றது.

லசந்த கொலை செய்யப்பட்ட தினம், முதலில் தனது மனைவி சொனாலியைப் பார்க்கச் சென்றுள்ளார். அங்கிருந்து மீள அலுவலகம் வரும் போதே கொலை செய்யப்பட்டுள்ளார். அந்த பாதைகளின் இரு மருங்கிலும் அப்போது இருந்த மறைகாணி (சி.சி.ரி.வி) பதிவுகளைப் பெற்றும் விசாரணை நடக்கின்றன. அந்தப் பதிவுகள் முதலில் மொறட்டுவ பல்கலைக்கு அனுப்பட்ட போதும், பதிவுகளை மீளப் பெற முடியாது என்று அறிவித்துள்ளனர். அந்த கமராக்களை ஆய்வு செய்யும் பொறுப்பு தற்போது 'சேர்ட்' நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன் அறிக்கை இன்னும் கிடைக்கவில்லை.

லசந்த விக்கிரமதுங்கவின் கொலை இடம்பெற்ற போது, அங்கிருந்த அவரது காருக்குள் இருந்து அவரது குறிப்புப் புத்தகம் உள்ளிட்டவையை கல்கிசை பொலிஸ் நிலையத்தின் அப்போதைய உப பொலிஸ் பரிசோதகர் வீரசிங்க வழக்குப் பொருளாகவே எடுத்துள்ளமையும், பின்னர் பொலிஸ் புத்தகத்தில் அவர் இட்ட பதிவுகள் கிழிக்கப்பட்டு புதிய பதிவுடன் கூடிய பக்கம் ஒட்டப்பட்டுள்ளமையும் விசாரணையில் தெரிய வந்தது. அந்த ஒட்டப்பட்ட பக்கம் போலி ஆவணம் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அது தொடர்பிலான விசாரணைகள் வேறாக முன்னெடுக்கப் பட்டுள்ளன.

லசந்தவை தானே கொலை செய்ததாக கூறி கடிதம் எழுதிவிட்டு முன்னாள் புலனாய்வு துறை உறுப்பினர் ஜயமான்ன என்பவர் தற்கொலை செய்திருந்தார். அக்கடிதம் அவரால் எழுதப்பட்டதா என விசாரித்ததில் அது அவர் கையெழுத்து என்பது உறுதியானது. ஆனால் அவர் லசந்த கொலையுண்ட திகதியில் கொழும்பிலேயே இருக்கவில்லை என்பது அவரது அலைபேசி, வேறு அறிவியல் சான்றுகள் ஊடாக உறுதியாகியுள்ளது. அச்சமயம் அவர் கேகாலையில் இருந்துள்ளார்.

லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்ட பின்னர் முதலில் உடற்கூற்றுப் பரிசோதனை செய்த மருத்துவர் சுனில் உடன் இணைந்து அதனைச் செய்த உதவி மருத்துவர்கள் யார் என்பதை கண்டறிய விசாரணைகள் இடம்பெற்றன. அது தொடர்பில் 6 வாக்குமூலங்கள் பெறப்பட்ட நிலையில் உதவி மருத்துவர்களின் விவரம் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவர்களை விசாரணை செய்த பின்னர் பிரதான மருத்துவரான சுனில் குமாரவிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படும்.

இதனைவிட கல்கிசை பொலிஸாரும் பயங்கரவாத புலனாய்வுப்பிரிவினரும் லசந்த கொலையாளிகளைக் கண்டறிய விசாரணைகளைச் செய்யாது சாட்சிகளை அழிக்கும் நடவடிக்கைகளிலேயே ஈடுபட்டுள்ளமை இதுவரையான விசாரணை ஊடாக தெரியவந்தது - என்றார்.

இதனையடுத்து பாதிக்கப்பட்ட தரப்பு சார்பில் மன்றில் முன்னிலையாகும் மூத்த சட்டத்தரணி அத்துல எஸ்.ரணகல, சாட்சிகளை அழிக்க முன்னாள் பொலிஸ் மா அதிபர் ஒருவர் முன்னின்று செயற்பட்டுள்ளார் என்றும், தற்போதைய பொலிஸ் மா அதிபரும் இந்த விசாரணைகளில் கரிசனையற்றிருப்பதாகவும் கூறினார்.

மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக வழக்கு எதிர்வரும் மார்ச் 15வரை ஒத்திவைக்கப்பட்டது. (ற-5,71)

சோதனையை...

வாள்வெட்டுச் சம்பவங்கள் நடந்ததை அடுத்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப் பட்டது.

சில மாதங்களுக்கு முன்னர் வாள்வெட்டுச் சம்பவங்கள் நடந்ததை அடுத்து பொலிஸாரின் வீதிச் சோதனைகள் இறுக்கப்பட்டிருந்தன. சந்தேகத்தின் பேரில் பலர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப் பட்டனர். பொலிஸாரின் தீவிர நடவடிக்கைகளை அடுத்து வாள்வெட்டுச் சம்பவங்கள் குறைந்திருந்தன.

சில தினங்களுக்கு முன்னர் ஆனைக்கோட்டையில் நடந்த வாள்வெட்டில் இருவர் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவத்தை அடுத்து பொலிஸாரின் வீதிச் சோதனைகளை மீளவும் இறுக்கமாக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-8)

காரில்...

இது தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எதிரிசிங்க தெரிவித்தார்.

துரிதமாகச் செயற்பட்ட பொலிஸார் இந்தக் கொள்ளையுடன் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகத்தில் இருவரை நேற்று மாலை கைது செய்துள்ளனர். (ற-5)

ஒளிப்படங்களால்...

யத் தேடப்பட்ட ஒருவர் வெலிகட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இராஜகிரிய, கொல்வத்தையில் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

சந்தேகநபரின் அலைபேசி, படங்களைப் பதிவேற்றிய சமூக வலைத்தளக் கணக்கு, முகப்புத்தகக் கணக்கு என்பன பொலிஸாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-5,71)

யாழ்...

கடந்த வாரம் இந்த வருடங்களைச் சேர்ந்த மாணவர்கள் கைகலப்பில் ஈடுபட்டனர். அதில் 5 மாணவர்கள் படுகாயமடைந்தனர். மோதலை அடுத்து அந்த இரண்டு வருடங்களையும் சேர்ந்த மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகள் மறுஅறிவித்தல்வரை இடைநிறுத்தப்பட்டன.

இந்த வார ஆரம்பத்தில் குறித்த இரண்டு வருடங்களையும் சேர்ந்த மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை மீள ஆரம்பிக்கக் கோரி முதலாம் இரண்டாம் வருடங்களின் மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர் என்று கூறப்பட்டது. நேற்று 3ஆம் 4ஆம் வருடங்களின் மாணவர்களுக்குக் கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தநிலையில் அவர்கள் நேற்றும் கைகலப்பில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. தடிகளைக் கொண்டு கைகலப்பில் ஈடுபட்டனர் என்றும் சிலர் காயமடைந்தனர் என்றும் கூறப்படுகிறது. அவர்கள் கைகலப்பில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது சிறப்பு அதிரடிப்படையினர் அங்கு சென்றுள்ளனர். பின்னர் பொலிஸாரும் குவிந்தனர்.

மாணவர்களின் கைகலப்பால் பொலிஸார் அங்கு நீண்டநேரம் கடமையில் இருக்க வேண்டியிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது. பரமேஸ்வராச் சந்தியை அண்மித்த இடங்களில் கைகலப்புக்கள் நடந்துள்ளன.

அதேவேளை, இந்த வார ஆரம்பத்தில் முதலாம் இரண்டாம் வருடங்களின் மாணவர்களும் கைகலப்பில் ஈடுபட்டனர். (ற-4)

மொனாக்கோ – நீஸ் ஆட்டம் சமநிலையில்

பிரெஞ்சுக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான தொடரில், நேற்று இடம் பெற்ற மொனாக்கோ, நீஸ் அணிகளுக்கிடையிலான ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் தலா இரண்டு கோல்களைப் பெற்றிருந்த நிலையிலேயே ஆட்டம் சம நிலையில் முடிவடைந்தது.

நீஸ் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் மரியோ பலோட்டலி பெற்றிருந்ததோடு, மொனாக்கோ சார்பாக றடமெல் பல்காவோ, மூக்தார் ஜக்கபி ஆகியோர் பெற்றனர். (ம)

நியூசிலாந்து அறிவிப்பு



பாகிஸ்தானுக்கு எதிரான ரி-20 தொடருக்கான நியூசிலாந்து அணி நேற்று அறிவிக்கப்பட்டது.

இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான மூன்ற ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் ஜனவரி 22, ஜனவரி 25, ஜனவரி 28 ஆகிய திகதிகளில் இடம்பெறவுள்ளன. இந்தத் தொடருக்கான நியூசிலாந்து அணியே அவ்வாறு அறிவிக்கப்பட்டது.

நியூசிலாந்து அணி விவரம்- கேன் வில்லியம்சன் (அணித்தலைவர்), போல்ட், டொம் ப்ரூஸ், கொலின் டி கிரான்ட்ஹொம், லொக்கி பெர்கியூசன், கப்ரில், கிட்ச்சின், கொலின் முன்றோ, கிளென் பிலிப்ஸ், செத் றான்ஸ், சான்நெர், சௌதி, சொடகி, ரெய்லர், லீவர். (ம)

விக்ரோறியன்ஸ் மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், ஜன. 19

சங்கானை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான எல்லே தொடரில் ஆண்கள் பிரிவில் விக்ரோறியன்ஸ் அணி கிண்ணம் வென்றது.

அராலி மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் விக்ரோறியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழக அணி மோதியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய வட்டுக்கோட்டை விளையாட்டுக் கழக அணி 40 பந்துகளில் 3 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய விக்ரோறியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 22 பந்துகளில் வெற்றியிலக்கை அடைந்தது. (ம-23)

சாதிக்குமா இலங்கை?

முத்தரப்புத் தொடரில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் இலங்கை - பங்களாதேஷ் அணிகள் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

இலங்கை - சிம்பாப்வே - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான முத்தரப்புத் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. தொடரில் இரண்டு ஆட்டகள் முடிவடைந்துள்ளன. சிம்பாப்வேயும் பங்களாதேஷும் மோதிய முதலாவது ஆட்டத்தில் பங்களாதேஷ் வெற்றிபெற்றது. இலங்கையும் சிம்பாப்வேயும் மோதிய இரண்டாவது ஆட்டத்தில் சிம்பாப்வே வெற்றிபெற்றது.

தொடரில் ஒவ்வொரு அணிகளுக்கும் தலா 4 வாய்ப்புக்கள் உள்ளன. இன்றும் இலங்கை தோல்வியடைந்தால் அந்த அணி இறுதியாட்டத்துக்குச் செல்வதற்கான வாய்ப்புக்கள் மிகையாகக் குறைவடையும். இதனால் வாழ்வா சாவா நிலையிலேயே இன்றைய ஆட்டத்தில் இலங்கை களமிறங்குகிறது. (ம)

விடைபெற்றார் றொனால்டினோ

கால்பந்தாட்ட அணியின் முன்னாள் மத்தியகள வீரரான ரொனால்டினோ கால்பந்தாட்ட அரங்கிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

பிரேஸில் தேசிய கால்பந்தாட்ட அணியின் முன்னாள் மத்தியகள வீரரான ரொனால்டினோ கால்பந்தாட்ட அரங்கிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

எவ்வாறெனினும், 2015ஆம் ஆண்டுக்குப் பின்னர் எந்தவொரு ஆட்டத்திலும் ரொனால்டினோ விளையாடியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 37 வயதான ரொனால்டினோ 2002ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்ற பிரேஸில் அணியில் இடம்பெற்றிருந்ததுடன், 2005ஆம் ஆண்டு சிறந்த கால்பந்தாட்ட வீரருக்கான விருதை வென்றிருந்தார்.

இது தவிர, ஸ்பானிய லாலிகா கழகமான பார்சிலோனாவுக்காக விளையாடியபோது 2006ஆம் ஆண்டு சம்பியன்ஸ் லீக்கையும் வென்றிருந்ததார். (ம)

ஆப்கானிஸ்தானின் டெஸ்ட் அறிமுகம் எதிர்வரும் ஜூனில்

டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடுவதற்கு அங்கீகாரம் பெற்றுள்ள ஆப்கானிஸ்தான் அணி, எதிர்வரும் ஜூன் மாதம் இந்தியாவுக்கு எதிராக தனது அறிமுக ஆட்டத்தை மேற்கொள்ளவுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட ஆட்டங்களில் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தியதை அடுத்து, ஆப்கானிஸ்தான் மற்றும் அயர்லாந்து அணிகளுக்கு டெஸ்ட் அங்கீகாரம் கொடுத்தது பன்னாட்டு கிரிக்கெட் சபை. தனது முதலாவது டெஸ்ட் ஆட்டம் இந்தியாவுக்கு எதிராக அமைய வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தது ஆப்கானிஸ்தான். இதற்கு இந்தியாவும் உடன்பட்டது. இதையடுத்து எதிர்வரும் ஜூன் மாதம் இந்தியாவுக்கு எதிராக தனது முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில் களமிறங்கவுள்ளது ஆப்கானிஸ்தான். (ம)

வென்றார் ஸ்வெட்டலினா

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில், பெண்கள் ஒற்றையர் பிரிவில் இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றார் உக்ரைன் வீராங்கனை ஸ்வெட்டலினா. ஸ்வெட்டலினாவைஎதிர்த்து செக்குடியரசின் வீராங்கனை கேத்ரினா மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முறையே 4:6, 6:2, 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றார் ஸ்வெட்டலினா. (ம)

நியூசி. – பாக். இறுதி இன்று

நியூசிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் ஐந்தாவதும் இறுதியானதுமான ஆட்டம் இன்று இடம்பெறவுள்ளது. முடிவடைந்த முதல் நான்கு ஆட்டங்களிலும் வெற்றிபெற்று கிண்ணத்தைக் கைப்பற்றுவதை உறுதிப்படுத்தியுள்ளது நியூசிலாந்து அணி. இதனால் இன்றைய ஆட்டம் தொடரைத் தீர்மானிக்கும் ஒன்றாக அமையப்போவதில்லை. எனினும், படுதோல்வி என்றில்லாமல் குறைந்த பட்சம் ஒரு வெற்றியையேனும் பதிவுசெய்ய பாகிஸ்தான் முனைப்புக் காட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ம)

பன்னாட்டு கிரிக்கெட் சபையின்

சிறந்த வீரராக விராட் கோக்லி

பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் கடந்த வருடத்துக்கான சிறந்த வீரராக இந்திய அணியின் தலைவர் கோக்லி தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.
தனது வருடாந்த விருதுகளுக்கான வீரர்களை நேற்று அறிவித்தது பன்னாட்டுக் கிரிக்கெட் சபை. இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் கோக்லி, சிறந்த ஒருநாள் கிரிக்கெட் வீரர் மற்றும் சிறந்த கிரிக்கெட் வீரர் ஆகிய இரண்டு விருதுகளை பெற்றுள்ளார்.
ரி-20 ஆட்டங்களில் சிறப்பாகச் செயற்பட்ட இந்திய வீரர் யுஸ்வேந்திர சாகலுக்கு, சிறந்த ரி-20 வீரருக்கான விருது வழங்கப்பட்டது. சிறந்த டெஸ்ட் கிரிக்கெட் வீரராக ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் தலைவர் சிமித் தெரிவுசெய்யப்பட்டார்.
பன்னாட்டு கிரிக்கெட் சபையின் கனவு அணியும் அறிவிக்கப்பட்டது. இதன் தலைவராகவும் கோக்லி நியமிக்கப்பட்டார். பன்னாட்டு கிரிக்கெட் சபையின் கனவு அணி - கோக்லி (தலைவர்), வோர்ணர் (ஆஸ்திரேலியா), ரோகித் சர்மா (இந்தியா), அசாம் (பாகிஸ்தான்), டி வில்லியர்ஸ் (தென்னாபிரிக்கா), குயின்டன் டி ஹொக் (தென்னாபிரிக்கா), பென் ஸ்ரோக்ஸ் (இங்கிலாந்து), போல்ட் (நியூசிலாந்து), ஹசன் அலி (பாகிஸ்தான்), ரசிட் கான் (ஆப்கானிஸ்தான்), பும்ரா (இந்தியா). (ம)

வோஸ்னியாக்கி 3ஆவது சுற்றில்

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் மூன்றாவது சுற்றுக்குத் தகுதி பெற்றார் டென்மார்க் வீராங்கனை கரோலின் வோஸ்னியாக்கி. வோஸ்னியாக்கியை எதிர்த்து குரோசியாவின் ஜானா பெட் மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 3:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இழந்தார் வோஸ்னியாக்கி. அவர் சரிவில் இருந்து மீண்டு அடுத்த இரண்டு செற்களையும் முறையே 6:2, 7:5 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று 2:1 என்ற அடிப்படையில் மூன்றாவது சுற்றுக்குத் தகுதி பெற்றார். (ம)

இரண்டாவது சுற்றில் நட்சத்திர வீரர் நடால்

பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளவரான நடாலை எதிர்த்து 52ஆம் நிலை வீரர் லினார்டோ மேயர் மோதினார்.

நடைபெற்றுவரும் ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில், ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றார் ஸ்பெய்ன் வீரர் ரபேல் நடால்.
பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ளவரான நடாலை எதிர்த்து 52ஆம் நிலை வீரர் லினார்டோ மேயர் மோதினார். ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் மூன்று செற்களையும் முறையே 6:3, 6:4, 7:6 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:0 என்று நேர் கணக்கில் வெற்றிபெற்றார் ரபேல் நடால். இந்த ஆட்டம் 2 மணித்தியாலம் 38 நிமிடங்கள் நீடித்தது. (ம)

பென் ஸ்ரோக்ஸுக்கு கிடைத்தது அனுமதி

இங்கிலாந்து அணியின் சகல துறை வீரரான பென் ஸ்ரோக்ஸ், இரவு விடுதியில் நபரொருவருடன் மோதல் போக்கில் ஈடுபட்டு, அவர் மீது தொடர்ந்து விசாரணைகள் இடம்பெற்றுவரும் நிலையில் இங்கிலாந்து அணியில் தொடர்ந்து விளையாட ஸ்ரோக்க்கு உத்தியோகபூர்வமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
ஆஷஸ் தொடருக்கு முன்னதாக இந்த விவகாரம் பூதாகரமாக வெடித்தது. இதனால் ஸ்ரோக்ஸ் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு ஆஷஸ் தொடரில் இருந்து அவர் நீக்கப்பட்டார். அவர் மீதான விசாரணைகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன. இங்கிலாந்து - நியூசிலாந்து அணிகளுக்கு இடையில் இன்னும் சில தினங்களில் ரி-20 தொடர் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரில் ஸ்ரோக்ஸ் களமிறங்குவது தொடர்பில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டது. (ம)

விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
இல 63,சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

2018 விசேட வினாத்தாள் வகுப்பு

தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம்(I.C.T)

ஆரம்பம் : 20.01.2018 சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு

அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்

ஆசிரியர் : S.Maurathasan
BSc (Hons) in Computing & IS, MIT,SCJP,PGDE
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

தொடர்பு : 0772487774

வேலைவாய்ப்பு

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல்யமான நிறுவனமொன்றில் பின் வரும் பணியாளர்கள் தேவை.

1. கணினி தட்டெழுத்தாளர்
2. பக்க வடிவமைப்பாளர்

இன்றும் (19.01.2018) நாளையும் (20.01.2018) காலை 10.00 மணி தொடக்கம் மாலை 5.00 மணிவரை சுயவிவரக் கோவையுடன் நேரில் வரவும்.

107, இராசவீதி, கோப்பாய்.

(கோப்பாய் பொலிஸ் நிலையத்திலிருந்து வடக்குநோக்கி 300m தூரம் அளவில்)

(IN 5522/15)

பிரத்தியேக போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்

திறந்த பல்கலைக்கழக
சட்டமானி நுழைவு
சனி, ஞாயிறு
1.00 → 4.30

திட்டமிடல் சேவை
பிரதி ஞாயிறு
9.30 → 2.00

வங்கிசார் பரீட்சைகள்
சனி, ஞாயிறு
2.00 → 4.30

பிரத்தியேக பொது உளச்சார்பு
சனி, ஞாயிறு
3.00 → 4.30

சகல போட்டிப் பரீட்சைகளுக்குமுரிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

தொடர்புகளுக்கு
076 688 3394
D.M.I
வெலிங்டன் சந்தி.

(CS 13022/15)

அறிவித்தல்

எமது பாடசாலை எதிர்வரும் 16.06.2018 இல் நூற்றாண்டு விழாவினை காணவுள்ள நிலையில் பாடசாலையின் நிறுவுநர் மாரிமுத்து கனகசபாபதி அவர்களின் உருவச் சிலையினை பாடசாலையில் அமைப்பதற்கு அவரது பேரன் கணபதிப்பிள்ளை மகாதேவா அவர்கள் முன்வந்துள்ளார். இச்சிலை அமைத்தல் தொடர்பாக ஏதாவது கருத்துக்கள், ஆலோசனைகள் இருப்பின் அதுபற்றி இவ் அறிவித்தல் பிரசுரித்த திகதியில் இருந்து பதினான்கு நாள்களுக்குள் அதிபரிடம் எழுத்துமூலமாக தெரிவிக்க முடியும் என்பதை அறியத்தருகின்றோம்.

தலைவர்/ அதிபர்
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
பழைய மாணவர் சங்கம்,
யா/சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம்.

(CS 13022/15)

வேலைவாய்ப்பு

கிளிநொச்சி
உதயன் பணிமனைக்கு
பின்வரும் பணியாளர்கள் தேவை.

1. முகாமையாளர்
2. முகாமைத்துவ உதவியாளர்கள்
3. பண வசூலிப்பாளர்கள்
4. பத்திரிகை விநியோகஸ்தர்கள்

(தங்கி நின்று கடமை புரியக் கூடியவர்கள் விரும்பத்தக்கது)

கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள்
எதிர்வரும் 21.01.2018 ஞாயிற்றுக்கிழமை 9.00 - 12.00 மணிவரை
உங்கள் சுயவிவரக் கோவையுடன் நேரில் சமுகம் தரவும்.

உதயன் பணிமனை
A9 வீதி, கரடிபோக்கு சந்தி, கிளிநொச்சி.

துடுப்பாட்டத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி தோல்விக்கு மிகமுக்கிய காரணம்

கோக்லியின் பார்வையில்



தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில், இந்திய அணி தோல்வியடைந்தமைக்கு துடுப்பாட்டத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியே காரணம் என்று தெரிவித்தார் இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லி.

நேற்றுமுன்தினம் இந்த ஆட்டம் முடிவுக்கு வந்தது. ஆட்டத்தின் பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே கோக்லி இவ்வாறு தெரிவித்தார்.

"நாங்கள் சிறந்த இணைப்பாட்டத்தை உருவாக்கி முன்னிலை பெறத் தவறிவிட்டோம். எங்களுடைய துடுப்பாட்ட வீரர்களின் மோசமான ஆட்டத்தால் நாங்கள் சரிவைச் சந்தித்தோம். பந்துவீச்சாளர்கள் சிறப்பான பந்து வீச்சை வெளிப்படுத்தினார்கள். ஆனால், துடுப்பாட்ட வீரர்கள் அணியை பள்ளத்தில் தள்ளிவிட்டனர். நாங்கள் கடுமையாக முயற்சி செய்தோம். அந்த முயற்சி போதுமான அளவுக்கு இல்லை. குறிப்பாக களத்தடுப்பிலும் தடுமாறினோம்.

ஆடுகளம் மிகவும் தட்டையானது என நினைத்தோம். விளையாடும்போது முற்றிலும் ஆச்சரியமாக இருந்தது. நாண்யச் சுழற்சிக்கு முன்பு ஆடுகளம் எப்படி இருந்ததோ, அதிலிருந்த முற்றிலும் மாறுபட்டு காணப்படுகிறது என்று சக வீரர்களிடம் கூறினேன். நான் எல்லா வகையான திட்டங்களையும் ஆடுகளத்தில் செயற்படுத்த விரும்பினேன். அந்த வகையில்தான் விளையாடினேன். ஓர் அணியாக மீண்டெழுந்து அடுத்த ஆட்டத்திலாவது வெற்றிபெற வேண்டும்" என்று கோக்லி மேலும் தெரிவித்தார்.

(ம)

ஆஸ்திரேலிய தொடர் முகுருசா படு தோல்வி

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் அதிர்ச்சித் தோல்வியடைந்து வெளியேறினார் முன்னணி வீராங்கனை முருகுசா.

நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முகுருசாவை எதிர்த்து சீன வீராங்கனை சுபி மோதினார். மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் 6:7, 1:6 என்ற அடிப்படையில் இழந்து படுதோல்வியடைந்து வெளியேறினார் முகுருசா. முகுருசா வெளியேறியதை அடுத்து கிண்ணத்தைக் கைப்பற்றி கேலப் மற்றும் செரபோவா ஆகியோருக்கு இருந்த வாய்ப்பு மேலும் அதிகரித்துள்ளது. (ம)

Techno World
(வெலிங்டன் சந்தி யாழ்)
A/ L தொழில்நுட்பப்பிரிவு
SFT - A/L - 2018 - நீர் நிலையியல்
-A/L - 2019 - வேலை, வலு சக்தி
A/ L 2020 Dayclasses ஆரம்பமாகிவிட்டன.
சனி, ஞாயிறு - 2.30 - 4.00
திங்கள், புதன் - 3.30 - 5.00
T. P : 077 017 5346
(CS 13024/15)

விசேட கருத்தரங்கு
சட்டமானி (LLB)
(பிரதி ஞாயிறு - 9 - 4 pm)
திட்டமிடல்
SLPS (open)
(பிரதி ஞாயிறு 9 - 2 pm)
வழமையான ஆசிரியர் குழாம்
நாவலர்
கல்வி நிலையம் ஆனைப்பந்தி, யாழ்.நகர்.
T. P : 077 4696 695

வேலை வாய்ப்பு

சேவை நிறுவனம் ஒன்றில் பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன.

யாழ்.நகரில் - Branch Billing Executive
நெல்லியடி - Branch Billing Executive
கிளிநொச்சி - Branch Billing Executive

வாகனசாரதி - (கனகரக வாகனம்) கொழும்பு - யாழ்ப்பாணம்

தொடர்புகளுக்கு - 077 069 8816, 076 840 4112
நேர்முகப் பரீட்சை யாழ்.நகரில் இடம்பெறும்.

(CS 15701/15)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.01.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.